Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
செப். 26 - ஒக். 02, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1033



வழங்கிய வாக்குறுதிகளை கூட்டமைப்பு நிறைவேற்றினால் நாம் வரவேற்போம்...

அமைச்சர் டக்ளஸ்

# வடக்கு மாகாண சபையும் தமிழ் மக்களும்

# உண்மையில் வெற்றி யாருக்கு?

இன்னொருவர் பார்வையில்...

## கொசோவோ உருவான கதையின் இரு பக்கங்கள்!



சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

ஆன்மீகம்

## ௐ நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரம்

நமசிவாய என்ற சொல்லிற்கு உரிய இலக்கணங்கள் எல்லாம் அமைந்ததும், எல்லா மந்திரங்களுக்கும் முதன்மையானதும், இறைக் கொள்கை அனைத்தையும் உள்ளடக்கியதுமாகிய மந்திரம் ஐந்தெழுத்து ஆகும். நமசிவய எனும் ஐந்தெழுத்தில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும். அதன் விவரம் வருமாறு:

ந - நடப்பு, ம - மறைப்பு, சி - சிறப்பு, வ - வனப்பு, ய - யாப்பு.

பஞ்சாட்சரம் (ஐந்து அட்சரம்) எனும் வடமொழிச் சொல் நமது ஐந்தெழுத்து எனும் தமிழ்ச்சொல்லிற்கு ஒரு மொழிபெயர்ப்பே. அவ்வளவுதான். எப்படி

1. வடமொழியாளர்கள் சொல்வது நமஹற்சிவாய. இதில் ந-1, ம-2, ஹ்-3, சி-4, வா-5, ய-6 என்று ஆறு எழுத்துக்கள் உள்ளன. இதை எப்படி அவர்களால் பஞ்சாட்சரம், அதாவது ஐந்தெழுத்து என்று சொல்லமுடியும்?

2. நமஹற்சிவாய எனும் வடமொழிச் சொல் சிவனுக்கு வணக்கம் என்று பொருளில்தான் சொல்லப்படுகிறது. நமது தமிழ் ஐந்தெழுத்து இதை சிவனுக்கு வணக்கம் என்ற பொருளில் சொல்லுவதில்லை. மேலும் 'சிவனுக்கு வணக்கம்' என்பது ஒரு வாக்கியமே தவிர ஐந்தெழுத்தாக (அதாவது பஞ்சாட்சரம் ஆக) முடியாது.

இந்த ஐந்தெழுத்து முதல் மந்திரம் பொதுவானது. எல்லாச் சமயங்களுக்கும் பொருந்துவது. இதைத் தமிழில் ஆக்கியிருப்பதால் தமிழ் மந்திரம் என்றும், இதனை உலகுக்கெல்லாம் பொதுவாக உருவாக்கிய பண்டைய தமிழர்களின் பெருமையையும் ஒருங்கே காணமுடிகிறது.

## புதியதும் பழையதும்

பழமையும் புதுமையும் பக்குவமாகப் பின்னிப் பிணைந்து செல்லும்போது அதன் சிறப்பே தனியானது. முதுமையின் விவேகமும் இளமையின் வேகமும் இணைந்து இயங்கினால், அதன் பலனுக்கு ஈடேது? விருந்தும் மருந்தும் விகிதாச்சாரம் பாராமல் இருந்தால் நல்ல சுகத்திற்கு குறையில்லை.

இந்த நிலை அவ்வளவு எளிதானதல்ல. அந்தந்த நிலைபற்றிய அறிவு, அனுபவம், ஆற்றல் வேண்டும். இணைந்து இணக்கமாக இயங்கும் செயலாக்கம் வேண்டும்.

இவை இல்லாதபோது புதிய திராட்சை மதுவை பழைய தோற்பைகளில் ஊற்றி வைத்த கதைதான். பழைய ஆடையில் புதிய துணியை சேர்த்து தைத்த ஆடையின் கதிதான். மணமகன் மணக்கோலத்தில் இருக்கும்போது நோன்பு இருப்பதும் இதற்குச் சமமே. திருமண வீட்டில் முகாரி ராகம் வாசித்தால் யார் பொறுப்பார்?. ஆள், இடம், சூழ்நிலை பற்றிய அறிவு, அனுபவம் வேண்டும். வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒன்றல்லவா! கடைப்பிடித்து பாருங்கள். இயேசு சொன்னது சரி எனப்படும்.

## மாநபி கூறிய மனிதர்கள்

இங்கே ஒரு சமூகச் சூலை எடுத்துக்கொள்வோம். ஒரு ஆணும், பெண்ணும் நாளும் நாம் பேணவேண்டிய நற்பண்புகளுக்கு மாறாக ஒருவரோடு ஒருவர் பழகிவருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் சோதனைகளும் இவர்களுக்குத் தொடர்கிறது. இதற்கு இறைமறை போதனைகள் என்ன கூறுகிறது.

அண்ணல் நபி அவர்கள் கூறுகிறார்கள். மறுமை நாளில் உங்களில் என்னோடு நெருக்கமாகவும் எனது அன்புக்கு பாத்திரமானவராகவும் இருப்பவர் நற்பண்பு உடையவரே.

மறுமைநாளில் எனக்கு மிக வெறுப்பானவர்களும் என்னைவிட்டு மிகத்தூரமாக இருப்பவர்களும் யாரெனில் வீணாக கதையளந்து கொண்டிருப்பவர்களும் தன்னுடைய பேச்சை அடுத்தவர் கேட்கவேண்டும் என்பதற்காக தனது பேச்சுக்கு நயம் ஊட்டுபவர்களும் பெருமையடிப்பவர்களும்தான் மாநபி கூறிய மனிதர்கள்.

எம்.சீ.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1030



### நம்பிக்கை

பாராட்டுக்குரியது

கூடியிருந்த
உறவுகளெல்லாம்
அழிந்து போனது!
கூடிவாழ்ந்த
வீடு மனையும்
அழிந்து போனது!
சொந்த நிலமும்
இழந்து போனது!
நம்பிக்கை மட்டும்
இழக்கவில்லை
என்றோ ஒரு நாள்
எமக்காகவும்
பொழுது புலருமென்று!

ந.வர்ஷினி,
மட்டக்களப்பு

## கவிதைப் போட்டி இல 1033



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04. 10. 2013

கவிதைப் போட்டி இல. 1033 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### இக்கட்டை!

எல்லா மழிஞ்சு எஞ்சியதோ
இன்னைக்கோ
நாளைக்கோ
ஈசனிடம் போய்ச் சேரும்
இக்கட்டை!

பாண்டியூர், பொன்.நவநீதன்.

### தரைமட்டம்

கட்டம் போட்டு
திட்டம் கொன்று
கட்டினேன் ஒரு கூடு
சட்டம் போட்டு
எத்தனையோ அரசர்களாலேயே
தவிடு பொடியாக்க முடியவில்லை
தாகம் தீர்க்கும் தண்ணீராலே
தரைமாற்ற மானதே
எங்கள் கூடு.

சி.ராஜா, பேராதனை.

### தேர்தல்

எல்லாம் இழந்து
உணர்வு மட்டும் மீதம்
உறவுமில்லை
அகதிகளுக்கு
அரசியல் தேவையா?

எஸ்.திலகவதி, பதுளை.

### பூர்வீக சொத்து

படுபாவிகள்
போட்ட குண்டுகளால்
எம் இல்லங்கள்
முற்றாகச்
சிதைந்து போனாலும்
என் பூர்வீக சொத்தாக
மிஞ்சியது என் தந்தையின்
புகைப்படமும் அவர்
சேகரித்த கம்பளங்களுமே.

அ.சந்தியாகோ, கண்டி.

### உச்சம்

யுத்தம் தந்த மிச்சமோ! - இல்லை
இயற்கை கொடூரத்தின்
கொடுமையோ?!
மிச்சமாய் இருக்கிற படுக்கையோடு
பரதேசியாய் அலைந்தாலும்
இதயம் சுமக்கும் உன்னவன்
படம் மட்டும் விலகவில்லை -
இதுதான்
உங்கள் காதலின் உச்சம்...

எம்.சாம்பவி, நுவரெலியா.

## உங்கள் பக்கம்

### பகல் கொள்ளை

வடபகுதியில்பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு உதவிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வீதிப் புனரமைப்பு, புகையிரதப் பாதை அமைப்பு போன்றவற்றில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் புனரமைப்பு வேலைகளுக்காக வழங்கப்படுகின்ற சீமெந்து, டீசல், கல், மணல் போன்ற மூலப் பொருட்களை வெளியாருக்கு விற்பனைசெய்து அதிலிருந்து கிடைக்கின்ற பணத்தை தங்கள் சட்டைப் பைகளுக்குள் போட்டு, கொள்ளையடிக்கின்றனர்.

இது அப்பட்டமான துஷ்பிரயோகமாக இருக்கின்றது. ஆனால், இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், இந்தப் பகல் கொள்ளை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இது இந்த நாட்டு மக்களுக்காக உதவிகளை மேற்கொள்கின்ற இந்தியா - சீனா போன்ற நாடுகளுக்கு நம்மவர்கள் செய்கின்ற நம்பிக்கைத் துரோகமாகும். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆர்.சாலமன்,
கொடிகாமம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




## வாசகர் சாலை

### சிறப்பு!

தனக்கென சிறப்பான இடத்தைப் பிடித்திருக்கும் தித்திக்கும் தினமுரசே! உலக மாறுதலுக்கு ஏற்ப மாற்றங்கள் நிச்சயம் தேவையான ஒன்றுதான். அந்தவகையில் முரசில் நிறையவே மாற்றங்கள் ஏற்படவேண்டும். கட்டுரைகளின் பங்குதான் வீதத்தில் அதிகமாக இருக்கிறது. சுவாரசியங்கள் குறைவு, சுவையும் இல்லை. சூடும் அதிகமாக இல்லை.

எஸ்.சாரங்கன், புத்தளம்.

### பக்கபலம்

வெளிநாட்டுக் கட்டுரைகளை வாராவாரம் அம்சமாகவும், அழகாகவும், சிறப்புறத் தரும் வேணு கிருஷ்ணாவுக்கு எனது மனப்பூர்வமான பாராட்டுக்கள். இக்கட்டுரைகளை வாசிப்பதில் எனக்கு அலாதிப்பிரியம்.

அதுவும் வெளிநாட்டு நடப்புக்களை அறிந்துகொள்ள நிறையவே ஆர்வம். வேணுவின் கட்டுரைகள் எனது அறிவுக்கு பக்கபலமாக இருக்கிறது.

த.அஷ்மிகா, அநுராதபுரம்.

### பாராட்டுக்கள்!

அன்பின் முரசுக்கு,

முரசு 1032 இல் வெளியாகிய 'தலைவிதியை தீர்மானிக்கும் புள்ளடி யாருக்கு?' என்ற தலைப்பில் சிவனின் ஆய்வுக் கட்டுரை சிறப்பாக இருந்தது.

எனினும் வன்னி மாவட்டம் என்ற தலைப்பில் கிளிநொச்சி வாக்காளர்களையும் ஆய்வுக் குட்படுத்தி இருந்தமை கொஞ்சம் உறுத்தலை ஏற்படுத்தியிருந்தது.

கிளிநொச்சி மாவட்டத் யாழ். தேர்தல் மாவட்டத்திற்குள் அடங்கியிருப்பதனால் கட்டுரை தொடர்பில் எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை கட்டுரையாசிரியரிடம் தொடர்புகொண்டு கேட்டிருந்தேன்.

கிளிநொச்சி மாவட்டம் யாழ். தேர்தல் மாவட்டத்திற்குள் அடங்கியிருக்கின்ற போதிலும் மக்களின் வாக்களிக்கும் தீர்மானங்களில் குறித்த விடயம் தாக்கம் செலுத்தாது என்பதையும் மக்களுடைய எதிர்பார்ப்புகள், உணர்வுகள், தீர்மானங்கள் என்று வரும்போது கிளிநொச்சி மக்களும் வன்னி மக்களின் உணர்வுகளை ஒத்தவர்களாக இருக்கின்றார்கள் என்றவகையில் வன்னி மக்கள் என்ற பொதுப்பதத்தின் கீழ் கிளிநொச்சியையும் சேர்த்துக்கொண்டதாக கட்டுரையாசிரியரினால் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது.

எமது உணர்வுகளைப் புரிந்துகொண்டு தெளிவுபடுத்திய தினமுரசுக்கும், அதன் ஆசிரியர்பீடத்திற்கும் மனமார்ந்த பாராட்டுக்கள்.

ரமேஸ், யாழ்ப்பாணம்.

## வழங்கிய வாக்குறுதிகளை



# கூட்டமைப்பு நிறைவேற்றினால் நாம் வரவேற்போம்

**வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்பேசும் மக்களிடம் இருந்துபெற்ற ஆணையை ஏற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வரவேண்டுமென்றும், அவ்வாறு நிறைவேற்றினால் அதை நாம் எமது மக்களின் நிரந்தர மகிழ்ச்சிக்காக வரவேற்கத் தயாராக இருப்பதாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நடைபெற்றுமுடிந்த வடக்கு மாகாண சபை தேர்தலில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பின்னடைவையடுத்து, அமைச்சர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்க முன்வந்திருப்பதும், நீதியானதும், நேர்மையானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைத்தமையும் வரவேற்கத்தக்க விடயம். அதற்காக நாம் வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இதேவேளை, எமது வழிமுறைகளை ஏற்று எமக்கு வாக்களித்த மக்களுக்கும் விசேடமாக நாம் நன்றி கூறுகின்றோம்.

மக்கள் எமக்கு ஆணைவழங்கினால் எமது நடைமுறைசார்ந்த வழிமுறைமூலம் மாகாண சபை அதிகாரத்தை பாதுகாத்து மேலும் பலப்படுத்துவதன் ஊடாக தமிழ்பேசும் மக்களின் அரசியலுரிமை, அபிவிருத்தி, படையினரை படிப்படியாக வெளியேற்றுதல், மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வியல் உரிமைகள் என நாம் சகலதையும் பெற்றுத் தருவோம் என மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம்.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமக்கு மக்கள் ஆணைவழங்கினால் இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றி மக்களை மீள்குடியேற்றம் செய்வதாகவும், அபிவிருத்தி மற்றும் அரசியலுரிமைகளை பெற்றுத்தருவதாகவும் மக்களுக்கு வழமைபோல் வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

இந்நிலையில், பெரும்பான்மையான தமிழ்பேசும் மக்களின் வாக்குகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே ஆணையாக பெற்றிருந்தனர். ஆகவே, கடந்தகாலங்களில் மக்களிடமிருந்து ஆணைகளைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியது போலன்றி வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை விரைவாக நிறைவேற்ற முன்வரவேண்டும்.

அவ்வாறு நிறைவேற்றும் பட்சத்தில் நாம் அதை எமது மக்களுக்காக அகமகிழ்வுடன் வரவேற்போம். இதனூடாகவே தமிழ்பேசும் மக்கள் தோற்றுப் போனவர்களல்ல என்ற நிலையை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் உருவாக்க முன்வர வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

## ஏமாற்றத்தில் கடுப்பானார் ஆனந்த சங்கரி

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வெற்றி பெற்றதை தொடர்ந்து, 2 ஆசனங்கள் போனஸாகக் கிடைத்தது. கிடைக்கப்பெற்ற இந்த ஆசனங்களில் ஒன்றை, முஸ்லீம் சகோதரர் ஒருவருக்கும், மற்றையதை பெண் ஒருவருக்கும் கொடுத்துள்ளது தமிழ் தேசிய கூட்டமைப்பு. இச்செயல் படுபிழை என்று கூறியுள்ளார் ஆனந்த சங்கரி.

நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் ஆனந்த சங்கரி போட்டியிட்டு படுதோல்வியை தழுவியுள்ள நிலையில் போனஸ் ஆசனங்கள் 2 இருக்கிறது. அதில் ஒன்றையாவது தமிழ் தேசிய கூட்டமைப்பு தனக்குத் தரும் என்று அவர் நம்பியிருந்துள்ளார். ஆனால் அந்தக் கனவிலும் தற்போது மண் விழுந்துள்ளது. எனவே, கூட்டமைப்பு தலைவர்கள்மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றார் ஆனந்தசங்கரி.

## குடு ராணி கைது

அங்குலான குடு ராணியையும் மற்றொரு பெண்ணையும் 4000 பைக்கற் போதைப்பொருட்களுடன் கைதுசெய்துள்ளதாக அங்குலான பொலிஸார் தெரிவித்தனர். இந்த போதைப்பொருட்களின் பெறுமதி 3 மில்லியன் ரூபாவிலும் அதிகமானது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்திய அதிகாரிகள் மட்டு விஜயம்

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்களை மட்டக்களப்பு விமான நிலையத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வரவேற்றார். மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகளுடன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலந்துரையாடினார். இதன்போது, நினைவுச்சின்னமொன்றை அபிவிருத்திப் பங்களிப்பு நிர்வாகத் துக்கான விசேட செயலாளர் பி.எஸ்.ராகவனிடம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கையளித்தார். ஸ்ரீ மேலும், றூகம் கிராமத்திற்கு சென்ற இந்தக் குழுவினர் அந்தப் பகுதி மக்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

## இளவயது கருத்தரிப்பை குறைக்க விழிப்புணர்வு வேலைத்திட்டம்

18 வயதுக்கு குறைந்த பெண்கள் கருத்தரிப்பதை குறைப்பதற்கான விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் காத்தான்குடிப் பிரதேச செயலக மண்டபத்தில் இது தொடர்பான செயலமர்வு நடைபெற்றது.

இதன்போது 18 வயதுக்கு குறைந்த பெண்கள் கருத்தரிப்பதினால் ஏற்படும் பாதிப்புக்கள் உள்ளிட்டவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.நசிர்தீன், காத்தான்குடி கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஐ.சுபைர், காத்தான்குடி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எச்.பி.எம்.சில்மி தாஜுதீன், எம.ச்.யு. நஸ்மினா பேகம், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், இளவயதுப் பெண்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அடித்து ஆடுவார் விக்னேஸ்வரன்!

**இன்னொருவர் பார்வையில்**

இலங்கை வடக்கு மாகாணத்தில் தேர்தல் முடிந்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரியவெற்றியை பெற்றுள்ளது. அக்கூட்டணியின் பிரதான வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாணத்தின் முதல்வராக போகிறார். அடுத்து என்ன?

**இனித்தான் இருக்கிறது திருவிழா!**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதுவரை மக்களுக்கு காட்டிய அரசியல்வாதிகளில் இருந்து விக்னேஸ்வரன் வித்தியாசமாக இருப்பது, கூட்டமைப்பு இதுவரை செய்துவந்த அரசியலில் இருந்து வேறுபட்டு இருக்கப்போகிறது. அதை இதுவரை காலமும் தமிழ் தேசிய அரசியலுக்கு பழக்கப்பட்டவர்களால் சகித்துக் கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. சகித்துக்கொள்வது நல்லது.

தேர்தலில் ஜெயித்து 24 மணிநேரம் முடிவதற்கு முன்னரே விக்னேஸ்வரன், "இலங்கை அரசுடன் இணக்கமான முறையில் செயற்பட்டு ஆட்சி செய்வோம்" என்றார். தமிழ்த் தேசிய அரசியலில் இது கெட்ட வார்த்தை!



"இலங்கை அரசுடன் இணக்கமாக செயற்பட்டு ஆட்சிசெய்வோம்" என்பது தான், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதையும்கூட. டக்ளஸ் தேவானந்தா கூறியதற்கு காச்மூச் என்று கூச்சலிட்டவர்களின் காதுகளில், இப்போது வந்து பாய்ந்திருக்கிறது, விக்னேஸ்வரனின் 'இணக்க அரசியல்' ஸ்டேட்மெண்ட்.

விக்னேஸ்வரனின் 'இணக்க அரசியல்' பாணியை, இதுவரை காலமும் தமிழ் தேசிய அரசியலுக்கு பழக்கப்பட்டவர்களால் சகித்துக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், சகித்துக்கொள்வது நல்லது.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளை யுத்தத்தில் அழித்ததற்காக இலங்கை அரசு நடத்திய வெற்றிவிழா கொண்டாட்டங்களில் அரசு வி.ஐ.பி.களுடன் கலந்துகொண்டவர், விக்னேஸ்வரன்.

"புலிகளை அழித்ததை வெற்றி விழாவாக கொண்டாடுகிறார்களே" என தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் வெளிநாட்டு தமிழர்களின் மேடைகளில் கண்கள் சிவக்க முழங்கிக்கொண்டிருந்த நேரத்தில், விக்னேஸ்வரன் அரசியலுக்கே வரவில்லை.

அப்போது 'கண் சிவந்த' தமிழ் எம்.பி.க்கள் இப்போது விக்னேஸ்வரனுக்கு 'மண் சிவக்க' சிவப்பு கம்பள வரவேற்பு கொடுப்பதில் பிசி.

இதை எத்தனை பேர் கவனித்தார்கள் என்று தெரியவில்லை. இதையெல்லாம், இதுவரை காலமும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு பழக்கப்பட்டவர்களால் சகித்துக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், சகித்துக் கொள்வது நல்லது.

கடந்த ஆண்டு, 'இலங்கை கல்லூரி ஒன்றின் கால்பந்து டீம வீரர்களுக்கு தமிழகத்தில் விளையாட அனுமதி இல்லை. அவர்களை உடனே வெளியேற்ற வேண்டும்' என்று உத்தரவிட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதா, அவர்களுக்கு விளையாட அனுமதி அளித்த நேரு விளையாட்டரங்க அதிகாரியை சஸ்பெண்ட் செய்தார்.

அதற்கு, என்ன காரணமாம்? இலங்கை கல்லூரி கால்பந்து டீம் வீரர்கள் துப்பாக்கி எடுத்து தமிழர்களை சுட்டுக்கொன்றார்களா? அல்லது தமிழக அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா?

இல்லை! இலங்கையின் சிங்கள பகுதியில் உள்ள கல்லூரி ஒன்றில் இருந்துவந்த கால்பந்து அணியாம், அது!

ஆமா சார்.. புரட்சித் தலைவி புறமுதுகோட வைத்த இலங்கை மாணவர் கால்பந்து அணி, எந்தக் கல்லூரியை சேர்ந்த அணி என்பது எத்தனை பேருக்கு தெரியும்? கொழும்பு றோயல கல்லூரி! "நம்ம விக்னேஸ்வரன் கல்விபயின்ற, அதே றோயல் கல்லூரி!"

(தொடர்ச்சி 07 ஆம் பக்கம்)

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## தேர்தல் முடிவு வெற்றியா? தோல்வியா?

வடக்கு மாகாண சபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றிருப்பது இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

வடக்கு மாகாணம் திறந்தவெளிச் சிறையாக உள்ளதெனவும், அனைத்து விடயங்களிலும் இராணுவத் தலையீடுகள் அதிகரித்துள்ளதாகவும், அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எந்த அதிகாரங்களையும் வழங்கப் போவதில்லை என்றும், இதுவரை கூறிவந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பரப்புரைகளை இந்தத் தேர்தல் முடிவுகள் பொய்யாக்கியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் 62வது பொதுச்சபை அமர்வில் கலந்து கொள்ளச் சென்றிருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றும்போது, இலங்கைக்கு எதிரான விமர்சனங்களைக் கொண்டிருப்பவர்கள் கூறுவதுபோல் அங்கு ஜனநாயக மறுப்புக்களுக்கோ, உரிமை மறுப்புக்களுக்கோ தாம் இடமளிக்கவில்லை என்று கூறுவதற்கு நல்லதொரு வாய்ப்பைத் தமிழ் மக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வடக்கு மாகாணம், வடமேல் மாகாணம், மத்திய மாகாணங்களுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. அங்கு சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை அதிருப்தி கொள்ளச் செய்யவும், இனவாதத்தை உயிரூட்டவுமான பரப்புரைகளை மேற்கொண்டார்கள்.

அதேவேளை, தமிழ் மாகாணம் ஒன்று அமைந்துவிட்டால், அது தனிநாட்டுக்கு ஒப்பாகிவிடும் என்றும், அவ்வாறானதொரு சூழலை எதிர்கொள்ள சிங்கள மக்கள் தயாராக வேண்டும் என்றும் கூறினார்கள். அவை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு உதவியிருக்கின்றது.

வடமேல் மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் இலங்கை அரசுக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது. எதிர்க்கட்சிகளால் நின்றுபிடிக்க முடியவில்லை. அரசாங்கம் எதிர்பார்த்த வெற்றி அங்கு உறுதிசெய்துள்ளது.

வடமாகாணத்தின் வாக்குகளை நம்பியோ, வடமாகாண மக்களின் ஆதரவை நம்பியோ இலங்கை அரசுகள் ஒருபோதும் இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில், வடக்கு மாகாண சபை குறித்து இலங்கை அரசு அலட்டிக் கொள்ளப் போவதில்லை. வடக்கு மாகாண சபையைப் பொறுப்பெடுத்தவர்களே அதை தமிழ் மக்களுக்குப் பிரயோசனமான நிர்வாகக் கட்டமைப்பாக மாற்றவேண்டும். எப்படி வடக்கின் வாக்குகளை நம்பி அரசு இல்லையோ, அதுபோலவே வடக்கு மாகாண சபையின் எதிர்காலத்தைப் பற்றியும் அரசு கவலை கொள்ளப் போவதில்லை என்பது எவருக்கும் புரிந்துகொள்ளக் கூடியதாகும்.

வடக்கில் எது நடந்தாலும் அதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் வடக்கு மக்களும், அவர்கள் தெரிவு செய்த தலைமைகளுமே. வெற்றியே விரோதியாக மாறப்போகும் விநோதங்கள் இனி வடக்கில் அரங்கேறுமோ?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# வடக்கு மாகாண சபையும் தமிழ் மக்களும்

இலங்கை அரசாங்கம் உட்பட இலங்கையின் அரசியல் நிலவரங்களைத் தெரிந்திருந்த அனைவருக்கும் வடக்கு மாகாண சபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பே வெற்றிகொள்ளும் என்பது எதிர்பார்க்கப்பட்ட விடயம்.

ஆனால், அரசு கணிசமான வெற்றிகளுடன் எதிர்க்கட்சியாக வடக்கு மாகாண சபையில் இருக்கும் என்பதும் அதே எதிர்பார்ப்பாகும்.

எவரும் எதிர்பார்க்காத விதமாக அல்லது அனைவரின் புள்ளிவிபரக் கணக்குகளையும் பொய்யாக்கி, 38 ஆசனங்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களை வெற்றி பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு 07 ஆசனங்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரு ஆசனமும் கிடைக்கப் பெற்றுள்ளது. அரசுக்குக் கிடைத்த 07 ஆசனங்களில் 02 ஆசனங்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே கடுமையான போட்டி இருக்கும் என்றும், யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்படும் 16 ஆசனங்களில் இரண்டு கட்சிகளும் தலா எட்டுக்கும் ஆறுக்கும் இடையிலான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் என்றும் பல ஆரூடங்கள் கூறப்பட்டன. அந்த ஆரூடங்களையும் தேர்தல் முடிவுகள் பொய்யாக்கிவிட்டன.

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்குத் தலா ஒவ்வொரு ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தேர்தல் முடிவுகளில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆரம்பத்தில் இருந்தே வடக்கு மாகாண சபைத் தேர்தல் சுதந்திரமாக நடைபெறக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்றும், அரசாங்கம் தேர்தல் மோசடிகளைப் புரிவதற்குத் தயாராகி வருவதாகவும் கூறியிருந்தனர்.

கண்காணிப்பு அமைப்புக்கள் தமது அவதானிப்பில் பாரிய தேர்தல் வன்முறைகள் இங்கு இடம்பெறாத போதும், அதிகரித்த இராணுவத் தலையீடுகள் இருப்பதாகக் குற்றஞ்சுமத்திவந்துள்ளன.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களும், வடக்கிற்கு வருகை தந்த சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கோபாலசுவாமியும், வடக்கில் சுதந்திரமான தேர்தல்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதை ஏற்றுக்கொண்டதோடு, நியாயமான தேர்தலைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மாகாண சபைத் தேர்தலை அரசு மோசடிகளோடு நடத்தி முடிக்கப்போகின்றது என்றும், அல்லது இனவாதக் கருத்துக்களுக்கு எடுபட்டு தேர்தலைத் தடுத்துவிடப் போகின்றது என்றும் கூறிவந்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண சபைத் தேர்தல் 23 வருடங்களுக்குப் பிறகு தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பு என்று கூறியதோடு, தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது ஒத்துழைப்பினை வழங்கவண்டும் என்று கூறியிருந்தார்.

அரசின்மீது குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்தும் சுமத்தி வந்த கூட்டமைப்பு, மறுபுறத்தில், புலம்பெயர்ந்து வாழும் புலி ஆதரவாளர்களுடன் நடாத்திய கலந்துரையாடல்களில் புலத்திலுள்ள தமது உறவுகளுக்கு தமக்கே ஆதரவு வழங்குமாறு வற்புறுத்தும்படியும், மதம் சார்ந்த அமைப்புக்கள் ஊடாகவும் கடுமையான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் அதிக பிரயத்தனம் எடுத்திருந்தனர்.

அதன்படி, குறிப்பாக கத்தோலிக்க தேவாலயங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறு பிரசங்கங்களின் போது வலியுறுத்தப்பட்டுள்ளது. பிரசங்கங்கள் நடுவே 'வெற்றிலையைச் சப்பித் துப்பலாம், வீடு இருந்தால்தான் வாழலாம். என்றும், "தமிழ் மக்கள் உரிமையுடன் வாழ்வதற்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது என்றும் அதில் தமிழ் மக்கள் உணர்வுடன் முடிவெடுக்க வேண்டும்" என்றும் கூறப்பட்டுள்ளது.

வடக்கிலுள்ள பெரும்பான்மையான அரச அதிகாரிகள், அரசு எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்திருந்த தோடு, வாக்களிப்பின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்காக வாக்குச் சேகரித்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

அதாவது, "கோழி மேய்ப்பது என்றாலும் அது அரச உத்தியோகமாக இருக்கவேண்டும்" என்று விரும்பும் வடமாகாண அரச உத்தியோகத்தர்கள், வாக்களிப்பின்போது அரசின் எதிராளிகளாகச் செயற்படுவதை தொடர்ந்தும் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுகின்றன.

இதுதவிரவும், தேர்தல் நியமனத் தாக்கலின் போதே வெளியில் தெரியவந்த எழிலனின் மனைவி அனந்திக்கு 87 ஆயிரம் விருப்பு வாக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதானது தமிழ் மக்கள் அரசியல் சேவகர்கள் என்றோ, மக்கள் சேவையில் அனுபவம் மிக்கவர்கள் என்றோ, அல்லது சரியான வழியைக் காட்டக்கூடிய தலைவர்கள் என்றோ வாக்களிப்பின் போது சிந்திக்கவில்லை. மாறாக, உணர்ச்சிக்கு எடுபட்டவர்களாக அல்லது வரட்டுத்தனமான எதிர்ப்பைக் காட்டுகின்றவர்களாகவே வாக்களித்துள்ளதை உணர்த்துகின்றது.

அதேவேளை, புலிகளின் போர்வையோடு வருகின்றவர்களுக்குத் தமிழ் மக்கள் இன்னும் இடம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கைக்கும் சான்றாக பார்க்கமுடிகின்றது. ஆனால், மறுபக்கத்தில் அனந்தியின் வெற்றிக்கு புனர்வாழ்வு பெற்ற புலிகள் பெரும் பணியாற்றியிருக்கிறார்களோ என்ற சந்தேகத்தையும் தென்னிலங்கையில் ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் காலப் பகுதியில் மட்டும் வடக்கில் அறிமுகம் செய்யப்பட்ட விக்னேஸ்வரனுக்கு ஒரு லட்சத்து 32 ஆயிரம் விருப்பு வாக்குகள் கிடைத்திருப்பதானது, தமிழ் மக்கள் கூட்டமைப்பு மீது இவ்வளவு காலமும் இல்லாத பெரும் சுமையைத் தலையில் தூக்கிவைத்துவிட்டார்கள் என்பதை உணர்த்துகின்றது.

இதுதவிர, கூட்டமைப்பின் பட்டியலில் ஏற்கனவே அமைச்சுப் பொறுப்பை எழுதப்படாத ஒப்பந்தத்தின் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்டு களத்தில் இறக்கி விடப்பட்டவர் என்று கருதப்பட்ட சுரேஷ் பிரேமச்சந்திரனின் தம்பியார் சர்வேஸ்வரன், இந்தத் தேர்தலில் வெற்றிபெறாமல் விட்டது பலருக்கும் பெரும் ஆச்சரியம்.

இந்தத் தேர்தல் முடிவுகளின் ஊடாக தமிழ் மக்கள் வெளிப்படுத்தியிருக்கும் செய்தி எதுவென மிக நிதானமாகச் சிந்திக்கவேண்டியதும் அவசியமாகும். ஏனென்றால், தமிழ் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு இல்லை என்றும், தமிழ் மக்களுக்கு, புலிகளுக்குப் பின்னான அரசியல் நிலைமைகள் புரியவில்லை என்றும் கூறிக் கொண்டிருந்தவர்களுக்கும் சரியான பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

அது அரசாங்கத்திற்கு எதிரானதாக எடுத்துக்கொள்ளப்பட்டாலும், அல்லது நடைபெறுகின்ற அபிவிருத்திகள் தடைப்பட்டாலும் அதையிட்டு கவலை கொள்ளப் போவதில்லை என்பதே செய்தியாகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்தவர்கள் அவர்கள் மீதான காதலில் வாக்களிக்கவில்லை. அவர்கள் கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால், அரசாங்கத்திற்கு எதிரான தங்களது உணர்வுகளை பதிவு செய்வதற்கு வேறு தெரிவு இல்லாத நிலையில், கூட்டமைப்பிற்கு வாக்களித்திருப்பதையும் உணர முடிகிறது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை நான்கு இலட்சத்து 23 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதியானவர்களாக உள்ளபோதும், சுமார் மூன்று இலட்சம் பேரே வாக்களித்துள்ளனர். அவர்களில் இரண்டு இலட்சத்து 60 ஆயிரம் பேர் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்திருந்தனர். 36 ஆயிரம் பேர் அரசு சார்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்து உள்ளனர். அதுவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நிரந்தர வாக்கு வங்கியாகும்.

இவற்றில் சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அவர்களில், 25 ஆயிரம் பேர் வழமைபோல் வாக்களிக்காதவர்களாக இருக்கலாம். ஆனால், அந்த ஒரு இலட்சம் பேர் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் ஆதரிக்கவில்லை. அதேபோல், அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் ஆதரிக்கவில்லை. அவர்கள் இரண்டிற்கும் இடைப்பட்ட வேறொரு எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர்.

அவர்களை உள்வாங்குகின்ற வேலைத்திட்டம் இன்னும் எவராலும் முன்வைக்கப்படவில்லை. அந்த இடைவெளியைப் புரிந்துகொண்டு எதிர்காலத் திட்டங்களை வகுக்கின்றவர்களுக்கு அந்த மக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்று நம்பலாம்.

இதுவரை காலமும் வடக்கு மாகாண சபை ஆற்றவேண்டிய பணிகளையும், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் கணிசமான தலையீட்டைக் கொண்டிருந்தது.

எதிர்காலத்தில் இந்த நிலைமைகளில் மாற்றங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். பெரும்பான்மையான திட்டங்களைச் செய்து முடிக்கவேண்டிய பொறுப்பு வடக்கு மாகாண சபைக்கே இருக்கும். ஒரு மாகாண சபையில் முதலமைச்சருக்கும், மத்திய அரசின் அமைச்சர் ஒருவருக்கும் அந்த மாகாணத்தின் அத்தனை பணிகளையும் முன்னெடுக்கின்ற பொறுப்பு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இருவரும் இணைத் தலைமை தாங்கிச் செயற்படவேண்டும். அதேபோல் மாகாணத்தின் நான்கு அமைச்சர்களும், மத்திய அரசின் பிரதியமைச்சர்களும் ஒரே அந்தஸ்துமிக்கவர்களாக பணிகளைச் செய்யமுடியும். இதில் ஒரே கட்சி சேர்ந்தவர்கள் இருப்பார்களேயானால், நிலைமை சுமூகமாக இருக்கும். வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தால் சில பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இதற்கிடையே, மாகாணத்தின் ஆளுநர் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதி என்றவகையில், மாகாண அமைச்சர்களின் செயலாளர்கள் அவரின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பார்கள். ஆகையால், அந்த அமைச்சர்கள் திட்டங்களை வகுத்தாலும், அத்திட்டங்களைப் பரிசீலிக்கக் கூடியவர் ஆளுநராகவே இருப்பார். செயலாளர்கள் பெரும்பாலும் மாகாண ஆளுநரின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே பணியாற்றுவார்கள்.

இவ்வாறான முரண்பாடுகளை எதிர்கொண்டு வடக்கு மாகாண சபையை நிர்வகிப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குப் பெரும் சவாலாக இருக்கும். இதில் ஆறுதலான விடயம் என்னவென்றால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்த மாகாணத்தின் முக்கிய அமைச்சர் என்பதும், அவரது கட்சி உறுப்பினர்கள் மாகாண சபையில் இருப்பதும்.

வடக்கு மாகாண சபையின் நியாயமான செயற்பாடுகளுக்கு ஆதரவாக இருக்குமே தவிர, எல்லாவற்றையும் கண்ணை மூடிக் கொண்டு எதிர்க்கும் எதிரிக் கட்சியின் செயற்பாடுகளைப் போல் இருக்காது என்பதையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தேர்தலுக்குப் பின்னான தனது அறிக்கையில் மிகத் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

எனவே, வடக்கு மாகாண சபையை அரசியல்ரீதியாகப் பலப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்குமாக இருந்தால் அதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் தமது முழு ஆதரவையும் வழங்குவார்கள் என்று நம்பலாம்.

அதைவிடுத்து, மாகாண சபை அதிகாரங்களைக் கொண்டு சாதிக்கமுடியாத விடயங்களை அரசியல் நோக்கங்களுக்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்குமேயானால், அதை அம்பலப்படுத்துவதற்கும் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பின்நிற்காது என்றும் கூறியுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபை குறித்த எதிர்காலத் திட்டங்களையோ, அதைத் திறன்பட நடத்தும் உறுதியையோ ஒருபோதும் கொண்டிருக்கவில்லை என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், துரதிர்ஷ்டவசமாகப் பெரும் வெற்றியைப் பெற்றுக்கொண்ட பிறகு அடுத்து என்ன செய்யப் போகின்றார்கள் என்பது குறித்து இன்னும் முடிவுசெய்ததாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்லாமல், மாகாண சபையை கைதடியிலுள்ள அரச கட்டடத் தொகுதியில் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் இருந்து கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. அதைவிடவும் ஆளுநருக்குக் கீழ் இருக்கும் நிர்வாகங்களை மாகாண சபையை நிறுவி, அதற்குக் கீழாக ஒவ்வொன்றாக ஒழுங்குபடுத்திக் கொள்வதில் சவால்களும் உண்டு.

இவற்றுக்கெல்லாம் மேலாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் இலகுவில் மறக்கக் கூடியதல்ல. அதில், சர்வதேச சமூகத்தை வடக்கிற்கு வருகை தரச் செய்வது, வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவது, வடக்கில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்ட பொதுமக்களின் நிலங்களை ஒரு அங்குலம்கூட விடாமல் மீள மக்களிடம் பெற்றுக்கொடுப்பது, வடக்குக் கிழக்கை இணைத்து ஒரு தனி மாகாணமாக்குவது, தற்போது இருக்கும் வடக்கு ஆளுநரை வடக்கில் இருந்து வெளியேற்றுவது போன்ற முக்கியத்துவம் மிக்க விடயங்களைக் கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் நிறைவேற்றிக் காட்ட வேண்டும்.

வெற்றியை இலகுவாகப் பெற்றுக்கொண்டார்கள். இனி அதை மக்களுக்காக எவ்வாறு பயன்படுத்தப் போகிறார்கள் என்பதை அனைவரும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். கூட்டமைப்பிற்கு வழங்கப்படுகின்ற மிகப்பெரும் வாய்ப்பாகும். இதில் கூட்டமைப்பு தமிழ் மக்களை வென்றெடுக்கும் வகையில் நடந்துகொள்ளாவிட்டால், இந்த உயரத்தில் இருந்து கூட்டமைப்பின் வீழ்ச்சி ஆரம்பமாகும்.

வாய்ச்சொல் வீரர்களை செயல் வீரர்களாகப் பார்க்கத் தமிழ் மக்கள் விரும்பியிருக்கிறார்கள். மாகாண சபையைச் சரியாக நடத்த முடியாதவர்கள், தன்னாட்சி பற்றிப் பேசினால், அது தமிழ் மக்களின் கடும் கோபத்தைக் கிளறிவிடுவதாகவே அமையும்.

-சிவன்-

# வீரத்தாயின்... அவலம்...



அம்மாவின் வசந்தமாளிகையையும் அள்ளிக்கொண்டு போய்விடுமோ என்ற கணக்கில் வெளியில் வெள்ளக்காடா யிருந்தது.

அம்மாவை மாதம் இருமுறை தொலை பேசியில் அழைத்து சுகம் விசாரிக்கும் மூத்தவளின் தோழி அழைத்திருந்தாள்.

அம்மா! என்ற அவளது அழைப்புக்கு முன்னம் "அம்மாச்சி சொல்லணை" என்று அவளை அடையாளம் கண்டுவிட்ட பெரு மையில் அம்மா அவளை அழைத்தாள்.

என்னம்மா சுப்பிடியிருக்கிறீங்கள்? இருக்கிறன் செல்லம். என்னம்மா ஒரே மழையாம் உங்கடை பக்கம்? ஓமடா செல்லம் தெரியும்தான். பிள்ளைக்கு அம்மான்ரை நிலமை... ஊத்திற மழை அம்மாவையும் பரந்தனுக்காலை ஆனையி-றவிலை கரைசேர்க்குதோ தெரியாது.....!

ஏன் குஞ்சு கனநாள் எடுக்கேல்ல? அம்மாவோடை மாதம் ஒருக்கால் கதை மோன... என்ரை செல்லம் கதைச்சியெண்டா எனக்கும் ஆறுதலாயிருக்குமெல்லே....

எங்கை ஒரே வேலையம்மா... அதான் கனநாள் கதைக்கேல்ல....

அவளெப்பிடியம்மா இருக்கிறாள்? ரெண்டு கிழமை முன்னம் போனனான்.... இருக்கிறாள்.... சரியா மனசுடைஞ்சு போயி ருக்கிறாள்... அவளுக்கு என்ர கவலைதான ணை... நான் கிழவி. இண்டைக்கோ, நாளைக்கோ போயிடுவன்.... ஆனா என்ர பிள்ளைதானம்மா தனிக்கப்போறாள்.... அவளை நினைக்காமல் தண்ணிவென்னியும் இறங்காதாம் மோன... என்ரை பிள்ளையைக் கைவிட்டிராதையணை என அழத்தொடங் கினாள் அம்மா.

அவ்வளவு கெதியில நீங்க போகேலா தம்மா... அவளுக்கு கலியாணங்கட்டி வைச்சு பேரப்பிள்ளையளெல்லாத்தையும் வளத்து விட்டிட்டுத்தான் நீங்கள் போகலாம்.... அம்மாவின் கண்ணீருக்கு இப்படித்தான் ஒவ்வொரு முறையும் அம்மாவின் வயிற்றில் பிறக்காத மகள் சொல்லிச் சமாளிப்பாள்.

மழை பெலத்துக்கொண்டிருந்தது. அம்மா 2 வாரம் சேர்த்து வைத்து அவளுக்குச் சொல்லியாற நினைச்ச எல்லாவற்றையும் சொல்லத் தொடங்கினாள். அம்மா கதைத்தவை துண்டம் துண்டமாய் முறிந்து முறிந்து கேட்டுக்கொண்டிருந்தது...

அம்மா நீங்கள் கதைக்கிறது விளங் கேல்ல... பொறுங்கோ கட் பண்ணியெடுக் கிறன்.... மூத்தவளின் தோழியின் தொடர்பு அறுபடுகிறது.. தனது கதைகளை அவள் கேட்டுக்கொண்டிருக்கிறாள் என்ற நினைப்பில் அம்மா தொடர்ந்து கதைத்துக்கொண்டிருந்தாள்.....

அம்மாவின் குடிசையின் கூரைத்தகரம் ஒரு கரையால் அடித்த காற்றில் எத்துப்பட்டு அம்மா படுத்திருந்த கட்டிலிலை மழைத்துளிகள் நனைத்துக் கொண்டிருந்தது. சுடுதண்ணி வைக்க அம்மா சேமித்துவைத்திருந்த சுள்ளி விறகுகள் ஈரமாகிக் கொண்டிருந்தது. இடியும் மின்னலும் யுத்தமுனைபோல சத்தமும் கண்ணைப் பறித்தெடுக்கும் ஒளியாயும் மாறிமாறிக் கேட்டுக் கொண்டிருந்தது.

அம்மாவிற்கு ஆமிக்காரர் போட்டுக் கொடுத்திருந்த வசந்தமாளிகையை மழைகொண்டு போகத் தொடங்க வெள்ளம் உள்ளே புகுந்தது. அம்மாவின் மிச்சமாய் இருந்த சில பாத்திரங்களும் தேநீர் கேற்றிலும் மிதந்தது. அம்மா தலையிலடித்து அழத்தொடங்கினாள்....

(முற்றும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை 80

மணியம்

எங்களில் 42 பேரைக் கைதுசெய்வ தற்கான பட்டியல் ஒன்றை வைத்திருந்த கிளிநொச் சி பொலிசார், தினசரி கோணாவில் சந்திவரை வந்து பொதுமக்களிடம் எங்களைப் பற்றி விசாரித்துவிட்டுச் சென்றனரேயொழிய, முகாம ருகே வரவில்லை.

நாம் அங்கிருந்து வெளி-யேறிய பின்னரே அவர்கள் முகாம் இருந்த பகுதிக்குள் வந்து ஆராய்ந்துவிட்டுச் சென்றதாகப் பின்னர் பொதுமக்கள் தெரிவித் தனர். அவர்கள் பின்னர் முரசு மோட்டை பகுதியில் எமது தோழர்கள் பலரைக் கைது செய்ததுடன், அவர்களில் சிலரை ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீரவுடன் ஒன்றாகச் சிறை வைத்தனர்.

மறுபக்கத்தில் எம்மைப் பற்றிய செய்தியொன்றை கொழும்பிலிருந்து வெளியாகும் 'வீரகேசரி' பத்திரிகை நிறுவனத் தின் மாலைத் தினசரியான 'மித்திரன்' வெளியிட்டு அரசி ன் கவனத்தையும் ஈர்க்க வைத் தது. அக்கராயனிலும் அதற்கு சற்றுத் தள்ளியிருந்த வன்னேரிக் குளத்திலும் சில தமிழ் தீவி ரவாத இளைஞர்கள் முகாமிட் டிருப்பதாகவும், அவர்கள் பகல் நேரங்களில் விவசாயிகளோடு விவசாயிகளாக வேலை செய்வ தாகவும், இரவுவேளைகளில் ஆயுதப்பயிற்சியில் ஈடுபடுவதா கவும் அச்செய்தி குறிப்பிட்டது. அந்தச் செய்தி அங்கு வயல் வைத்திருந்த யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த ஒருவரால் திட்டமிட்டுக் கொடுக்கப்பட்டது என்பதைப் பின்னர் அறிந்து கொண்டோம்.

இந்த நிலைமையில் தரும புரம் இளைஞர்கள் இராணு வத்தினர்மீது நடாத்திய தாக்கு தலுக்கும் எமது தோழர்களுக்கும் சம்பந்தமில்லாதபோதும், யாரோ கொடுத்த தவறான தகவல்களால் இராணுவத்தினர் விசுவமடு விலிருந்த எமது தோழர்கள் மீது குறிவைத்ததால், அவர்களில் சிலர் பாதுகாப்புத்தேடி சுமார் 25 மைல்கள் கால்நடையாக நடந்து கோணாவிலுள்ள எமது முகாமுக்கு பாதுகாப்புத் தேடி வந்துசேர்ந்தனர். அங்கு அவர்கள் சில நாட்கள் எவ்வித தொந்தரவுமின்றித் தங்கியிருந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்து சில நாட்களின் பின்னர் இராணுவ உயர் அதிகாரிகளின் தீர்மானத் துக்கமைய விசுவமடுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அந்த இராணுவ முகாமும் அகற்றப் பட்டுவிட்டது. அதன்பின்னர் தான் பாதுகாப்புத்தேடி யாழ்ப் பாணத்திலுள்ள தமது கிரா மங்களுக்குச் சென்ற தோழர்களும், கோணாவிலில் எமது அரசியல் பயிற்சி முகாமில் தங்கியிருந்த தோழர்களும் படிப்படியாக விசு வமடு திரும்பி தமது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். ஆனாலும் அவர்களில் சிலருக்கு அந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட உடற்காயங் களும், மனக்காயங்களும், பொருட்காயங்களும் என்றுமே மாறாத தழும்புகளாக வாழ்க்கைப் பாதையின்மீது படிந்துவிட்டன.

அதேநேரத்தில் சரியான பாதையிலும் வழிமுறைகளிலும் அமையாத இந்தவிதமான தாக்குதல்கள், நாம் எதிர் பார்க்கும் நன்மைகளைவிடப் பாரிய இழப்புகளையே ஏற் படுத்தும் என்பதற்கும் இந்தச் சம்பவம் ஓர் உதாரணமாக அமைந்துவிட்டது. இதுபற்றி விசுவமடுவிலும் தருமபுரத்திலும் இருந்த எமது தோழர்கள் பின்னர் சுயபரிசீலனை செய்து கொண் டனர்.

நான் இந்தச் சம்பவம் பற்றி என்னிடம் விசாரித்த புலிகளின் முக்கியஸ்தர்களுக்கு விஸ்தார மாக விளக்கியதின் நோக்கம், புலிகள் அன்று உச்சநிலையில் நின்றுகொண்டு செய்யும் மக் களை மதிக்காத அல்லது மக்க ளுக்கு எதிரான செயற்பாடுகள் நீண்டகாலம் நிலைக்காது என்பதைப் பூடகமாக உணர்த் துவதற்காகவே. அதை அன்றைய நிலையில் என்னை விசாரித்த புலிகள் புரிந்துகொண்டிருப்பார் கள் என்று நான் நினைக்க வில்லை. ஆனால் என்னை விசாரித்த புலிகளில் சிலர் இன்றிருந்தால் நிச்சயம் அந்த உண்மையைப் புரிந்து கொண் டிருப்பார்கள். அப்படிச் சிலர் இலங்கையிலோ புலம்பெயர் நாடுகளிலோ அரச படைகளின் கைகளில் அகப்படாமல் இருக் கக்கூடும் என நான் நிச்சயமாக நம்புகிறேன்.

## புலிகளின் சிறை அமைவிடம்

நாம் சிறை வைக்கப்பட்டிருந்த Tank - 2 என்ற வதை முகாம் ஆனைக்கோட்டையிலிருந்தது. இந்த வதை முகாம் 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு சிறையாகும். தினமும் இங் குள்ளவர்களில் சிலர் இரவு நேரங்களில் வெளியே அழைத்துச் செல்லப்படுவதும், சிலர் புதிதாக உள்ளே வருவதுமாக இருக்கும்.

அநேகமாக இரவு உணவு முடிவுற்று கைதிகள் எல்லோரும் படுக்கப்போன பின்னர், நள் ளிரவை அண்மித்த நேரத்தில் சில புலிப் புலனாய்வாளர்கள் கையில் ரோர்ச் லைற்றுடன் வந்து படுத்திருப்பவர்களை எழுப்பு வார்கள். எல்லோரும் எழுந்து கொண்டபின்னர், முதலில் கைதி யின் இலக்கத்தை அழைத்துப் பின்னர் பெயரையும் அழைப்பார் கள். நள்ளிரவில் திடீரென்று அழைப்பதால், அழைக்கப்பட்ட வர்கள் பல்வேறு மனநிலையில் இருப்பார்கள். என்னத்துக்காக அழைக்கிறார்கள் என்ற மனக் குழப்பம் அவர்களை அலைக் கழிக்கும்.

ஏனெனில் அவர்கள் விசாரிக் கப்பட்ட முறை அல்லது சித்திர வதை செய்யப்பட்ட விதத்தை வைத்து, புலிகள் தமக்கு என்ன தண்டனையை வழங்குவார்கள் என்ற விடயத்தை அவர்கள் ஓரளவு ஊகித்து வைத்திருப்பார் கள். அதை வைத்து தமக்கு மரண தண்டனை நிறைவேற்ற அழைத்துச் செல்கிறார்களா, விடுதலை செய்ய அழைத்துச் செல்கிறார்களா அல்லது அவர் கள் நடாத்தும் பண்ணைகளுக்கு வருடக்கணக்கான உடலுழைப்புக் காக அழைத்துச் செல்கிறார்களா என்பதை கைதிகள் ஓரளவுக்கு ஊகித்துவிடுவார்கள்.

அழைக்கப்பட்ட கைதிகள் இரும்புக் கதவுக்கு அருகே சென் றதும் வெளியே எடுக்கப்படுவார் கள். பின்னர் அவர்கள் உடுத்தி ருக்கும் சிறைச்சாலைக்குரிய சாரம் களையப்பட்டு, முன்னர் அவர்களிடமிருந்து வாங்கி வைத் திருந்த அவர்கள் உடுத்து வந்தி ருந்த உடைகள் அல்லது புதிய உடைகள் வழங்கப்படும். அதன் பிறகு அவர்களது கண்கள் கறுப்புத் துணிகளால் கட்டப்பட்டு, வான் களில் அல்லது சைக்கிள்களில் ஏற்றி எங்கோ கொண்டு செல்லப்படுவர்.

இந்த மாதிரி வெளியே கொண்டு செல்லப்படுபவர்கள் விடுதலைக்காகத்தான் கொண்டு செல்லப்படுகின்றனர் என நினைத்து, உள்ளே இருப்பவர் கள் அவசர அவசரமாகத் தமது வீடுகளுக்குச் சில தகவல்களை இரகசியமாகச் சொல்லிவிடுவர். ஆனால் அவர்கள் வீடுசென்று சேர்ந்தால்தானே தகவல்கள் உரியவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு?

என்னுடன் ஒன்றாக உள்ளே இருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் இவ்வாறு நள்ளிரவில் அழைத் துச் செல்லப்பட்ட பலரிடம் தனது வீட்டுக்குத் தகவல் சொல்லிவிட்ட தாகவும், ஆனால் தான் விடு தலை செய்யப்பட்டு வீடு வந்த பின்னர் அதுபற்றித் தனது மனைவி யிடம் விசாரித்தபோது, அப்படி யாரும் வந்து தனக்கு எவ்வித தகவலும் சொல்லவில்லை யென்றும் சொன்னதாக என்னிடம் கூறினார். நாம் இருவரும் விடு தலையாகி வெளியே வந்த பின்னர் ஒருமுறை கதைக்கும் போதே இதனை அவர் என்னிடம் சொன்னார். இதனால் ஆத்திர மடைந்த அந்த ஓய்வுபெற்ற அதி-பர், தான் தகவல் சொல்லிவிட்ட நாவாந்துறையைச் சேர்ந்த சில ரைத் தேடி அவர்களது வீடுகளுக் குச் சென்று விசாரித்தபோது, அவர்களது வீட்டவர்கள் புலிகள் தமது அன்புக்கு உரியவருக்கு அவர் செய்த குற்றத்துக்காக மரண தண்டனை நிறைவேற்றி விட்டதாக தம்மிடம் வந்து அறிவித்தாகச் சொல்லியழுது குழறியதாகப் பின்னர் சொன்னார்.

அவர் இன்னொரு சுவார சியமான தகவலையும் என்னிடம் சொன்னார். அவரை வரணி யிலுள்ள 'இறைச்சிக்கடை' முகாமில் 'உரிய' முறையில் விசாரித்தபின்னர், ஆனைக் கோட்டை முகாமுக்குக் கொண்டு வந்து இறுதி விசாரணையை நடாத்தியுள்ளனர். அவர் ஆனைக் கோட்டையைச் சேர்ந்தவர் என்றபடியால், அந்த இடத்தை அடையாளம் பிடிக்கிறாரோ என்று அறிவதற்காக அந்த இடம்பற்றி அவரிடம் விசாரித் திருக்கிறார்கள். அவர் 'தெரிய வில்லை' எனப் பதிலளித் திருக்கிறார்.

ஆனால் பின்னர் சில நாட்கள் அவரை விசாரணைக் காக சிறைக்கூண்டுக்கு வெளியே அழைத்துவந்து விசாரித்த நேரங் களில், நாய் ஒன்று அவருக்கு அருகே வந்து படுத்துக்கொள்வது வழமையாக இருந்திருக்கிறது. முதலில் அதைப்பற்றி பெரி தாகக் கவனிக்காத அவர் பின்னர் கூர்ந்து கவனித்தபோது, அது தான் வளர்க்கும் தனது வீட்டு நாய் என்பது தெரிய வந்திருக் கிறது.

அதை வைத்து தனது நாய் உலவித் திரியும் மிகவும் கிட்டிய தூரத்திலேயே தான் சிறைவைக்கப்பட்டிருப்பதை அவர் புரிந்துகொண்டார்.

(தொடரும்...)




1848ஆம் ஆண்டு யூதர்கள் தமது சரித்திரத்திலேயே முதல்முறையாக தமது பிரதிநிதி ஒருவரை நாடாளு மன்றத்துக்கு அனுப்பினார்கள்.

இது நடந்தது பிரான்ஸில். இதனைத் தொடர்ந்து 1860ஆம் ஆண்டு ஹாலந்தில் ஒரு யூதர் அமைச்சர் ஆனார். 1870இல் இத்தாலியில் எல்லாவற்றுக்கும் சிகரமாக 1868ஆம் ஆண்டு பெஞ்சமின் டி' ஸ்ரேலி என்ற யூதர் பிரிட்டனின் பிரதமராகவே ஆகும் அளவுக்கு


கார்ல் மார்க்ஸ்

அங்கே யூதர்களின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது!

ஆங்கிலேயர்களால் ஜீரணிக்கவே முடியாமல் போனது. தம்மாலான வரை அவர்கள் யூதர்களை அவமானப் படுத்தி கார்ட்டூன்களும் கேரிகேச்சர் களும் போட்டுப் பார்த்தார்கள். ஜன நாயகத்தின் மிகப்பெரிய பிரச்சினை இதுதான் என்றே சொன்னார்கள். ஆனாலும் யூதர்கள் எதையும் கண்டு கொள்ளவே இல்லை. பெஞ்சமின் டிஸ்ரேலியே தம்மைக் குறித்த கேலிச் சித்திரங்களை ரசித்துப் பாராட்டக் கூடியவராக இருந்தார்!

பின்னால் 1878இல் பிஸ்மார்க், பெஞ்சமினை ஒரு யூதராகப் பார்க்காதீர்கள், மனிதராகப் பாருங்கள் என்று கேட்டுக்கொண்டதும் பிரிட்டன் அரைமனத்துடன் அதற்குச் சம்மதித்தது மெல்லாம் சரித்திரம். யூதர்களின் விடாமுயற்சிக்கு பெஞ்சமின் டிஸ்ரேலியின் இந்த வெற்றி ஒரு மகத்தான உதாரணம்.

பெஞ்சமின் டிஸ்ரேலியின் முன்னோர், இத்தாலியைச் சேர்ந்தவர்கள். (உண்மையில் எந்த யூதரும் இப்படிச் சொல்வதை ஒப்புக்கொள்ளவே மாட்டார்! 'எங்கள் முன்னோர் பாலஸ்தீனைச் சேர்ந்தவர்கள்' என்றே அவர்கள் சொல்வார்கள்) அங்கிருந்து இடம்பெயர்ந்து, ஸ்பெயினில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள், பதினைந்தாம் நூற்றாண்டில் அகதிகளாக பிரிட்டனுக்கு ஓடிவந்தவர்கள். பெஞ்சமினின் குடும்பத்தினர் அத்தனைபேரின் பெயருடனும் 'இஸ்ரேலி' என்கிற துணைப்பெயர் ஒட்டிக் கொண்டிருக்கும். அன்றைக்கு இத்தாலியில் வாழ்ந்த அத்தனை யூதர்களுக்கும் இந்தத் துணைப்பெயர் உண்டு. பெஞ்சமின் மட்டும் கொஞ்சம் ஸ்டைலாக D'Israeli என்று பெயரை மாற்றிக்கொண்டார். அது பின்னால் டிஸ்ரேலி என்றே ஆகிவிட்டது!

பெஞ்சமினின் தந்தை ஐஸக் இஸ்ரேலி, லண்டனில் இருந்த ஒரு யூத தேவாலயத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்தார். அவரை கிருத்தவராக மாற்றுவதற்கு நிறைய பேர் முயற்சிசெய்து பார்த்திருக்கிறார்கள். ஆனால் அவர் மாறவில்லை. ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் தமது குழந்தைகளுக்கு மட்டும் 'ஒரு பாதுகாப்பு கருதி' ஞானஸ்நானம் செய்விக்க அவர் ஒப்புக் கொண்டதாகத் தெரிகிறது. பெஞ்சமின் உட்பட அவரது சகோதரர்களுக்கு அப்படியாக ஞானஸ்நானம் செய்யப் பட்டிருக்கிறது. ஆனாலும் பெஞ்சமின் ஒரு யூதராகவே வாழ்ந்தவர். அரசியலில் நுழைவதற்கு முன்னால் சிறுகதைகள், நாவல்களெல்லாம் எழுதிப்பார்த்திருக் கிறார். கிருத்தவர் அல்லாத யாரும் பிரிட்டனின் பாராளுமன்றத்துக்குள் நுழையமுடியாது என்கிற சூழல் இருந்த காலத்தில் அவர் அந்த ஞானஸ் நானத்துக்கு சம்மதிக்காதிருந்தால், பாராளுமன்ற உறுப்பினராகவோ, பிர–தம மந்திரியாகவோ ஆகியிருக்கவே முடியாது என்பதையும் பார்க்கவேண்டும்.

பிரிட்டன் என்றில்லை. இன்னபிற ஐரோப்பிய தேசங்களிலும் இப்படியான நிலைமைதான் அன்று இருந்திருக்கிறது. அடிமைகள் போலவும் நாடோடிக் கும்பல்கள் போலவுமே கருதப்பட்ட யூதர்கள், ஒரு வீடுகட்டி உட்கார்ந்த தோடு மட்டுமல்லாமல், தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக்கொண்டு அரசியலில் ஈடுபட்டு வெற்றியும் பெறத்தக்க வகையில் உயர்வதற்கு அந்த விலையைக் கொடுத்தே தீரவேண்டியிருந்தது.

ஆனால் யாரும் அரசியல் காரணங் களுக்காக மட்டுமே மதம் மாறிய தில்லை. எல்லாமே வாழ்க்கைக் காரணங்களுக்காகத்தான். அதாவது உயிருடன் வாழ்வது என்கிற அடிப் படைக் காரணம். பிறகு கொஞ்சம் வசதியாக வாழலாமென்கிற இருப்பியல் காரணம். இதற்கு மேற்பட்ட வர்த்தக, பொருளாதாரக் காரணங்கள் இருக்கவே செய்தன என்றாலும் ஐரோப்பிய தேசங் களில் கிருத்தவத்துக்கு மாறிய யூதர் களின் எண்ணிக்கை எப்படியும் பல லட்சங்களைத் தாண்டவே செய்கிறது.

ஜெர்மனியில் அப்படித்தான் ஒரு யூதக்குடும்பம் பத்தொன்பதாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் கிருத்த வத்துக்கு மாறியது. அப்படி மாறியதன் மூலம் அந்தக் குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் கொஞ்சம் உயரலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் அப்படி யொன்றும் பிரமாதமாக உயர்ந்ததாகத் தெரியவில்லை.

ஆனால் அந்த யூதக் குடும்பத்தில் பிறந்து கிருத்தவத்துக்கு மாறிய குழந் தைகளுள் ஒன்று பிற்காலத்தில் மானுட குலத்துக்கே நன்மை செய்யக்கூடிய வராக மலர்ந்தார். தமது யூத, கிருத்தவ அடையாளங்கள் அனைத்தையும் துறந்து, ஒரு மனிதனாக மட்டுமே அடையாளம் காணப்பட்ட அவர் பெயர் கார்ல் மார்க்ஸ்.

பிரிட்டனின் பிரதமராக பெஞ்சமின் டி'ஸ்ரேலி ஆனதைத் தொடர்ந்து பிரிட்டனில் மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த மேற்கு ஐரோப்பாவிலும் யூதர் களுக்கு இருந்த பிரச்சினைகள் படிப் படியாகக் குறைந்து, அவர்களது இடமும் இருப்பும் உறுதியாகத் தொடங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளில் (கி.பி.1860இல் இருந்து என்று வைத்துக் கொள்ளலாம். துல்லியமான காலக் கணக்கு தெரியவில்லை) அநேகமாக அனைத்து ஐரோப்பியக் கல்லூரி, பல்கலைக்கழகங்களிலும் யூத மாணவர்கள் சேர்ந்து படிக்க முடிந்தது. ஐரோப்பிய மருத்துவமனைகளில் யூத மருத்துவர்களுக்கு வேலை கிடைத்தது. அதுவரை யூத வழக்கறி ஞர்களும் யூதப் பத்திரிகையாளர்களும் ஐரோப்பாவில் தாழ்த்தப்பட்டவர்கள் போல நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலைமை மாறி, அவர்களும் மற்றவர் களுக்கு இணையான சம்பளமும் மரி யாதையும் பெறத் தொடங்கினார்கள். நம்பமுடியாத வியப்பு சில தேசங்களின் பெருமைக்குரிய தேசிய விருதுகள் அவ்வப்போது யூதர்களுக்குக் கிடைத்தன!

இதே காலகட்டத்தில், இதற்கு நேர்மாறான நிலைமையும் ஒரு பக்கம் இருந்தது. குறிப்பாக ஜெர்மனி, போலந்து போன்ற தேசங்களில், நெப்போலியனின் மறைவைத் தொடர்ந்து பிரான்ஸிலும் ஜெர்மனியிலும், அதுவரை சௌகரியமாக வசித்துவந்த யூதர் களுக்குப் பிரச்சினைகள் ஆரம்பமாயின. கட்டாய மதமாற்றத்துக்கு அவர்கள் உட்பட வேண்டியிருந்தது. மதம் மாறினாலொழிய வாழமுடியாது என்கிற சூழ்நிலை.

ஆகவே, எங்கெல்லாம் யூதர்கள் பிரச்சினையில்லாமல் வாழ்கிறார் களோ, அங்கெல்லாம் இடம்பெயர ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் பிரிட்டன் உள்ளிட்ட பல மேற்கத்திய ஐரோப்பிய தேசங்களில், யூதர்களின் எண்ணிக்கை, அந்தந்த நாட்டு மக்கள் தொகைக்குச் சம அளவே ஆகிவிடும்படி உயரத்தொடங்கியது. யூதர்களுக் கென்று தனிக் குடியிருப்புகள், வேலை வாய்ப்புக்கள் போன்றவற்றை ஆங் காங்கே செய்துதருவதற்கு, அந்தந்த தேசங்களில் அப்போதிருந்த யூத அரசியல்வாதிகள் முழுமூச்சில் பாடு பட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் போடும்போது யூதர்களுக்காக என்றே தனியொரு தொகை ஒதுக்க வேண்டிய சூழ்நிலை பல்வேறு தேசங் களுக்கு ஏற்பட்டன.

குறிப்பாக 1870ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்தகைய நிலைமை அதிகரித்தது. காரணம் ரஷ்ய யூதர்கள். ஜோர் அலெக்சாண்டர் 2இன் படுகொலைக்குப் பிறகு ரஷ்யாவில் யூத ஒழிப்புத் திட்டம் மிகத் தீவிரமடைந்து தினசரி பல்லாயிரக்கணக்கான யூதர்கள் ரஷ்ய எல்லையை கடந்து கொண்டிருந்தார்கள்.

1870ஆம் ஆண்டு மட்டும் ரஷ்யாவின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகளில் மொத்தம் எட்டு மில்லியன் யூதர்கள் வசித்துக் கொண்டி ருந்தார்கள். சுமார் எட்டாண்டு இடைவெளியில் இந்த எண்ணிக்கை பூஜ்ஜியமாகிவிட்டது! அதாவது அத்தனை பேரும் இடம்பெயர்ந்துவிட்டார்கள். அல்லது பலர் இடம்பெயர, சிலர் கொலையுண்டுபோனார்கள்.

இதில் இன்னொரு விஷயமும் மிக முக்கியமானது. ஜோர் மன்னர்கள் காலத்தில் யூதர்களுக்கு நேர்ந்த கொடுமையில் மிகவும் விரக்தியடைந்த சில ஆயிரம் யூத இளைஞர்கள், எப்படியாவது ரஷ்யாவில் ஜோர்களின் ஆட்சியை ஒழித்துவிட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டார்கள்.

ரஷ்யாவை விட்டு வெளியேறிப் போனால் தங்களது திட்டம் நடைபெறாமல் போய்விடும் என்று கருதிய அவர்கள், எல்லைப்புறங் களிலிருந்து இரகசியமாக இடம் பெயர்ந்து தேசத்தின் உள்ளே புகுந்து, தமது அடையாளங்களை மாற்றிக் கொண்டும் மறைத்துக்கொண்டும் வாழத்தொடங்கினார்கள்.

(தொடரும்...)

இன்று இளைஞர்களின் தற்கொலை நடைபெறுவதற்குக் காரணம் என்ன? பொருந்தாக் காதல், ஒரு தலைக்காதல், பெற்றோர் கண்டிப்பு, கடன் தொல்லை, போதைப்பொருள் பாவனைகள் எனப்பல காரணங்களினால் தற்கொலைகள் நடைபெறுகின்றன.

"இளவயது திருமணங்கள் தற்போது அதிகளவு நடைபெற்றுவருகிறது. உடல் உணர்ச்சி ஒன்றினை மட்டும் தகுதியாகக் கருதி காமத்திற்காக மட்டுமே திருமணம்செய்து கொள்வது அதிகரித்துவருகிறது. இந்த நிலை ஆரோக்கியமானதல்ல. இவர்கள் சில மாதங்களிலேயே ஒத்துப்போக முடியாமல் தவிக்கிறார்கள். இதனால் நீதிமன்றம் செல்கிறார்கள் அல்லது தற்கொலை முடிவு எடுக்கிறார்கள். அண்மையில் நடைபெற்ற சம்பவம் ஒன்றுள்ளது. ஆண் (வயது 21), பெண் (வயது 19) வீட்டின் சம்மதம் கிடைக்கவில்லை. இருவரும் வீட்டைவிட்டு வெளியேறினார்கள். வழக்கம் போல பெண்களின் பெற்றோர் மகளைத் தேடினார்கள். எங்கிருக்கிறார்கள் என்று செய்தி கிடைக்கவில்லை. வீட்டில் அழுகை, துன்பம். உற்றார், உறவினர், நண்பர்களின் ஏளனச் சிரிப்பும் பார்வையும்!

பிள்ளையை 19 வயது வரைவளர்த்த பெற்றோரின் வேதனையை எப்படி எழுதுவது?, திடீரென ஒருநாள் மாலை, மகள் வீட்டிற்கு வந்தாள், (3. மாதங்களின் பின்னர்) கந்தல் துணியாக! என்ன நடந்தது? இந்தப் பிள்ளை கொண்டுசென்ற ஒரு தொகைப்பணமும், நகையும்

# தற்கொலைகள் பலவிதம்



3 மாதங்களுக்குள் சந்தோஷமாக கொழும்பில் உல்லாச விடுதியில் நாட்கள் கடந்திருக்கிறது. பணம் முடிந்தது. பையன் பாய்... பாய்.. காட்டிவிட்டு ஓடிவிட்டான். இந்தக் கதைதான் இன்றைய இளசுகளின் திருமணக்கதை. ஆண்கள் மட்டும்தான் ஏமாற்றுகிறார்கள் என்றில்லை! பெண்கள் ஒரே நேரத்தில் மூன்று வாலிபர்களுடன் காதல் பண்ணும் அதிசயங்களும் உண்டு. இறுதியில் எவனிடம் அதிகளவு சொத்து இருக்கிறது என்று பார்த்து முடிவுசெய்யும் புத்திசாலிப் பெண்களும் உள்ளனர். ஏமாற்றப்பட்ட இளைஞன் தற்கொலைக்கு முயற்சிசெய்கிறான். உண்மைதானே! காதல் தோல்வியால் வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்கள் ஆண்கள்தான் மிகவும் அதிகம். அம்பிகாபதி, ஷாஜகான், தேவதாஸ் கதைகள் உள்ளன. இளைஞர்களே காதல் தோல்வி என்பதற்காக தற்கொலை செய்துகொள்ளும் முடிவை எடுக்காதீர்கள். "வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்..." என்ற கவிஞரின் வரிகள் எதிரொலிக்கின்றது. காதல், தற்கொலைகள் அனுதாபத்திற்கு உரியதாகப்படவில்லை. "அமைந்துவிட்ட வாழ்வை காதலித்துப்பார்" எனும் நமது கோட்பாடு முடிவில் வெற்றி பெற்றுவிட்டது.

அடுத்து கடன் தொல்லையால் தற்கொலை செய்பவர்கள் - இவர்கள் திட்டமிட்ட வாழ்க்கையை அமைக்காதவர்கள் அல்லது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தெரியாதவர்கள். இளைஞர்களால் முடியாது என்று ஒன்று இருக்கிறதா?, உன்னால் முடியும் தம்பி... தம்பி.. உனக்குள் இருப்பதை நம்பி... நம்பி என்று கண்ணதாசன் எழுதிவிட்டு கவிதையில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். கடன்தொல்லைக்கும் கண்ணதாசனுக்கும் நிறையத் தொடர்புண்டு. நிறைய உழைத்தான், நிறையக் குடித்தான் என்று சினிமா உலகத்தினை இன்றும் சொல்லுவார்கள். திட்டமிடாத செலவுகளினால் துன்பப்பட்டமைக்கு கவிஞர் கண்ணதாசன் நல்ல உதாரணமாகும்.

கடன் ஏற்படுவது ஏனென்று சிந்திக்கும்போது, தற்போது "கடனுக்கு" பொருட்கள் வாங்குதல் எனும் செயற்பாடு நடைபெறுகிறது. ஆடம்பரப் பொருட்கள் கொள்வனவு இதில் முக்கிய இடம்வகிக்கிறது. நிறுவனங் களுக்கு மாதாந்தம் கட்டவேண்டிய பணத்தைக் கட்டமுடியாமல் பெரும் துன்பம் அனுபவிக்கிறார்கள். இந்த விடயத்தில் யாழ்.மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

கடன் கொடுத்தவன் நடவடிக்கை எடுக்கத்தான் செய்வான். அங்கு மானப்பிரச்சினை எழுகிறது. வாழ்க்கை முறையில் நம் மூத்தோர் மூன்று முறைகள் சொல்லியிருக்கிறார்கள். அவையாவன: இடாம்பீகம், சிக்கனம், கருமித்தனம் என்பனவையாகும். தேவைக்கு மேலதிகமாகச் செலவு செய்தல் இடாம்பீகம், தேவைக்கு செலவு செய்தல் சிக்கனம். தேவைக்கு செலவு செய்யாமை கருமித்தனமாகும். சிக்கனமாக வாழ்தல் சிறப்பான வாழ்வாகும். எந்தப் பிரச்சினையும் வராது. கருமித்தனமாக வாழவும் கூடாது என்பதை அறிக.

பெற்றோர், ஆசிரியர்கள் கண்டித்தமையால் மனமுடைந்து தற்கொலை செய்கிறார்கள். ஒவ்வொரு இளைஞர்களுக்கும் வழிகாட்டும் பொறுப்பு பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்குமே உண்டு. இவர்களின் வழிகாட்டல் சரியாக அமையாவிடின் வாழ்க்கை இருண்டுவிடும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. இன்று மனித உரிமைகள் அமைப்புக்களின் தேவையற்ற தலையீடு, ஆசிரியர்களின் வழிகாட்டலை ஏறத்தாழ நிறுத்தி விட்டது என்றே கூறலாம். ஆசிரியர்கள் வெறுமனே பாடத்தை மட்டும் புகட்டுபவர்கள் அல்லர்! நீதிக்கருத்துக்களை, வாழ்க்கைப் பண்புகளை, ஆளுமையை வளர்ப்பவர்கள் ஆசிரியர்கள்! ஆனால் இன்று அந்தநிலை இல்லை. இவை இளைஞர்களைப் பாதிக்கும். பெற்றோர், பிள்ளைகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டி கண்டித்துத்திருத்த வேண்டியவர்கள். ஆனால் பொறுப்பற்ற பெற்றோர் எனும் நிலை, பிள்ளைகளின் தவறுகளை கண்டும் காணாதுவிடுகின்றார்கள்.

அதுமட்டுமல்ல, மாணவர்களை வழிப்படுத்த நினைத்து நடவடிக்கை எடுக்கும் ஆசிரியர்கள்மீது புகார் செய்கிறார்கள். இதனால் ஆசிரிய சமூகம் தன் கடமையைச் செய்யமுடியாமல் மௌனித்துவிட்டது. இந்தச் சூழ்நிலை களினால் இளைஞர்கள், மாணவ மாணவியர்கள் தவறுகள் செய்கிறார்கள். திடீரென, ஞானம் வந்ததுபோல பெற்றோர் குறிப்பாகத் தந்தை தனக்கு மானம் போகிறது. வெளியே தலைகாட்ட முடிய வில்லை என்று திட்டித் தீர்க்க, பிள்ளைக்கு மான உணர்வு மேலோங்கி கயிற்றில் தொங்கும் அவலம் ஏற்பட்டுவருகிறது. தமிழ்ச்சாதியின் மிகவும் துர்ப்பாக்கிய நிலை இந்தத் தற் கொலைகள்தான் என்பது எனது கருத்தாகும். அவரவர் தன் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். மேலைத்தேய நாகரிகமும், இடாம்பீக வாழ்வும் நமக்கு வேண்டாம். "அடக்கம் அமரருள் உய்த்துவிடும்" என்பது உயர்வை அடையும் வழியைக் காட்டிநிற்கிறது.

தற்கொலை மரணங்களின் பின்னர் ஆன்மாவுக்கும் உயிருக்கும் என்ன நடக்கிறது?

சொல்லின் செல்வர்
இரா.செல்வவழிவேல்

# உண்மையில் யாருக்கு வெற்றி?



**வட** மாகாண சபை தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. எல்லோரும் எதிர்பார்த்தைப்போல தமிழ் தேசிய கூட்டமைப்பு பெரும் வெற்றியீட்டி உள்ளது. வடக்கும் கிழக்கும் இணைந்திருந்த போது 36 ஆக இருந்த வட மாகாண உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போது வடக்கு தனி மாகாணம் ஆக்கப்பட்ட பின்னர் அதற்குரிய இரு போனஸ் ஆசனங்களையும் சேர்த்து 38 ஆக உயர்ந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல 1987இல் இருந்து வடக்கும் கிழக்கும் இணைந்திருந்த சுமார் 20 வருடங்களுக்கு மத்திய அரசின் வரவு செலவு திட்டத்தின் படி ஒதுக்கப்படுகின்ற மாகாணங்களுக்கான நிதியில் ஒரு மடங்கை ஒவ்வொரு வருடமும் இழந்துவந்திருக்கின்றோம். இரு மாகாணங்களும் ஒரே மாகாணமாக இருந்ததன் விளைவு பல நூறு கோடிகளை எமது மக்கள் இழக்க நேரிட்டது.

தற்போது கிழக்கும் வடக்கும் தனி தனி மாகாண அந்தஸ்து பெற்றிருப்பதனால் இரு மாகாணங்களுக்குரிய வருடாந்த நிதி ஒதுக்கீடு கிடைக்கும். இவை ஒருபுறம் இருக்க வடமாகாணசபையில் 38 உறுப்பினர்களில் 30 உறுப்பினர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றிருப்பது மிக பெரிய வெற்றி என எதிர்வரும் நாட்களில் கொண்டாட்டங்கள் நிகழும். ஆனால் இது தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு கிடைத்த வெற்றி அல்ல. ஒரு நீண்ட கால ஜனநாயக மீட்சிக்கான போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

ஆனால் கடந்த காலங்களில் புலிகளின் கொலை வெறிகளுக்கு மத்தியில் பல மாற்று இயக்கங்களும் தேர்தல்களில் உயிர்களை பணயம் வைத்தே பங்கெடுத்து வந்திருக்கின்றன. மக்கள் மத்தியில் ஒரு ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை பரப்புவதற்காக ஈ.பி.டி.பி, புளோட், ஈ.பி.ஆர்.எல்.எப், டெலோ என பல மாற்று இயக்க உறுப்பினர்கள் தமது உயிர்களையும் பலி கொடுத்திருக்கிறார்கள். தமிழர் விடுதலை கூட்டணி கூட பல மூத்த தலைவர்களை இழந்திருக்கிறது.

ஏன் தமிழ் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்கூட பாராளுமன்றில் இவ்வாண்டு ஆரம்பத்தில் பேசியது போன்று அவரது பெயரும்கூட புலிகளின் கொலைப்பட்டியலில் இருந்தது என்பது உண்மையானது. ஆனால் இன்று சித்தார்த்தரோ ஆனந்த சங்கரியோ எவரேனும் சுதந்திரமான அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடும் சமாதான சூழலை ஏற்படுத்தி கொடுப்பதற்கு இந்த அரசாங்கமே வழிவகுத்தது.


சுமார் 1977ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஒரு வேட்பாளரோ அன்றி வெற்றி பெறும் உறுப்பினர்களோ பயங்கரவாதிகளால் சுட்டுகொல்லபடமாட்டர்கள் என்று நின்மதியாக இருக்ககூடிய ஒரு சூழல் இன்று நிலவுகின்றது. இதனை உண்மையென்று தெரிந்தாலும் பகிரங்கமாக ஒத்து கொள்ள நமது தமிழ் மனம் இடம் தராது.

மாறாக வட மாகாண மக்களுக்கு இந்த அமைதியான சூழலை உருவாக்கி கொடுப்பதற்காக நிச்சயமாக இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஒரு துரும்பை கூட எடுத்து போடவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

1987இல் உருவாக்கபட்டபோதிலும் இந்த மாகாண சபை முறைமையை சுமார் 25 வருடங்களுக்கு அதனை வடக்கில் இயங்க விடாது தடுத்தது புலிகளின் இருப்பேயாகும். அந்த வகையில் புலிகளை அழித்தொழித்து இன்று வட மாகாண சபையை உருவாக்கியதிலும் இலங்கையில் எப்பகுதியிலும் இல்லாதவாறு சுமார் 70 வீதமான வடக்கு மக்களை அதில் உற்சாகமாக பங்கெடுக்க செய்தமையிலும் எல்லாவற்றிக்கும் மேலாக தமிழீழமே தமது தாகம் என்றிருந்த புலிகளால் புலிகளுக்காக உருவாக்கப்பட்ட இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினரை மாகாண சபையை ஏற்கசெய்து அதை அவர்களிடமே ஒப்படைத்திருப்பதிலும் ஜனாதிபதியே பெருவெற்றியீட்டியுள்ளார்.

தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பெருவாரியான இடங்களை தம்வசம் ஆக்கிகொண்டிருந்தாலும் என்று இந்த கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் கணம் வரை விருப்பு வாக்குகள் பற்றிய விபரங்கள் வெளியாக வில்லை. தேர்தலுக்கு முன்பாக விருப்பு வாக்கு சண்டையில் இடம் பெற்ற குழிபறிப்புகளும் குத்து வெட்டுகளும் விருப்பு வாக்குகள் வெளியானதும் மீண்டும் விஷ்வரூபம் எடுக்கும் என்பது நிச்சயம். எதிர்வரும் நாட்களில் கூட்டமைப்புக்குள் இருக்கும் அதிகார போட்டிகள் அம்பலத்துக்கு வரும்.

முதலமைச்சர் தெரிவு தொடங்கி ஏனைய



நான்கு அமைச்சர்கள் சபைத் தவிசாளர் தெரிவு வரை இடம்பெற போகும் இழுபறிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதை தாமதமாக்கும். அதன் பின்னர்கூட கூட்டமைப்பினரால் ஆளப்படபோகும் வட மாகாணசபை தன்னால் செய்யமுடிந்த அபிவிருத்தி பணிகளில் நாட்டம்கொள்ள போவதில்லை. தமிழ் மக்கள் பெரும்பான்மை ஆதரவு தந்தமை வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றவே காணி அதிகாரத்தை நாம் பெற்று கொள்ளவே என்று இடக்கு முடக்கான தீர்மானங்களை நிறைவேற்றி வீர பிரதாபங்கள் பேசுவதிலேயே காலம் கடத்துவர். எந்த வகையிலும் இந்த தேர்தல் வெற்றி தமிழ் மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் வெற்றியாக இருக்க போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

தமிழ் மக்களின் கடந்த கால இழப்புகளையும் அழிவுகளையும் நினைவு படுத்தியே தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்த தேர்தலை எதிர்கொண்டனர். இறுதி யுத்தம் முடிந்த பின்னர் சமாதானம், சமூக நல்லிணக்கம், இனங்களிடையேயான் ஒருமைப்பாடு என்பன் மெல்ல மெல்ல முளை விட ஆரம்பித்தன. சுமார் நான்கு வருடங்கள் மீட்சி பெற்று வந்த இயல்பு வாழ்க்கைக்கு இந்த இரு மாதங்களுக்குள் கூட்டமைப்பினர் ஆப்பு வைத்துள்ளனர்.

இந்த தேர்தலில் கூட்டமைப்பினர் பிணங்களை தோண்டி எடுப்பதுபோல் இனங்களிடையேயான வெறுப்புணர்வை, பகைமையை, பழிவாங்கும் உணர்வை மீண்டும் தூண்டி விட்டுள்ளனர். வாக்குகளை பெற்று கொள்வதற்காக மிக மோசமான முறையில் இனவாதமும், இனவெறியும் கூட்டமைப்பினரின் பிரச்சார மேடைகளில் அரங்கேற்றப்பட்டன. அதுமட்டுமன்றி தமிழ் மக்களை மீண்டும் ஒரு யுத்தத்துக்கு தயார் படுத்துவது போன்று இராணுவத்தினருடனான முறுகல்களுக்கு தூண்டி விட்டனர்.

எத்தனையோ தமிழ், முஸ்லிம், சிங்கள அப்பாவி சிவிலியன்களை கொன்றுகுவித்த பிரபாகரனை ஒரு மாவீரனாக கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் நீதியரசர் விக்கினேஸ்வரன் பேசிய பேச்சுக்கள் சிவஜிலிங்கத்தை விட அவரை தரம் தாழ்த்தியிருக்கின்றன. இந்த மிக மோசமான வழிமுறைகள் ஊடாகவே சிங்களவர்களுக்கும் அரசுக்கும் எதிராக தமிழ் மக்களின் மன உணர்வுகளை சூடாக்கி அதனை தமக்கான வாக்குகளாக அபகரிப்பதில் கூட்டமைப்பினர் வெற்றி பெற்றுள்ளனர்.

இவ்வெற்றியானது 30 மாகாண சபை உறுப்பினர்களை பெற்று கொள்வதில் கிடைக்கின்ற தத்தமது சுகபோகங்களைத் தவிர வேறு எதையும் பெற்றுத்தர போவதில்லை. மக்களின் அமைதியான வாழ்வு குழப்பியடிக்கபட்டிருக்கிறது மீண்டும் சிங்களவரோடு நாம் சேர்ந்து வாழ முடியாது என்கின்ற அவ நம்பிக்கையை மக்களின் மனதில் மீண்டும் விதைத்திருக்கிறது. இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு நியாயம் கோருவோம் என்று மார்பு தட்டி இனவாத அணிதிரட்டலின் ஊடாக வாக்குகளை சுருட்டி கொள்வதில் காட்டிய வேகம் தமிழ் மக்களை இன ஒற்றுமைக்கு எதிரானவர்களாக பழியுணர்ச்சி மாறாதவர்களாக சிங்கள மக்களுக்கு சித்தரித்து காட்டுவதில் போய் முடிந்திருக்கிறது.

எனவே எப்படி கடந்த 30 ஆண்டு காலமாக புலிகளின் வெற்றி தமிழ் மக்களின் வெற்றியாக இருக்கவில்லையோ அப்படியே வட மாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பு பெற்றுக்கொண்ட வெற்றியும் தமிழ் மக்களின் வெற்றியாக இருக்க போவதில்லை. புலிகள் எப்படி தமிழ் மக்களின் அனைத்து வளங்களையும் வீணடித்தார்களோ அப்படியே தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழ் மக்களின் வாக்குகை வீண்டித்துள்ளார்கள்.

**நன்றி தேனீ**

## இன்னொருவர் பார்வையில்

### (3ஆம் பக்கத்தொடர்ச்சி)

தமிழகத்துக்கு புனித யாத்திரை வந்த சிங்களர்களை, சீறும் சிங்கங்களாய் களத்தில் நின்று சிதறடித்து, பெண்கள், குழந்தைகள் உட்பட ஓட ஓட விரட்டி, தமிழர் தன்மானம் காத்து சரித்திரத்தில் பெயர்பெற்றார்கள், சீமான் படையணி, வைகோ படையணி உட்பட இன ஆர்வலர்கள்.

சிதறியோடிய சிங்கள பெண்களும் குழந்தைகளும் யார்? இலங்கை யுத்தத்தில் துப்பாக்கி துடைத்தார்களா? தோட்டா நிரப்பினார்களா? அல்லது அங்கு போர் புரிந்த் சிங்கள ராணுவ வீரர்களுக்கு மஞ்சள் அரைத்து பணி புரிந்தார்களா?

இல்லையாம்! அவர்கள் சிங்களர்களாம்! அதனாலேயே விரட்டி அடிக்கப்பட்டார்களாம்!

விக்கினேஸ்வரனின் இரு மகன்களும் திருமணம் செய்திருப்பது, இரு சிங்கள பெண்களை. ஒரு மருமகள், இலங்கை அரசின் தற்போதைய அமைச்சர், வ்ாசுதேவ நாணயக்காரவின் மகள். மற்றைய மருமகள், முன்னாள் எம்.பி.கேசரலால் குணசேகரவின் சகோதரர் மகள். இருவரும் பாரம்பரிய சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள்.

ஆமாண்ணே.. இலங்கை தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வட மாகாண முதல்வர் விக்கினேஸ்வரனின் இரு மருமகள்களும் தமிழகம் வந்தால், என்னாகும்?

இதையெல்லாம், இதுவரை சிங்களர்களுக்கு எதிராக தமிழகத்தில் வாள்வீசி பழக்கப்பட்டவர்களால் சகித்துக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், சகித்துக் கொள்வது நல்லது.

வடக்கு மாகாண தேர்தல் முடிவு பற்றி, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷே என்ன சொல்கிறார்?

“வடக்கு மாகாணத்தை ஆட்சி செய்ய போகிற அவர், எனது அமைச்சர் வா்சு தேவ நாணயக்கார மற்றும் கேசரலால் குணசேகர ஆகியோரின் உறவினர். ஒரு விதத்தில், எனக்கும் அவர் தூரத்துச் சொந்தம்” என்கிறார், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷே

என்ன சோதனை இது சரவணா?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷே வீட்டில் விருந்துண்ண சென்றாலே, “ஒட்டுக்குழு” என்று முழங்கும் தமிழ் தேசிய அரசியலுக்கு பழக்கப்பட்டவர்களால், இந்த “கூட்டுக் குடும்பத்தை” சகித்துக்கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், சகித்துக் கொள்வது நல்லது.

இலங்கையில், 1970களில் இருந்து நடந்த தமிழ் தேசிய அரசியல், விக்கினேஸ்வரன் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், வரவேற்கத்தக்க மாற்றத்தை சந்தித்துள்ளது. இலங்கை அரசுடன் விரோதப் போக்கை வளர்த்துக் கொண்டு அரசியல் செய்து, ஓட்டு பெறுவதே 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த அரசியல்.

விக்கினேஸ்வரன் அப்படிப்பட்ட அரசியல் செய்பவர் அல்ல என்று நாம் இப்போது சொன்னால், நீங்கள் நம்ப தயங்கலாம். ஆனால், அதைத்தான் விரைவில் காணப்போகிறீர்கள்.

எதை எடுத்தாலும் இலங்கை அரசுடன் மோதிக் கொள்வது ட்ரென்ட்டில் இருந்து முதல் தடவையாக விலகி அரசியல் செய்யும் ஒருவர், வடக்கு மாகாணத்தில் முதலமைச்சர் ஆவது, வரவேற்கத்தக்க மாற்றம்.

தமது எண்ணங்களை பேட்டிகளில் வெளிப்படையாக சொல்லும் நபராக உள்ளார் முதல்வர் விக்கினேஸ்வரன். “இலங்கையில் நடைபெறும் காமன் வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ள வேண்டும்” என்று வெளிப்படையாக கூறியுள்ளார். அந்த மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ள கூடாது என்று கூறும் தமிழக அரசியல் கட்சிகளுக்கு அது கசப்பாக இருக்கும்.

எப்படியோ, சரியான நபர்தான், உரிய நேரத்தில் பதவிக்கு வந்திருக்கிறார். பதவிக்கு வரும் முன்னரே ஆட்டத்தை தொடங்கியவர், பதவியில் அமர்ந்தபின், அடித்து ஆடுவார் பொறுத்திருந்து பாருங்கள். அடிக்கும் அடியில், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளேயே பலருக்கு, ரத்த அழுத்தம் எகிறப் போகிறது!

வெல்கம் மிஸ்டர் விக்கினேஸ்வரன்யூ

**நன்றி விறுவிறுப்பு**



# கொசோவோ

## உருவான கதையின் இரு பக்கங்கள்!

### வெளிச்சமாகத் தெரியும் முன் பக்கம்

சுதந்திர கொசோவோ என்னும் பறவைக் குஞ்சு முட்டையை உடைத்துக்கொண்டு வெளிவந்து ஐந்து வருடங்களாகின்றன. சேர்பிய மாகாணமான கொசோவோ, சேர்பியாவிலிருந்து விலகி சுதந்திரபிரகடனத்தை மேற்கொண்டது. 39 வயதான பிரதமர் ஹசீம் தாசியினால் இந்த் சுதந்திரப் பிரக்டனம் மேற்கொள்ளப்பட்டது. கொசோவோ விடுதலை இராணுவத்தினது நீண்டகால போராட்டத்தின் பின்னணியில் இருந்தவர் என்ற ரீதியில் பிரதமர் தாசிக்கு தனிப்பட்ட ரீதியில் இதுவொரு மாபெரும் வெற்றி மைல்கல்.

அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகளிடம் தக்க தருணத்தில் தலைசாய்ப்பதனூடாக இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்க முடியும் என்பதை தாசி நன்றாக விளங்கிக் கொண்டிருந்தார். அண்மைக்கால கெரில்லா போராட்ட இயக்கங்களில் மிகவும் வெற்றிகரமான இயக்கமாக கொசோவோ விடுதலை இராணுவத்தைக் குறிப்பிடலாம். கொசோவோ விடுதலை இராணுவம் அதன் முக்கிய இரண்டு இலக்குகளில் ஒன்றை வெற்றிகரமாக எட்டியுள்ளது. முதலாவது சேர்பிய மாகாணமாக காணப்பட்ட கொசோவோவை தனிநாடாக பிரகடனப்படுத்திக் கொண்டதாகும்.

மற்றைய இலக்கை அவர்கள் எவ்வாறு அடைவார்கள் என்பது குறித்த தேடல் மிகச் சுவையானது. அல்பானிய இராச்சியமொன்றை அமைத்தலே அவர்களது மற்றைய இலக்கு.

உலகின் பல முன்னணி விடுதலைப் போராட்ட இயக்கங்களுடன் ஒப்பீடு செய்யும் போது கொசோவோ விடுதலை இராணுவம் அவ்வளவு பலம் பொருந்திய ஒன்றாக கருத முடியாது.

யதார்த்தபூர்வமான அணுகுமுறையின் மூலமே கொசோவோ விடுதலை இராணுவம் வெற்றியீட்டியுள்ளது. ஆயுதப் போராட்டமொன்றின் வரையறைகளை மிக நுணுக்கமாக கொசோவோ இராணுவம் அறிந்து வைத்திருந்தது.

இந்த அமைப்பு இராஜதந்திர விளையாட்டில் அதிகாரம் என்ற பந்தை மிகச் சிறப்பான முறையில் கையாண்டதாகவே குறிப்பிடவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் நிபந்தணைகளுக்குக் கட்டுப்பட்டு, சர்வதேச சமூகத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக செயலாற்றுவதன் மூலம் பேச்சுவார்த்தைகளை நீட்டிச் சென்றது. எந்த நேரத்தில் சமாதான இணக்கப்பாடுகளை தமக்குத் தேவையான கோணத்திற்கு திசைதிருப்ப வேண்டும் என்பதை கொசோவோ விடுதலை இராணுவம் தெளிவாக புரிந்து வைத்திருந்தது.

பேச்சுவார்த்தைகளை ரத்து செய்து ஆயுதப் போராட்டத்தில் மீண்டும் குதிககாமல் தமது இலட்சிய பாதையில் சற்றும் விலகாமல் நிலைத்து நின்றது.

இதனால்தான் சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை கிட்டியது.

கொசோவோ சேர்பியாவின் ஒரு மாநிலமாகும். புராதன காலத்தில் சேர்பியாவின் முக்கிய கலாச்சார சின்னமாகவே கொசோவோ மாநிலம் கருதப்பட்டது. இந்த மாநிலத்தில் அதிகமாக சேர்பியர்களே வாழ்ந்து வந்தனர். பின்னர் கிறிஸ்தவர்கள் இந்த மாநிலத்தில் அதிகமாக வாழ்ந்து வந்தனர். 1981ம் ஆண்டு நாடு தழுவிய ரீதியில் பிரிவினைவாதம் பரவி வியாபித்து, இறுதியில் ஓர் கலகமாக வெடித்தது. இதனைக் கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவி நாடப்பட்டது.

இந்த இயக்கத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் நாட்டைவிட்டு வெளியேறி சுவிட்ஸர்லாந்தில் இயங்கிய மார்க்சிச லெனின்வாத கொள்கைகளை பின்பற்றத் தொடங்கினர். 1982ம் ஆண்டு கொசோவோ மக்கள் இயக்கம் என்ற அமைப்பை சுவிட்ஸர்லாந்தில் நிறுவினர்.

யுகஸ்லாவிய சோசலிச குடியரசுக்குள் அல்பானிய தேசிய குடியரசொன்றை நிறுவுவதே இந்த அமைப்பின் பிரதான இலக்காக காணப்பட்டது. படிப்படியாக பாரிய அல்பானிய சாம்ராஜ்ஜியமொன்றை கட்டியெழுப்புவதே அவர்களின் இரண்டாவது இலக்காக அமைந்திருந்தது.

1991ம் ஆண்டு ஸ்லோவேனியா, குரேஷியா மற்றும் பொஸ்னியா ஆகிய நாடுகள் யுகோஸ்லாவியிலிருந்து விலகி சுதந்திரப் பிரகடனம் செய்தன. இதன் காரணமாக யுத்தம் வெடித்தது. அல்பானிய தலைவர்களும் ஒருதலைபட்சமாக 1991ம் ஆண்டில் சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொண்டனர். எனினும் இதனை அல்பானியா மாத்திரமே அங்கீகரித்தது.

1992ம் ஆண்டு எழுத்தாளர் இப்ரஹிம் ரொகுவா ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

ரொகுவா ஓர் காந்தியவாதி, அஹிம்சை வழியில் சுதந்திரம் அல்லது சுயாட்சியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைளை அவர் மேற்கொண்டார்.

எனினும், மிலோசிவிக்கினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தின் முன்னால் இந்த காந்தியவாத அஹிம்சைப் போராட்டத்திற்கான உரிய பலன் கிடைக்கவில்லை. சேர்பிய இராணுவப் படையினர் கொசோவோவின் அல்பானியர்கள் மீது இன ஒடுக்குமுறைகளைப் பிரயோகத்தினர்.

கொசோவோ விடுதலை இராணுவம் மாறுபட்ட தரப்புக்களிடமிருந்து நிவாரணங்களையும், உதவிகளையும் பெற்றுக் கொண்டது. அமெரிக்காவும், ஜேர்மனியும் ஆயுதங்கள், ஆயுத பயற்சி மற்றும் நிதி உதவி முதலியவற்றை வழங்கின. உண்மையில் தங்களது அரசியல் அபிலாஷைகளை அடைவதற்கான தந்திரோபாயமாகவே இந்த உதவிகள் நோக்கப்படுகிறது.

மறுபுறத்தில் கொசோவோ விடுதலை இராணுவத்தை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஒரு தடை செய்யப்பட்ட வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது.

எனினும், அமெரிக்க அரசாங்கம் கொசோவோ விடுதலை இராணுவத்தினருக்கு மறைமுகமாக உதவிகளைத் தொடர்ந்தது.

1997 - 1999 ஆண்டு காலப்பகுதியில் கொசோவோ இராணுவம் ஒரு சடுதியான வளர்ச்சிப் போக்கை வெளிக்காட்டியது. ஆரம்ப காலத்தில் பாதுகாப்பு தரப்பினர் மற்றும் சிவில் படை அதிகாரிகள் மீது கொசோவோ விடுதலை இராணுவம் தாக்குதல்களை மேற்கொண்டது. தடைகளை அமைப்பதன் மூலம் அரசாங்கப் படைத்தரப்பின் ரோந்து நடவடிக்கைகளை கட்டுப்படுத்தியது.

கொசோவோ விடுதலை இராணுவத்தின் பாரிய போராட்ட பின்னடைவாக ஹொராஹொவாக் பகுதியை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட இராணுவ முன்னகர்வைக் குறிப்பிடலாம். உண்மையில் இந்த முயற்சியின் காரணமாக கொசோவோ விடுதலை இராணுவம் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கியது. அதன்பின்னர், சேர்பிய இராணுவத்தரப்பினர் அடிக்கடி கொசோவோ இராணுவத்தினருடன் மோதல்களில் ஈடுபட்டனர்.

சேர்பிய இராணுவத்தினரின் மோசமான தாக்குதல்களின் காரணமாக கொசோவோ விடுதலை இராணுவம் வெற்றிகரமாக வெளியேற்றப்பட்டது. கொசோவோ விடுதலை இராணுவத்திற்கோ இதுவொரு எதிர்பாராத தண்டனையாக அமைந்தது. இஸ்ரேலுக்கு வெளியே வசிக்கும் யூதர்கள் (அல்பானியர்கள்) இதனால் கொதிப்படைந்தனர். கொசோவோ விடுதலை இராணுவத்தினருக்கான நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் மேற்குலக நாடுகளில் உச்சமடைந்திருந்தது. ஐரோப்பாவிற்குச் சென்றிருந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொசோவோ விடுதலை இராணுவத்தில் இணையும் பொருட்டு தாயகம் திரும்பினர். உண்மையில் இந்த பெரும் எண்ணிக்கையிலானோரை சமாளிப்பதில் கொசோவோ விடுதலை இராணுவம் சிக்கல்களை எதிர்நோக்கியது என்றே கூறலாம்.

1999ம் ஆண்டு மார்ச் மாதமளவில் கொசோவோவில் முழுஅளவிலான போர் வெடித்தது. சேர்பிய மற்றும் யுகோஸ்லாவிய படையினர் கொசோவோ விடுதலை இராணுவத்தினர் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலினால் விடுதலை இராணுவம் பாரிய அழிவுகளை எதிர்நோக்கியதுடன், அல்பானியவிற்கே மீண்டும் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. கொசோவோவில் சில ஆயிரம் போராளிகளே எஞ்சியிருந்தனர்.

இந்த யுத்தம் முடிவடைந்த சந்தர்ப்பத்தில், நோட்டோவும் சேர்பிய தலைவர்களும் சமாதான இணக்கப்பாடொன்றை எட்டியிருந்தனர். கொசோவோ ஐக்கிய நாடுகளினால் நிர்வகிக்கப்படும் என இதன் போது இணக்கம் காணப்பட்டது. கொசோவோ விடுதலை இராணுவத்தினரின் ஆயுதங்கள் களையப்படவிருந்தன, எனினும், கொசோவோ விடுதலை இராணுவம் சமாதான முன்னெடுப்புக்களில் பங்கேற்கவில்லை. ஆயுதங்களை களைவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு பதிலாக கொசோவோ விடுதலை இராணுவத்தினர் சாணக்கியமாக ஆயுதக்களை விற்கு ஒப்புதல் தெரிவித்தனர்.

இந்த முடிவு கொசோவோ விடயத்தில் ஒரு மிக முக்கிய திருப்பு முனையாக அமைந்தது எனக் குறிப்பிடலாம்.

இதன் காரணமாக கொசோவோ விடுதலை இராணுவம் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஒரு ஜனநாயக கட்சியாக கொசோவோவில் தோன்றியது. கொசோவோவில் இடைக்கால ஆட்சியொன்றை அமைப்பது குறித்து பிரதான மூன்று கட்சிகளும் கவனம் செலுத்தின. ரொகுவோவின் ஜனநாயக லீக் கட்சி (LDK) , ஐக்கிய ஜனநாயக லீக் (LBD) மற்றும் கொசோவோ விடுதலை இராணுவம் (KLA) ஆகியனவே இந்த பிரதான மூன்று கட்சிகளுமாகும்.

### இடைக்கால நிர்வாகத்தின் பிரதமராக ஹசீம் தாசி நியமிக்கப்பட்டார்.

இன ஒடுக்குமுறை தற்போது தலைகீழாக மாறியது. ஒதுக்கப்பட்ட அல்பானியர்களின் மீள் வருகையினால் சேர்பிய இனத்தவர்கள் மெதுவாக கொசோவோவைவிட்டு வெளியேறத் தொடங்கினர். அல்பானியர்கள் சேர்பியர்களுக்கு எதிரான இன வன்முறைகளை சுதந்திரமாக அரங்கேற்றினர்.

கடும்போக்குடைய தேசியவாதிகளுக்கு ஐக்கிய நாடுகளின் நிர்வாகிகள் பூரண சுதந்திரம் வழங்கியிருந்தனர். சர்வதேச மன்னிப்புச் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் கொசோவோவில் மிக மோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

கொசோவோவின் தற்போதைய ஆட்சியாளர்கள் சிறுபான்மை இனத் தவர்கள் உரிமைகள் குறித்து வெளிப்படையாக கருத்து தெரிவிக்க உள்ளதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. துருக்கியர்கள், பொஸன்ஜன்க்ஸ் மற்றும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களான சேர்பியர்கள், ரோமர்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட உள்ளது.

பெப்ரவரி 17ம் திகதி கொசோவோவின் சுதந்திரப்பிரகடனம் செய்யப்பட்டதற்கு அதன் ஒத்துழைப்பு நாடுகள் உந்துசக்தியாக அமைந்திருந்தது. குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா மற்றும் இத்தாலி ஆகியனவே பிரதான நட்பு நாடுகளாகும்.

இந்த சுதந்திரப் பிரகடனம் நீண்டகாலம் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டது என்பது தெளிவாக புலனாகிறது.

2007ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் திகதி கொசோவோவில் தேர்தல்கள் இடம்பெற்றன. கொசோவோ விடுதலை இராணுவத்தின் ஆதரவு கட்சியான கொசோவோ ஜனநாயக கட்சி 34 வீதமான (220,000) வாக்குகளையும், 1998ம் ஆண்டு நேட்டோவின் தலையீட்டுன் ஆட்சியில் இருந்த கொசோவோ ஜனநாயக லீக் 22 வீதமான வாக்குகளையும் பெற்றுக் கொண்டன.

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இந்தத் தேர்தலை புறக்கணித்தனர். கொசோவோ யுத்தத்தின் பின்னர் 80 வீதமாக காணப்பட்ட வாக்களிப்பு வீதம் சடுதியாக 37 வீதமாக குறைவடைந்தது.

2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி கொசோவோ அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பு ஹாசீம் தாசிக்கு வழங்கப்படுவதாக கொசோவோ ஜனாதிபதி பெட்மீர் செஜிடு தெரிவித்தார். மேலும் விரைவாக ஆட்சியை அமைக்குமாறு தாசிக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.


2008ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி பாராளுமன்றத்தினால் ஹாசீம் தாசி பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். தாசிக்கு ஆதரவாக 85 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் பாராளுமன்றத்தில் பதிவாகின.

பிரதமர் பதவியை பொறுப்பேற்ற போது கொசோவாவிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதே தமது முதன்மையான இலட்சியம் என ஹாசீம் தாசி குறிப்பிட்டார்.

பெப்ரவரி மாதம் 16ம் திகதி நாளைய

தொழில்நுட்பம்


# அசுர வேகம்...




Compact Flash நிறுவனமானது கடந்த வருடம் CFast 2.0 மெமரி கார்ட் தொடர்பான அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டிருந்தது. இந்நிலையில் தற்போது உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்த மெமரிக் கார்ட் ஆனது உலகின் வேகம் கூடிய தரவுப்பரிமாற்றம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இதன் அடிப்படையில் இதிலுள்ள தரவுகள் 450 MB/s எனும் வேகத்தில் வாசிக்கப்படக்கூடியதாகவும், 350 MB/s எனும் வேகத்தில் பதிவேற்றம் செய்யக்கூடியதாகவும் அமைந்துள்ளது. 256 GB சேமிப்பு கொள்ளவு உடைய CFast 2.0 மெமரி கார்ட்டின் விலையானது 1,809 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனித உருவில் ஒரு ரோபோ!




பலவிதமான வடிவங்களில் ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தற்போது மனித உருவில் ஆன 'ரோபோ' உருவாக்கப்பட்டுள்ளது. எந்திரன் படத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினி எந்திரமனிதனாக நடித்து இருப்பார். அதுபோன்ற அமைப்பிலான மனித ரோபோஆக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனது உடலில் காயங்களோ அல்லது கோளோரோ ஏற்பட்டால் அதை அந்த ரோபோவே 2 மணி நேரத்தில் சரி செய்து கொள்ளும் திறன் படைத்தது.

இதை ஸ்பெயின் நாட்டை சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். தாங்கள் உருவாக்கிய இந்த ரோபோவை ரேஷர் பிளேடால் 2 துண்டுகளாக வெட்டி போட்டனர். ஆனால் 2 மணி நேரத்தில் அதை தானே 'ரோபோ' சரி செய்து ஒட்டிக்கொண்டது. இது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இது மிமெடிக் என்ற உலோக கலவையினால் ஆனது. இந்த உலோக கலவையை எலெக்ட்ரிக் பொருட்கள், கார்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்களில் உள்ள பிளாஸ்டிக் உதிரி பாகங்களுக்கு மாற்றாக பயன்படுத்த முடியும்.



# விற்பனையில் சாதனை



வளரும் நாடுகளில் உயர்ந்து வரும் ஸ்மாட் போன் பயன்பாடு மற்றும் அனைவரும் வாங்கும் விலையில் ஸ்மாட் போன்களின் வருகை ஆகியவற்றால், நடப்பு 2013ஆம் ஆண்டில், ஸ்மாட் போன்களின் விற்பனை 100 கோடி என்ற எண்ணிக்கையை எட்டும் என்று இதனைத் தொடர்ந்து கண்காணித்து வரும் ஐ.டி.சி. அமைப்பு அறிவித்துள்ளது. பலருக்கு, ஸ்மார்ட் போன்கள் ஓர் அத்தியாவசியத் தேவையாக மாறி உள்ளது. 2017ஆம் ஆண்டளவில் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில், மொபைல் போன்கள் என்றால், அவை ஸ்மாட் போன்களாக மட்டுமே இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் இயங்கும் ஆப்பரேட்டிங் சிஸ்டங்களாக, ஆண்ட்ராய்ட் மற்றும் ஐ.ஓ.எஸ். முதல் இரண்டு இடத்தைப் பிடித்திருக்கும். 2013ல் இதுவரை விற்பனையான ஸ்மாட் போன்களில், 75.3% போன்களில் ஆண்ட்ராய்ட் சிஸ்டத்துடன் சென்றுள்ளன. இவற்றில் முதல் இடம் பிடித்துள்ள நிறுவனம் சாம்சங். இதே காலத்தில், ஆப்பிள் நிறுவனத்தின் ஐ.ஓ.எஸ்., 16.9% இடத்தைப் பிடித்துள்ளன.

மைக்ரோசாப்ட், நோக்கியாவின் சாதனங்கள் பிரிவினை முழுமையாக காப்புரிமை உட்பட வாங்கியுள்ளதால், அடுத்த ஆண்டில், இந்நிலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. அதேபோல, ஆப்பிள் நிறுவனம், சீனாவினைத் திடீரென அன்போடு பார்க்கத் தொடங்கியுள்ளதால், அதன் பங்கும் அடுத்த ஆண்டு மாறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

# ஸ்மாட் கைக்கடிகாரம்

கைப்பேசி உல்கை புரட்டிப்போட்ட ஸ்மாட் தொழில்நுட்பமானது தற்போது கைக்கடிகாரங்களையும் விட்டுவைக்கவில்லை. பல நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு ஸ்மாட் கடிகாரங்களை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்திவரும் நிலையில் தற்போது Omate TrueSmart எனும் புத்தம் புதிய ஸ்மாட் கடிகாரமும் இணைந்துள்ளது.

Dual Core Cortex A7 1.3GHz வேகம் கொண்ட Processor, Android 4.2.2 Jelly Bean இயங்குதளத்தினைக் கொண்ட இக்கடிகாரமானது சிறந்த பயனர் இடைமுகத்தினை கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் பிரதான நினைவகமாக 512MB RAM, சேமிப்பு நினைவகமாக 4GB என்பன தரப்பட்டுள்ளது.

## அறிமுகம்

அதி துல்லியமாக புகைப்படங்களை எடுக்கக்கூடிய 20.7 மெகபிக்சல்கள் உடைய கமெராவுடன் Sony Xperia Z1 ஸ்மாட் கைப்பேசியானது பிரித்தானியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கூகுளின் Android 4.2.2 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இக்கைப்பேசியானது 5 அங்குல அளவுடைய HD தொடுதிரையினைக் கொண்டுள்ளது. இதில் 2.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Processor, பிரதான நினைவகமாக 2GB RAM போன்றனவும் காணப்படுகின்றன. 16GB சேமிப்பு நினைவகம் தரப்பட்டுள்ளதுடன் MicroSD கார்ட்டின் உதவியுடன் 64GB வரை அதிகரித்துக்கொள்ளும் வசதியும் தரப்பட்டுள்ளது. இவற்றுடன் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென 2 மெகாபிக்சல்கள் உடைய துணைக் கமெராவும் காணப்படுகின்றது.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே
இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"


A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# அரசியல் அராஜகம்



ஒரு சிறுவன் தன் தந்தையிடம் அரசியல் அராஜகம் என்றால் என்ன என்று கேட்டான்.

**தந்தை:**

அதை உனக்கு இந்த வயதில் சொல்லிப் புரியவைக்க முடியாது மகனே. எனினும் விளங்கும் வகையில் கதையாக உனக்கு சொல்கிறேன் கேள்.

நான் வீட்டு செலவினங்களுக்கு பணம் கொடுக்கிறேன். எனவே என்னை முதலாளித்துவம் என்று வைத்துக்கொள்.

உன் தாய் வீட்டு விவகாரங்களை கவனிக்கிறாள். எனவே உன் தாயை அரசாங்கம் என்று வைத்துக்கொள்

நீ உன் தாயின் பொறுப்பில் இருக்கின்றாய். எனவே உன்னை குடிமக்கள் என்று வைத்துக்கொள்.

உனக்கு ஒரு குழந்தை தம்பி இருக்கிறான். அவன் எமது எதிர்பார்ப்பு. அவனை எதிர்காலம் என்று வைத்துக்கொள். எங்களிடம் சேவை செய்யும் வேலைக் காரியை மனித வளம் என்று வைத்துக்கொள்.

இனி நீ போய் நன்கு சிந்தித்துப் பார். சில வேலை உன் கேள்விக்கு விடை கண்டுகொள்வாய்.

சிறுவன் அன்று இரவு தூங்க முடியாமல் குழம்பிப்போய் எழுந்து விட்டான்.

அப்போது குழந்தை அழும் சப்தம் கேட்டது. எழுந்து சென்று பார்தான். குழந்தையின் அணையாடை ஈரமாக இருந்தது. அது தன்னை தானே அசுத்தப்படுத்திக் கொண்டுள்ளதை அவதானித்தான்.

ஓடிப்போய் அம்மாவிடம் சொல்லுவோம் என்று வந்தான். ஆனால் அம்மா ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருந்தாள். எழுப்ப முடியவில்லை.

அப்பாவையும் காணவில்லை. அப்பாவை தேடினான், அப்போது வேலைக் காரியின் அறையில் சத்தம் கேட்டது.

அடுத்த நாள் மகன் தந்தையிடம் கூறினான். தந்தையே அரசியல் அராஜகம் என்றால் என்ன என்பததை மிகவும் நன்றாகவே புரிந்து கொண்டடேன்.

தந்தை ஆச்சரியத்துடன் எப்படி?! சொல்லு பார்க்கலாம்?

**மகன் :**

முதலாளித்துவம் மனிதவளத்துடன் லீலைகளில் ஈடுபடும்போதும் அரசாங்கம் ஆழ்ந்த தூக்கத்தில் சுகம் காணும் போதும் குடிமக்கள் புறக்கணிக்கப்பட்டு திக்குத் தெரியாமால் தடுமாறுமாறுவார்கள். எதிர்காலம் துர்நாற்றம் வீசும் சகதில் வீழ்ந்துவிடும். அப்போது அரசியல் அராஜகம் தொடங்கிவிட்டது என அர்த்தம்.

தந்தை திகைத்துப் போனார்.

## வாரம் ஒரு திருக்குறள்



**அவை அறிதல்**

**கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுடையது இல்.**

குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்று இல்லை.

குறள்:1021

# தெரியுமா?

❖ மராட்டியர், சீக்கியர் மற்றும் ஜாட்டுகளை போரில் வென்றபோது ஒரங்கசீப்புக்கு வயது 85.

❖ வங்க மன்னன் துக்ரில்கானை நேருக்கு நேர் போரிட்டுக் கொன்றபோது அடிமை வம்சத்து அரசன் பால்பனுக்கு வயது 80.

❖ வின்ஸ்டன் சர்ச்சில் அபாரமான நினைவாற்றல் படைத்தவர். ஒருவர் எவ்வளவு நேரம் பேசினாலும், அவர் பேசியவற்றை ஒரு சொல் விடாமல் திருப்பிச் சொல்லும் ஆற்றல் படைத்தவர். முழுநீள ஷேக்ஸ்பியர் நாடகத்தை முழுமையாக மனப்பாடமாக ஒப்பிக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

❖ மணி, நிமிடம் ஆகியவற்றைக் காட்டும் கடிகாரத்தை முதன் முதலாகக் கண்டுபிடித்தது இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஓவியர் லியனார்டோ டாவின்சி.

❖ மக்காச் சோளத்தின் தாயகம் அமெரிக்கா. அங்கிருந்து கொலம்பஸ் மூலம் மக்காச் சோளம் ஐரோப்பாவுக்குப் பரவியது. பின்னர் அது போர்த்துக்கீசியர்களால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது.

❖ முதன்முதலில் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட பொருள் சிலுவை.

❖ மாவீரன் அலெக்ஸாண்டர் திருமணம் செய்துகொள்ளாத கட்டைப் பிரம்மச்சாரி.

❖ மாஸ்கோ வானொலி நிலையத்திலிருந்து 75 மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

❖ அரேபியாவில் ஆறுகளே இல்லை.

❖ உலகில் 26 நாடுகளில் கடற்கரையே இல்லை.

# வியப்பூட்டும் சீனா

**பின்னல்:** மங்கோலியத் தலைவர் செங்கிஸ்கான் பேரன் குப்ளேகான். அவன் கி.பி.1286-இல் சீனப் பேரரசனானான். சீனர்களை தான் அடிமைப்படுத்தியதன் அடையாளமாக, அவர்கள் தங்கள் தலைமுடியைப் பின்னலிடும்படி ஆணையிட்டான். அதனால்தான் சீனர்கள் ஆண்களாக இருந்தாலும் பின்னல் போட்டுக் கொள்ள ஆரம்பித்தனர்.

**சின்கூய்:** காட்ஷுஹ என்ற சீன மன்னனிடம் சின்கூய் என்பவன் அமைச்சராக இருந்தான். அவன் எதிரிகளிடம் தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்தான் என்று சீனர்கள் நம்புகிறார்கள். அவன் மேலுள்ள தங்கள் வெறுப்பைக் காட்ட, எச்சில் துப்பும் தொட்டிக்கு "சின்கூய்" என்று பெயரிட்டனர். இப்பொழுதும் அங்கு அந்தப் பெயர்தான் வழக்கத்தில் உள்ளது.


**சீனத் தலைநகர் மாற்றம்:** சீனாவின் தலைநகராக ஆரம்பத்தில் நான்கிங் நகரம்தான் இருந்தது. மிங் வம்சத்து மன்னருக்கும் லிங்வென் என்ற அலுவலருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. லிங்வென் நியாயத்தைப் பேசினான். அதனால் மன்னருக்கு அவமானம் ஏற்பட்டது. அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அவன் மன்னிப்பு கேட்கவில்லை. மாறாக அவன், "அரசன் ஒரு துரோகி. அவனிடம் நான் மன்னிப்பு கேட்கமாட்டேன். நான் சாகும்போதும் செத்த பின்பும் அவனை "துரோகி" என்றே அழைப்பேன்.." என்றான்.

மன்னனுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. உடனே அவன் தலையை வெட்டுங்கள் என்றான். அவன் தலை வெட்டப்பட்டது. அவன் கழுத்திலிருந்து வெளியே வந்த இரத்தம் தரையில் விழுந்தது. அந்த ரத்தம் "துரோகி" என்ற சீன எழுத்துக்களைப் போல தரையில் சிதறியது. அதைக் கண்ட மன்னன் நடுங்கினான். தனக்கு ஆபத்து வரும் என்று பயந்தான். அதனால் உடனே தலைநகரை நான்கிங்கிலிருந்து பீகிங்கிற்கு மாற்றிவிட்டான்.

**2300 மைல்கள் எடுத்துச் செல்லப்பட்ட சடலம்:**

சீனத் தளபதியின் என்பவரது சடலம் 1912-ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் திகதி பீகிங்கிலிருந்து புறப்பட்டு 2300 மைல்கள் கொண்டுசெல்லப்பட்டு 1913 ஜுலை 1-ஆம் திகதி, 14 மாதங்கள் கடந்து சிக்கியாங்கில் அடக்கம் செய்யப்பட்டது. இத்தனைக்காலம், கடந்து, கொண்டு செல்லப்பட்ட சவ ஊர்வலம் உலகிலேயே அது ஒன்றுதான்!

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 01.10.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1011**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1009**

**தி.அபிராமி, சாவகச்சேரி தெற்கு,**
**சாவகச்சேரி.**

பரிசுக்குரியவர்: 1009

**பாராட்டுக்குரியவர்கள்**

01. அ.சாருஜன். உடுவில் மேற்கு சுண்ணாகம்.
02. கு.மதினி. கைதடி தெற்கு கைதடி.
03. ரி.வாகீஸன். கண்டி
04. நா.ரகுந்தினி. கொழும்பு 13.
05. ஆ.கிருபதீசன். பண்டத்தரிப்பு மேற்கு.
07. சே.மதனா. நாவற்குழி கிழக்கு.
08. தி.சேபனா. கல்பிட்டி.

# தகவல்கள் 3

**கட்டளை:**

காந்தியடிகள் நடத்தி வந்த வார்தா ஆசிரமத்தில் எவரும் உழைக்காமல் ஒரு பருக்கைச் சோறுகூட உண்ண முடியாது. அந்த உழைப்புக்குச் "சிரமதானம" என்று பெயர். காந்தியடிகளைக் காண பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் ஆசிரமத்துக்கு வந்தபடியே இருப்பார்கள். எவ்வளவு பெரிய தலைவர்களாயினும் உழைக்காமல் உணவு உண்ணக் கூடாதென்பது விதி.

ஒருமுறை ஜவாஹர்லால் நேரு, உழைப்புக் கொடை வழங்காமல், நேரே உணவருந்தும் பகுதிக்குப் போய்விட்டார். உடனே அங்கிருந்த தொண்டர் ஒருவர் நேருவுக்கு அதை நினைவூட்டினார்.

அவசரத்தில் மறந்து போய் அங்கே வந்துவிட்டாலும், நேரு உடனே எழுந்து சென்று, ஆசிரமத்துக்குப் பின்புறம் குவித்து வைத்திருந்த தட்டுகளைக் கழுவிச் சுத்தம் செய்யும் பணியைச் சிறிது நேரம் செய்துவிட்டு வந்தார். அதன்பிறகுதான் நேருவுக்கு உணவு உண்ண அங்கே அனுமதி கிடைத்தது.

**மன உறுதி:**

மாவீரன் நெப்போலியன், ஒருமுறை தனது தளபதியிடம், "நம்மிடம் லட்சம் வீரர்கள் இருக்கிறார்கள் அல்லவா?" என்று கேட்டார்.

அதற்கு, அந்தத் தளபதி, "அறுபதாயிரம் பேர்தான் உள்ளனர்" என்றார். உடனே நெப்போலியன், "அவர்களோடு என்னையும் சேர்த்துக் கொள். ஒரு லட்சமாகி விடும்..." என்றார். தனது வீரத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் நெப்போலியன்.

**பண்பு:**

விவேகானந்தர் இந்து மதம் பற்றி மேலை நாடுகளில் சொற்பொழிவாற்றியபின், தாயகம் திரும்புகையில் இலங்கை வழியாக இராமநாதபுரம் வந்து சேர்ந்தார். மன்னர் பாஸ்கர சேதுபதி, விவேகானந்தரை வரவேற்கச் சென்றிருந்தார்.

சுவாமிஜியிடம் மன்னர், "படகிலிருந்து என் தலைமீது கால் வைத்து, அதன்பிறகுதான் தாங்கள் மண்ணில் கால் வைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். ஆனால் சுவாமிஜி, அதனை ஏற்க மறுத்து விட்டார். உடனே மன்னர், "துறவிக்கு முன் வேந்தன் தூசு" என்றார்.

இதைக் கேட்டு சற்றுத் தயங்கிய சுவாமிஜி, "சரி, தாங்கள் தலைப்பாகை கட்டிக் கொள்ளுங்கள், அதன் மீது கால் வைத்து நான் இறங்குகிறேன்" என்றார். மன்னர் தலைப்பாகை கட்டிக் கொண்டிருக்கும் போது திடீரென்று விவேகானந்தர் தரையில் குதித்து மண்ணில் தனது காலை வைத்து இறங்கிவிட்டார். என்னே விவேகானந்தரின் அடக்கம்!

# இடி அமீன்

**அற்புதன் எழுதிய**

**உண்மைத் தொடர்...**

**அதிர் இடி 05**



மகளின் அமீன் பைத்தியம் தனது பதவிக்கு ஆபத்தாகப் போகிறது என்பது தந்தைக்கு தெரியவில்லை. அமீனிடம் அவர் கணக்கு கேட்கவில்லை.

ஆனால் கணக்கு கேட்கப் பட்டது. கேட்கப்பட்ட இடம் உகண்டா பாராளுமன்றம்.

இடி அமீனின் வங்கிக்கணக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒச்சேங் என்பவர் கேட்டார்; "ஒரு இராணுவ அதிகாரியிடம் இத்தனை பணம் எப்படிக் குவிந்தது? ஆராய உடனே தேவை விசாரணைக் கமிஷன்!"

குண்டுவீசப் பட்டதுபோல - அதிர்ந்துபோன பிரதமர் அடுத்து வகுத்த திட்டத்தில் அமீனுக்கு திருப்பம் காத்திருந்தது.

ஒரு சாதாரண இராணுவ அதிகாரியின் வங்கிக்கணக்கில் இத்தனை பணம் எப்படி வந்தது? என்று உகண்டா பாராளுமன்றத்தில் ஒலித்த குரலுக்கு சொந்தக்காரர் ஒச்சேங் எம்.பி.

பிரதமர் ஒபேடேவுக்கும், இடி அமீனுக்கும் அக்குரல் இடியாக செவியில் விழுந்தது.

உகண்டா இராணுவத் தளபதிக்கு பிரதமர் ஒபேடேவை பிடிக்கவே பிடிக்காது.

இராணுவத் தளபதிக்கே தெரியாமல்தான் ஸயார் கிளர்ச்சியாளர்களுடன் அமீன் மூலம் பிரதமர் ஒபேடே தொடர்பு வைத்திருந்தார்.

தளபதி நேரடியாக அமீனை தொடர்புகொண்டார்.

"ஸயார் கிளர்ச்சியாளர்களுக்கும் உமக்கும் என்ன தொடர்பு?" என்று கேட்டார்.

"சொல்ல உத்தரவில்லை" என்றான் இடிஅமீன் திடமான குரலில்.

"யார் உத்தரவிடவேண்டும்?" என்றுகேட்ட தளபதியின் குரலில் சினம் துளிர்த்தது.

'பிரதமர்' என்றான் அமீன் சற்றும் அசராத தொனியில்.

"நான்தான் இங்கு இராணுவத் தளபதி. நீ எனக்கு கீழ்ப்பட்ட அதிகாரி. அதாவது உனக்கு நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது, இல்லாவிட்டால் பதில் சொல்லிக் கொண்டிருப்பேனா?" என்றுவிட்டு அமீன் சிரித்த சிரிப்பு மரியாதைக் குறைவானது.

உயரதிகாரிகள் முன்பாக உரத்துப் பேசவே ஏனைய அதிகாரிகளும், படைவீரர்களும் துணியமாட்டார்கள்.

இடிஅமீன் இராணுவத் தளபதியைக் கூட துச்சமாக மதித்து பதிலளித்தும், சிரித்தும் அவன் பின்னால் வலுவான கரம் ஒன்று இருக்கும் துணிச்சலில்தான் என்பதை தளபதியும் புரிந்துகொண்டார்.

"முதலில் மரியாதையைக் கற்றுக்கொள். இப்போதே உன்னை வேலையில் இருந்து தூக்கிப்போட என்னால் முடியும்"

சொல்லிவிட்டு, அமீனின் பதிலுக்குக் காத்திருக்காமல் விருட்டென்று வென்றுவிட்டார் தளபதி.

மேலும் தாமதித்தால் தான் பொறுமை இழக்கநேரும் என்பதால்தான் தளபதி விரைவாக அமீனைவிட்டு விலகினார்.

தளபதியின் முதுகையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த இடி அமீன் ஒருநாள் இவனும் என் முன்னால் மண்டியிடத்தான் போகிறான் என்று நினைத்துக்கொண்டான்.


அப்படி நினைத்துப் பார்ப்பதுகூட அவனுக்கு ஒருவித சந்தோசமாகவும், குரூர திருப்தியாகவும் இருந்தது.

அமீனிடம் இருந்துசென்ற தளபதி ஜனாதிபதி கபேகாவைச் சந்தித்தார். அமீனின் வங்கிக்கணக்கை இரகசியமாக மோப்பம் பிடித்தார்கள்.

ஏகப்பட்ட பணம் கணக்கில் இருந்தது. "இனியும் தாமதித்தால் பாம்புக்கு பால் வார்ப்பதுடன், விஷப் பல்லும் வளர இடமளிப்பதாகிவிடும்" என்றார் தளபதி.

பாராளுமன்ற உறுப்பினரான ஒச்சேங்கிடம் வங்கிக் கணக்குப் பட்டியலையும் கொடுத்து, பாராளுமன்றத்தில் பூகம்பத்தை கிளப்பவும் தூண்டிவிட்டார்.

"விசாரணைக் கமிஷன் வையுங்கள்" என்றார் ஒச்சேங். பாராளுமன்றம் அதற்கு இணங்கியது. பிரதமர் ஒபேடே கதி கலங்கிப்போனார்.



விசாரணைக் கமிஷன் வைத்தால் இடி அமீனுக்கு மட்டுமல்ல, தன் தலைக்கும் ஆபத்து என்பதை உணர்ந்த பிரதமர் உஷாரானார்.

உடனடியாக அமீனை தன் இல்லத்துக்கு அழைத்தார். "படைக்குள் எமக்கு விசுவாசமான ஆட்களை உடனே திரட்டு" என்று உத்தரவிட்டார்.

அந்த உத்தரவு அமீனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல இருந்தது.

உகண்டா படைகளுக்கும் அமீன் போன்ற கவர்ச்சிகரமான, தடாலடியான ஒருவர் தங்கள் தளபதியாவதில் விருப்பம் இருந்தது.

அதனால் அமீனின் முயற்சிகளுக்கு படைக்குள் ஆதரவு கிடைத்தது.

இடி அமீனிடம் இருந்து நம்பிக்கையூட்டும் தகவல்கள் கிடைத்ததும் பிரதமர் ஒபேடே அதிரடியான நடவடிக்கைகளில் இறங்கினார்.

முதல் காரியமாக நாட்டின் அரசியல் யாப்பை நீக்கினார், இரண்டாவது காரியமாக அமைச்சரவையில் இருந்து ஐந்துபேரை தூக்கி எறிந்தார்.

ஐந்துபேரும் அமீனுக்கு எதிரான விவாதத்தில் பங்குகொண்டவர்கள்.

அந்த ஐந்துபேரையும் தூக்கி எறியுமாறு பிரமருக்கு ஆலோசனை கூறியவள் அவரது மகள்.

ஆலோசனை கூறும்போது அவளது மடியில் புரண்டுகொண்டிருந்தவன் இடி அமீன்.

பிரதமரின் மகளை வைத்து தன் விருப்பப்படி காய்களை நகர்த்த இடி அமீன் ஆரம்பித்தது அப்போதுதான்.

பிரதமரின் மகளது உடைகளை ஒவ்வொன்றாக களைந்து கொண்டிருந்த அமீன், "உடனடியாக உன் தந்தை ஜனாதிபதியாக வேண்டும்." என்றான்.

அவனை இழுத்து தன்மேல் படரவிட்டபடி அவள் சொன்னாள்; "என் தந்தை ஜனாதிபதியானால் இராணுவத் தளபதி நீதான்!" இடி அமீன் பேய்த்தனமான சிரிப்புடன் அவளை ஆக்கிரமித்தான்.

ஜனாதிபதி கபேகாவை ஜனாதிபதி பதவியில் இருந்து தூக்கி வீசிவிட்டு, தன்னை நாட்டின் ஜனாதிபதியாக பிரகடனப்படுத்திக் கொண்டார் ஒபேடே.

ஜனாதிபதி கபோகாவும் அவரது ஆதரவாளர்களும் கொதித்து எழுந்தனர்.

கபேகாவின் ஆதரவாளர்கள் கிளர்ந்தெழுவார்கள் என்பதை ஒபேடேவும், அமீனும் முன்கூட்டியே எதிர்பார்த்தனர்.

அதனால் கபேகாவை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு முன்பாக, அவருக்கு நெருக்கமான உயர் அதிகாரிகளை இரவோடு இரவாக கைது செய்துமுடித்தனர்.

நீதிபதி ஒருவரை சிறைப்பிடிக்க அமீனே நேரில் சென்றிருந்தான். "என்னைச் சிறைப்பிடிக்க நீ யார்?" என்றார் நீதிபதி.

இங்கே பார்! நீதிமன்றத்தில் உனது கத்தலை வைத்துக்கொள். இங்கு நான்தான் உனக்கு நீதிபதி, உனக்கு சிறைத் தண்டனை தருவதா?, மரண தண்டனை தரலாமா? என்பதை தீர்மானிக்க எனக்கு ஒரு நொடிபோதும்" என்று அமீன் போட்ட போட்டில் நீதிபதியே நடுங்கிப்போனார்.

(தொடரும்)

---

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

**வாசகர்களின் கவனத்திற்கு...**
முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, (முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 540

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **04.10.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 540
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 538 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ப | 3 ம் | 4 ம் | 5 க | 6 னு |
| 7 ம் | 8 கா | 9 த | | 11 த | 12 ன் |
| 13 ப | 14 ண் | 15 ணி | 16 ழ | 17 ந் | 18 து |
| 19 ல | 20 ம் | 21 வ | | 23 ட் | |
| 25 வ | 26 டி | | 28 ம் | 29 ச | 30 து |
| 31 ன் | | 33 க் | 34 யா | 35 டி | 36 கோ |

**இடமிருந்து வலம்**

01. யானை. (குழம்பியுள்ளது)
07. சாரப்படுத்தல். (திரும்பியுள்ளது)
15. இவ்விடம். (திரும்பியுள்ளது)
19. அங்க உறுப்புகளில் ஒன்று.
23. கூந்தற்கமுகு. கடைசி இரண்டு எழுத்துவிடுபட்டுள்ளது.
25. ஒரு வகைத் துகில். (திரும்பியுள்ளது)
28. விவாகமான நிலை. (குழம்பியுள்ளது)
31. அனுகூலப்பட்டது.
35. அரிசி, தவிடு பிரித்தெடுத்தல், கடைசி மூன்றெழுத்து விடுபட்டுள்ளது.

**மேலிருந்து கீழ்**

01. பதினாறு பேறுகள்.
02. அக்கினி. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
03. கூப்பிடு தூரம். துன்பம். (குழம்பியுள்ளது)
04. இது கிழங்கு வகையைச் சேர்ந்தது. (குழம்பியுள்ளது)
05. ஜாதகக்கணிப்பு. (குழம்பியுள்ளது)
18. மொண்டிசோரி கல்விமுறை முதன்முதல் இந்த நாட்டைச் சேர்ந்த மரியா மொண்டிசோரி என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.
20. கலங்கல் நீர்; பண்டசாலை. (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 538 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**செ.மந்தாயினி, சேச் வீதி, பலாங்கொடை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. மா.சாந்தன், சிவன் கோவில் வீதி, புத்தூர்.
02. தெ.அம்பிகா, நிவ்எல்பிட்டிய, கெலிஓயா.
03. மு.சாமினி, அல்வாய் தெற்கு, அல்வாய்.
04. தொ.ரமேஷ், சுதுமலை மேற்கு, சுதுமலை.
05. தா.பார்கவி, சுதந்திரபுரம், முல்லைத்தீவு.
06. க.அடைக்கலநாதன், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
07. பொ.நிகில், குருநகர், யாழ்ப்பாணம்.
08. அ.மரீனா, கடற்கரை வீதி, மன்னார்.
09. ப.ராஜ்குமார், நுணாவில்.



வானவராயன்



அங்குசம்

# நண்பர்களுக்கு பிரத்தியேக காட்சி

ஷங்கரின் உதவியாளரான அட்லியின் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ராஜா ராணி. இப்படத்தில் ஆர்யா, நயன்தாரா, ஜெய், நஸ்ரியா நசிம், சத்யராஜ், சந்தானம், சத்யன் மற்றும் பலர் நடித்துள்ளனர். இப்படத்தை பாக்ஸ் ஸ்டார் ஸ்டுடியோஸ் நிறுவனத்துடன் இணைந்து இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் தயாரித்துள்ளார். ஜீ.வி.பிரகா' குமார் இசையமைத்துள்ளார். இப்படத்தை ஆர்யா தனது நண்பர்களுக்காக பிரத்யேகமாக திரையிட முடிவு செய்துள்ளார். இந்த பிரத்யேக காட்சியை படம் வெளியாகும் தினமான வருகிற செப்டம்பர் 27 ஆம் தேதி அதிகாலை 6 மணிக்கு, 'பெட்-காபி' ஷோவாக சென்னை 4பிரேம்ஸில் திரையிடப்படவுள்ளது.

# தல படத்துக்கு அமோக வரவேற்பு

பில்லா படத்திற்கு பிறகு அஜித் - விஷ்ணுவர்தன் கூட்டணியில் உருவாகியிருக்கும் படம் ஆரம்பம். இப்படத்தில் அஜித்துடன், ஆர்யா, நயன்தாரா, டாப்சி, ராணா டகுபதி, கிஷோர் மற்றும் பலர் நடித்துள்ளனர். இப்படத்தை ஸ்ரீ சத்யா சாய் மூவீஸ் சார்பில் ஏ.ரகுராம் தயாரித்துள்ளார்.

யுவன் 'ங்கர் ராஜா இசையமைத்திருக்கும் இப்படத்தின் பாடல்கள் சமீபத்தில் வெளியாகி ஐ-டியுன்ஸில் முதல் இடம் பிடித்துள்ளது. அதேபோல், செப்டம்பர் 19ம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்ட இதன் டிரைலரும் தல ரசிகர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பு ரசிகர்களிடமும் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

யூடியுபில் தற்போது வரை இதன் டிரைலர் 1,267,372 பார்வையாளர்களை அள்ளியுள்ளது. மங்காத்தா படத்திற்கு பிறகு, தல சால்ட் அண்ட் பெப்பர் லுக்கில் தோன்றும் இப்படம் ஆக்'ன் கலந்த மாஸ் என்டர்டெயின்மெண்டாக ரசிகர்களுக்கு விருந்தளிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இப்படம் வருகிற தீபாவளி பட்டாசுகளில், கார்த்தியின் ஆல் இன் ஆல் அழகு ராஜா, ஆர்யாவின் இரண்டாம் உலகம், விஷாலின் பாண்டிய நாடு ஆகியப் படங்களுடன் வெடிக்கவிருக்கிறது.





# டப்பிங்கிலும் கலக்குகிறார் ஓவியா!

நடிகையாக மட்டுமல்ல டப்பிங் பேசியும் கலக்கி வருகிறார் ஓவியா. தற்போது இவர் நடித்த மூடர்கூடம் படம் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து இசை அமைப்பாளர் ஜீ.வி.பிரகா'குமாரின் தயாரிப்பான மதயானைக்கூட்டம் வெளியாகவுள்ளது. இந்தப் படத்தில் ஓவியா ஒரு மலையாளி மியூசிக் ஸ்டூடன்டாக நடிக்கிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது டப்பிங் வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. இதில் ஓவியா வின் கதாபாத்திரம் தம- ிழும், மலையாளமும் கலந்து பேசக்கூடிய மாதிரி அமைந்திருப்பதால் அந்த கதாபாத்திரத்திற்கு மலையாளியான ஓவியாவே குரல் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்த படக்குழுவினர் அவரையே டப்பிங் பேச வைத்துள்ளனர். இந்தப் படத்திற்கு முதன் முதலாக டப்பிங் பேசியிருப்பது வித்தியாசமான ஒரு அனுபவம் என்று சொன்ன ஓவியா, வாய்ப்பு கொடுத்தால் இனி வரும் படங்களிலும் டப்பிங் பேச தயாரா இருக்கேன் என்றும் கூறியிருக்கிறார்.

# ரஹ்மானின் மெட்டுக்கு வரி வரைந்தார் கார்க்கி!

அந்நியன் படத்திற்கு பிறகு ஷங்கர் - விக்ரம் கூட்டணயில் உருவாகி வரும் திரைப்படம் ஐ. இப்படத்தில் விக்ரமுடன், எமி ஜாக்சன், சந்தானம், சுரேஷ் கோபி மற்றும் பலர் நடித்து வருகின்றனர். ஆஸ்கர் பிலிம்ஸ் சார்பில் வி.ரவிச்சந்திரன் தயாரிக்கும் இப்படத்திற்கு இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துவருகிறார். தற்போது இளைஞர்களின் தனது புதுபுது டெக்னாலாஜி வரிகளால் கவனம் ஈர்த்த மதன் கார்க்கி இதில் பாடல் எழுதி வருகிறார். தற்போது இப்படத்திற்காக இவர் எழுதிய மூன்றாவது பாடல் பதிவு செய்யப்பட்டது. அப்பொழுது ஷங்கர் மற்றும் ரஹ்மான் மதன் கார்க்கியை வெகுவாக பாராட்டினார்களாம்.

# மாமா சொல் வேதம்...

எதுவாக இருந்தாலும் தன் மாமாவை கேட்டு முடிவு எடுக்கிறாராம் பரதேசி நடிகை தன்ஷிகா. பத்திரிகையாளர் நிகழ்ச்சியில் பங்கேற்ற தன்ஷிகாவிடம் பேட்டி எடுக்க சென்றபோது, தன்ிகா, 'பேட்டியா உங்களுக்கா கொடுக்க முடியாது. எதுவாக இருந்தாலும் என் மாமாவை கேட்டுத்தான் கொடுப்பேன்', என்று தன் உதவியாளரை அழைத்து தன் மாமாவை கூப்பிடும் படி சொல்லியுள்ளார் அங்கே வந்த அவரது மாமா யார் என்று பார்த்தால் ஒருகாலத்தில் நடிகைகள் சிம்ரன், விந்தியா உள்ளிட்டோருக்கு அப்போது மானேஜராக இருந்த அருண் தான். தன்ஷிகா அருகில் வந்த அருண், தன்ஷிகாவை பற்றி நிறைய அவதூறு செய்திகள் எழுதுகிறீர்கள், உங்களுக்கெல்லாம் பேட்டியெல்லாம் கொடுக்க முடியாது என்று காட்டுகத்து கத்தியுள்ளாராம்.



# உருக்குகிறது மெழுகுதிரி

ஷாம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு '6 மெழுகுவர்த்தி' படத்தை தயாரித்து, நடித்துள்ளார்.

ஷாம்- பூனம் தம்பதியர் தங்களின் ஒரே மகனின் 6வது பிறந்த நாளை கொண்டாடி விட்டு கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கு மகனை தவற விடுகிறார்கள். மகனை கடத்தல் கும்பல் கடத்தியிருப்பது தெரிய வருகிறது. இதற்கு பொலிஸ் எந்த உதவியும் செய்ய முடியாத சூழலில் தன் மகனைத் தேடி ஷாமே அலைகிறார். குழந்தையை மாநிலம் மாநிலமாக மாற்றி மாற்றி கொண்டு செல்கிறது கடத்தல் கும்பல். அந்த கும்பலில் உள்ள ஒவ்வொருவரையும் பிடித்து பின் தொடர்கிறார் ஷாம். கடைசியில் தன் மகனை கண்டுபிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தாரா? என்பது மீதிக் கதை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு முழுப் படத் திலும் முக்கிய கதாபாத் திரத் தில் நடித்து இருக் கிறார் 'ாம். இந்த படத்திற்காக பல்வேறு தோற்றங்களில் தோன்றுகிறார். இதற்காக இவர் கடினமாக உழைத்திருப்பது ஒவ்வொரு காட்சிகளிலும் தெரிகிறது. மகனை இழந்த தந்தை படும் வேதனைகளை தன் நடிப்பால் கண்முன் நிறுத்தியிருக்கிறார் ஷாம். பின்னணி இசையில் மிரட்டியிருக்கிறார் ஸ்ரீகாந்த் தேவா. கிரு'ணசாமியின் ஒளிப்பதிவு படத்திற்கு மேலும் ஒரு பலம். கதை, திரைக்கதை, பாடல்கள் எழுதி இயக்கியிருக் கிறார் வி.இசட். துரை. ஆக, மொத்தத்தில் '6 மெழுகுவர்த்திகள்' நம்மை உருக்கிவிடுகின்றது!

# முந்துகிற...

களவாணி, வாகை ...
அடுத்து சற்குணம் இய...
படம் நய்யாண்டி. இதில்...
நடிக்கிறார். இவருக்கு ...
நசீம். இவர்கள் தவிர ...
சூரி, சத்யன், லட்சுமி ர...
நடிக்கிறார்கள். இயக்கு...
ஜிப்ரான் இந்த படத்துக்...
பொல்லாதவன், ...
தொடர்ந்து பைவ் ஸ்டா...
தயாரிக்கிறார். குத்துவி...
வைத்திருக்கும் நாயகன்...
நாயகி இவர்கள் இருவ...
உண்டாகும் காதல், இ...
அக்டோபர் 11ம்...
வெளி வருவதாக திட்ட...
சில தினங்களுக்கு முன்...
வெளியிடப்பட்டது.

இந்நிலையில், ரசிகர்...
தினத்திற்க முன்...
படம் வெளியா...
சூசகமாக த...
பக்கத்தில் ...
வெளிய்யி...
தனுஷ்.








## நீச்சல் உடைக்கு 'நோ'

தெலுங்கின் பிரபல நடிகையான இவர் தமிழில் கார்த்தி, விஜய் போன்ற முன்னணி நடிகர்களுடன் ஜோடி போட்டுள்ளார். தற்போது விஜய்யுடன் இணைந்து ஜில்லா படத்தில் நடித்து வருகிறார். இவரிடம், நீச்சல் உடையில் நடிப்பது குறித்து கேட்டால் டென்'ன் ஆகிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், எனக்கு இந்திய பெண்ணின் முக அம்சம்தான் அதிகம். அதற்கு ஏற்ற கதாபாத்திரங்களைதான் இதுவரை ஏற்று நடித்து வருகிறேன். ஆனாலும் ஒரே பாணியிலான வேடங்களில் நடிப்பதில்லை.

நீச்சல் உடை அணிந்து நடிப்பது எனது உணர்வுகளுக்கு பொருந்தி வராது என்பதால் எனக்கென்று ஒரு எல்லை வகுத்திருக்கிறேன். மேலும் எனது குடும்பத்தினருடன் அமர்ந்து பார்க்க முடியாத படியான எந்தவொரு காட்சியிலும் நடிக்க மாட்டேன் என்று திட்டவட்டமாக கூறுகிறார் காஜல்.

## குஷியில் த்ரிஷா

இந்திய சினிமா நூற்றாண்டு விழாவின் கலைநிகழ்ச்சிப் பொறுப்பாளர்களில் இயக்குனர் தரணியும் ஒருவர். த்ரி'ாவும், தரணியும் நெருக்கமானவர்கள் என்பது ஊரறிந்த விடயமே. இதைப் பயன்படுத்தி, நூற்றாண்டு விழா நிகழ்ச்சியின் தொடக்கத்தில் குத்துவிளக்கு ஏற்றுபவர்களில் ஒருவராக த்ரிஷாவின் பெயரும் சேர்க்கப்பட்டிருந்தது.

குத்துவிளக்கு ஏற்றுபவர்களின் பெயர்ப்பட்டியல் முதல்வரின் பார்வைக்குச் சென்று திரும்பியபோது த்ரி'ாவின் பெயர் வேண்டாம் என அழிக்கப்பட்டிருந்ததாம். இதனால் அப்செட் ஆன த்ரி'ா, தனக்கு நெருக்கமான திரையுலக நண்பர்களுக்குப் போன் செய்து புலம்பியிருக்கிறார்.

இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை. இப்போது நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் பொறுப்பு த்ரி'ாவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் உச்சி குளிர்ந்துபோன த்ரி'ா, மறுபடியும் அதே நண்பர்களுக்குப் போன்செய்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருக்கிறார்.

## முந்துகிறது நய்யாண்டி

களவாணி, வாகை சூடவா ஆகிய படங்களை அடுத்து சற்குணம் இயக்கத்தில் தயாராகியுள்ள படம் நய்யாண்டி. இதில் தனு' கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடி போட்டுள்ளார் நஸ்ரியா நசீம். இவர்கள் தவிர சரண்யா பொன்வண்ணன், சூரி, சத்யன், லட்சுமி ராமகிரு'ணன் மற்றும் பலர் நடிக்கிறார்கள். இயக்குனர் சற்குனத்தின் நண்பரான ஜிப்ரான் இந்த படத்துக்கு இசையமைக்கிறார்.

பொல்லாதவன், ஆடுகளம் படங்களைத் தொடர்ந்து பைவ் ஸ்டார் கதிரேசன் இப்படத்தைத் தயாரிக்கிறார். குத்துவிளக்கு செய்யும் கடை வைத்திருக்கும் நாயகன், பல் மருத்துவம் படிக்கும் நாயகி இவர்கள் இருவருக்கும் இடையில் உண்டாகும் காதல், இது தான் படத்தின் கதைக்கரு.

அக்டோபர் 11ம் திகதி நய்யாண்டி படம் வெளி வருவதாக திட்டமிடப்பட்ட நிலையில், சில தினங்களுக்கு முன் படத்தின் ஆடியோ வெளியிடப்பட்டது.

இந்நிலையில், ரசிகர்கள் எதிர்பார்க்கும் தினத்திற்க முன்னதாகவே படம் வெளியாகலாம் என சூசகமாக தனது ட்விட்டர் பக்கத்தில் தகவல் வெளிய்யிட்டுள்ளார் தனுஷ்.

## அமீருக்கு அமெரிக்க விருது

இந்தியில் பிரபல நடிகர், தயாரிப்பாளர் மற்றும் தொகுப்பாளர் என பன்முகம் கொண்ட அமீர்கான் சத்யமேவஜெயதே என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இவர் தொலைக்காட்சியில் தொகுத்து வழங்கிய இந்நிகழ்ச்சி இந்தியாவிலுள்ள மக்களை மட்டுமல்லாமல் உலகம் முழுக்க உள்ள இந்திய மக்களிடத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிகழ்ச்சியில் இந்தியா எதிர்கொள்ளும் சில சமூக பிரச்சனைகளையும், சவால்களையும் வெளிச்சம் போட்டு காட்டியிருந்தார் அமீர்கான். மக்களிடத்தில் விழிப்புணர்வு எற்படுத்தும் விதமாக ஆமீர்கான் நடத்திய இந்த நிகழ்ச்சியை பாராட்டும் விதமாகவும், ஆமீரின் சமூக சேவையை கௌரவிக்கவும் அமெரிக்காவின் 'எப்ரோட் மீடியா' நிறுவனம் முடிவு செய்து, அவருக்கு ஒரு சிறப்பு விருது வழங்க இருக்கிறது.

சமீபத்தில், பிரபல டைம் பத்திரிகை தேர்ந்தெடுத்த உலகின் 100 உன்னத மனிதர்களில் அமீர் ஒருவராக தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

### அமெரிக்காவில் சிவா....!

அமெரிக்காவில் பட்டையை கிளப்பி வருகிறது சிவகார்த்திகேயனின் வருத்தப்படாத வாலிபர் சங்கம். பெரிய நடிகர்கள், இயக்குனர்கள் படங்கள் மட்டுமே அமெரிக்காவில் வெளியிடப்படும். சிவகார்த்திகேயனின் படத்துக்கும் இப்போது அந்த அந்தஸ்து கிடைத்திருக்கிறது.





## தேன் கிண்ணம்

## அனைவரும் சமம்



ஏய் மனிதா நாம் உடலால்
உதிரத்தால் ஏன் உறுப்புக்களால்
நாம் அனைவரும் ஒன்றுபட்டவர்களே!
இவ்வுலக வாழ்வில் மட்டும்
ஏன் வேறுபட்டோம்
நீ அரசன் நான் ஆண்டி
நீ படித்தவன் நான் பாமரன்
நீ அறிவாளி நான் முட்டாள்
நீ பணக்காரன் நான் ஏழை
நீ வீரன் நான் கோழை
நீ அழகானவன் நான் அழகற்றவன்
நீ உயர்ந்தவன் நான் தாழ்ந்தவன்
ஒரு நாள் மரணம் என்ற
கோரப்பிடியில் நாம் அனைவரும்
சமனே!

M.A.S.கமீட், . ஏறாவூர்.

இயல்புநிலை குலைந்துவிட்ட
எந்தன் ஊரதனில்
பல நாள் இடைவெளியின்
பின்னரான
எந்தன் பயணங்கள்
சுகமான சுமைகளாய்
வலிகளைத் தந்து செல்ல
பலி கொள்ளப்பட்ட
உரிமைகளுக்காய்
ஊமையாய் அழுதபடியே
உணர்வற்றுப்
போயிருந்தேன்.

கண்ணுக்கெட்டிய
தூரம் வரை
கட்டடங்கள் இல்லை
பச்சைப் பசேலென்ற
வயல்வெளிகளும் இல்லை.

அழுதழுது நீர்வற்றி
வரண்டு போய்விட்ட
விழிகளும்
இல்லாத ஏதோ ஒன்றை
தினம் எதிர்பார்த்து
ஏமாற்றப்படும்
உள்ளங்களும்தான்
இன்னும் எஞ்சிப்போயிருக்க
இருப்புகளிற்கான
அடையாளங்களை
தேடிக்கொண்டிருக்கிறேன்.



## அடையாளங்கள்...

ஆஷா, யாழ்ப்பாணம்.

## ஆருயிர் நண்பனே

தவங்கள் பல
செய்தும் தலை கெட்ட
லோகம் தான்
ஞானிகள் தந்தது

வேறென்ன சொல்ல
வேலையும் இல்லை
குடியது கூடிய
குலங்களோ கோடி

பற்றதோ வீட்டில்
பதறத்தான் உழைத்தான்
நல்லதைக் கற்றான்
நாலு வழியில் சம்பாதிக்க

பிச்சை போடாமல்
சர்ச்சை செய்கிறான்
அர்ச்சனை போடும்
குருவை கர்ச்சிக்கிறான்

காடுமலை ரசித்தான்
கணமே மறந்தான்
நாடு வீடு காத்தான்
நடுத்தெருவில் இறந்தான்

இனியென்ன மீதியடா
இயல்பான விதியடா
புகழ் சேர்த்தும் – நீ
பொருள் சேர்த்தும்

என்பதை இந்த
அவனி மனிதன் மேல்
அள்ளியே வீசிடு – என்
ஆருயிர் நண்பனே.



கா. காயசிறிதேவி,
அக்கரைப்பற்று - 07.

## ஈழத்துக் கவிஞர்கள்

### அப்துல் ஜமீல்

ஈழத்துக் கவிஞர்கள் வரிசையில் அப்துல் ரகுமான் அப்துல் ஜமீல் தனக்கென தனியிடத்தைத் தக்கவைத் துள்ளார். இவர், கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட் டத்தில் மருதமுனைக் கிராமத்தில் பிறந்தவர். 1993 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கியத் திற்கான தேசிய விருதைப் பெற்றவர்.

இவரது முதல் கவிதைப் பிரதி 'தனித்தலையும் பறவையின் துயர்கவியும் பாடல்கள்' 2007 யாழ். இலக்கியப் பேரவையின் கவிஞர் அய்யாத்துரை விருதையும், தடாகம் இலக்கிய வட்டத்தின் கலைத் தீபம் விருதையும் பெற்றது.

'உடையைக் காத்திருத்தல்' 2010 கொடகே சாகித்திய விருதின் இறுதிச்சுற்றில் சான்றிதழினைப் பெற்றது.

சிறுவர்களைக் கவனத்தில் எடுப்பதென்பது, தண்டிக்கவும், போதிக்கவும் என அவர்களின்மீது அதிகாரம் செலுத்தும் வழிகளிலே பாவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முற்றிலும் மாற்றமான வழிகளில் சிறுவர்களின் சமூகவெளியை அணுகும் கவிதைகளை உருவாக்கும் ஒரு கவிஞராக ஜமீலைக் காண்கிறேன். இவருடைய கவிதைச் செயல் முற்றிலும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறது. மிகத் தெளிவான எளிய மொழியில் நம்மோடு பேசும் கவிதைகள் இவருடையது. ஆயினும், அது தனக்குள் உருவாக்கும் உரையாடல்கள் மிகவும் உக்கிரமானது. சிறுவர்களை நெருங்கும்போது, நம்மைக் கலங்கடிக்கக் கூடியது. தமிழில் பாப்பாப் பாட்டெழுதாமல், சிறுவர்களின் வெளியை அதன் அரசியல் அர்த்தத்துடன் முன்வைப்பது ஜமீலின் கவிதைதான். சிறுவர்களுக்காக, அவர்கள் சார்பாக முற்றும் ஒரு கவிதைச்செயலை முன்வைக்கிறார் என்றவகையில் மிக முக்கியமானவராக ஜமீல் தெரிகிறார்.




இவர் எழுதிய கவிதைகளில் ஒன்று....

## அவாவுதல்

வேலைக்குச் சென்றுவரும்
என் பெற்றோர்கள் முதற்கொண்டு
வீட்டுக்கு அடிக்கடி வந்து போகும்
விருந்தாளிகள் வரைக்குமாக
எல்லா ஜென்மங்களுமே
தொலைக்காட்சியையே பார்க்கின்றனர்
அதில் வரும் நடிகர்களைப் பற்றியே
நேரமாகியும் பேசிக்கொள்கிறார்கள்
என்னோடு யாரும் பேசுவதாயும் இல்லை
சிரிப்பதாயும் இல்லை
சும்மாவேனும் முறைப்பதாயும் இல்லை
எனவே, தானும் ஒரு தொலைக் காட்சியாய்
உடன் மாறிவிட வேண்டுமென்று
அவாவினாள் குழந்தை.

## தான(ம்) தருமம்

கண்
இல்லாதவனுக்கு
ஒளி கொடு!
காதில்லாதவனுக்கு
ஒலி கொடு!
வாயில்லாதவனுக்கு
சோறு கொடு
வயசாளிக்குக் கை கொடு!
காலில்லாதவனுக்குத்
தோள் கொடு!
ஏழைக்குப்
பிச்சையிடு!
இவைகள் தான் நீ
செய்யவேண்டிய
தான(ம்) தருமம்.

பாண்டியூர்
பொன்.நவநீதன்




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறிய விளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# ஆரம்ப கர்ப்ப காலம்

**நீண்ட தூரப்பயணங்கள் செய்யலாமா?**

கர்ப்பிணிகள் மோட்டார் சைக்கிளில் செல்லாமா என்பது அடிக்கடி எழும் கேள்வியாகும். வயிற்றிலுள்ள குழந்தை அதனைச் சுற்றியுள்ள நீரில் மிதப்பதால் வெளியுலகில் ஏற்படும் அதிர்வுகள், குலுக்கல்கள் அதை எளிதில் பாதிப்பதில்லை. ஆனால் சிக்கலான பிரசவ பிரச்சினைகளுடையோர், பிரசவ காலத்தில் குருதிப்போக்கு ஏற்பட்டோர் கடுமையான பிரயாணங்களை தவிர்ப்பது நன்று. விமான நிறுவனங்கள் 7 மாதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணிகளை விமான பயணத்திற்கு அனுமதிப்பதில்லை.

**கர்ப்ப காலத்தில் இறுக்கமற்ற ஆடை- களை அணிய வேண்டும்.**

**மலேரியா குளிசைகள் பாவிக்க வேண்டுமா?**

இலங்கையில் மலேரியா பல இடங்களில் அடிக்கடி வருவதாலும் நோய்வந்தால் இது கருவையும் பாதிப்பதால் மலேரியா தடுப்பு குளிசைகள் அரச கிளினிக்குகளில் ஒவ்வொரு கிழமையும் வழங்கப்படுகிறது. நீங்கள் இருக்கும் இடத்தில் மலேரியா வருவதற்கு சாத்தியமில்லை என்றால் இம் மருந்துகளை தவிர்க்கலாம்.

**கிளினிக் பதிவு செய்வது எப்போது?**

கிளினிக் என்பது உங்களை மருத்துவ தாதி, மருத்துவர்கள் கிரமமாக பரிசோதிக்கும் இடமாகும். நீங்கள் சாதாரணமாக 12 கிழமை (3ஆம் மாதம்) தொடக்கம் பதிவுகளை மேற் கொள்ள முடியும். பொதுவில் 28வது கிழமை (7ஆம் கிழமை)வரை மாதமொருமுறையும் பின்னர் 1-2 கிழமை இடைவெளியிலும் நீங்கள் கிளினிக்கு அழைக்கப்படுவீர்கள்.


கிளினிக்கில் உங்கள் குழந்தையின் வளர்ச்சி, உங்கள் உடலில் ஏற்படும் மாற்றங்கள் (இரத்த அழுத்தம், இரத்தச் சோகை போன்றன) உயரம், நிறை என்பன சோதிக்கப்பட்டு பதிவு செய்யப்படும்

உங்கள் சிறுநீர், குருதி என்பன பரிசோதிக்கப்படும்.

உங்கள் இரத்தப் பிரிவு, இரத்த வீதம் (ஹீமோகுளோபின்) மற்றும் VDRL எனப்படும் நோய்க் கிருமிகள் இனங்காணும் சோதனைகள், குருதிப் பரிசோதனையின் போது செய்யப்படும். சிறுநீர் அல்பியுமின், குளுக்கோஸ் உள்ளதா என பரிசோதிக்கப்படும்.

**பொது வைத்தியசாலை (General Hospital)க்கு செல்வது அவசியமா?**

பெரும்பாலான பிரசவங்களின் போது சிக்கல்கள் ஏற்படுவது இல்லை. மருத்துவத்தாதி அல்லது மருத்துவர்கள் சிக்கலான கர்ப்பம் என கருதப்படும் தாய்மார், நிபுணத்துவ சேவைக்காக மாவட்ட அல்லது பொது வைத்தியசாலைகளுக்கு செல்ல நேரிடும். ஏனையோர் நிபுணத்துவ ஆலோசனை பெறவேண்டியதில்லை.



(தொடரும்)

# என்றும் இளமையோடு வாழ திருமூலர் கூறும் எளிய வழி!



நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், உஷ்ணம், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான். நமது தேகத்தை நீட்டித்து, ஆயுளை விருத்தி செய்ய திருமூலர் சித்தர் எளிய வழியை கூறுகிறார்.

ஒருவனுடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று குறிப்பிடுகிறார் திருமூலர். கடுக்காய்க்கு அமுதம் என்றொரு பெயரும் உண்டு. தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்திற்கு ஒப்பானது கடுக்காயாகும். பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலானது என்று கருதுகின்றனர் சித்தர்கள். கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளையெல்லாம் வெளித்தள்ளி, அவனுடைய பிறவிப் பயனை நீட்டித்து வருகிறது. கடுக்காயின் சுவை துவர்ப்பாகும்.

நமது உடம்புக்கு அறுசுவைகளும் சரிவரத் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும். நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு. துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும். ஆனால் உணவில் வாழைப்பூவைத் தவிர்த்து பிற உணவுப் பொருட்கள் துவர்ப்புச் சுவையற்றதாகும். பின் எப்படி ரத்த விருத்தியைப் பெறுவது?

அன்றாடம் நமது உணவில் கடுக்காயைச் சேர்த்து வந்தால், நமது உடம்புக்குத் தேவையான துவர்ப்பைத் தேவையான அளவில் பெற்று வரலாம். கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு, நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

**கடுக்காய் குணப்படுத்தும் நோய்கள்:**

கண் பார்வைக் கோளாறுகள், காது கேளாமை, சுவையின்மை, பித்த நோய்கள், வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பைப்புண், குடற்புண், ஆசனப்புண், அக்கி, தேமல், படை, தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைப்படுதல், சிறுநீர்க் குழாய்களில் உண்டாகும் புண், சிறுநீர் எரிச்சல், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல், உள்மூலம், கீழ்மூலம், ரத்தமூலம், ரத்தபேதி, பௌத்திரக் கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக் குறைபாடுகள் போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்தே கடுக்காய். இதை பற்றி சித்தர் கூறும் பாடல்...

காலை இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டலம் உண்டால்
விருத்தனும் பாலனாமே

காலை வெறும் வயிற்றில் இஞ்சி, நண்பகலில் சுக்கு, இரவில் கடுக்காய் என தொடர்ந்து ஒரு மண்டலம்(48 நாட்கள்) சாப்பிட்டுவர, கிழவனும் குமரனாகலாம் என்பதே இந்தப் பாடலின் கருத்தாம். எனவே தொடர்ந்து கடுக்காயை இரவில் சாப்பிட்டு வர நோய்கள் நீங்கி இளமையோடு வாழலாம். கடுக்காய் வீடுகளில் கண்டிப்பாய் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும்.

சிலரைப் பார்த்தால் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். அவர்களது முகத்திலும் ஒரு பிரகாசம் தெரியும். இன்னும் சிலர், எப்போதும் படுசோம்பேறிகளாக இருப்பார்கள். இந்த இரு தரப்பினரில் யாருக்கு ஆயுள் அதிகம் என்று ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டனர். காலையில் எழுந்தது தொடக்கம், இரவில் படுக்கையறைக்கு செல்லும் வரை என்னவெல்லாம் செய்கிறார்கள் என்பது பற்றிய கேள்விகள் அவர்களிடம் கேட்கப்பட்டன.


ஆய்வின் முடிவில், நீங்கள் எதிர்பார்த்தது போலவே சுறுசுறுப்பாக செயற்படுப வர்களுக்குத்தான் ஆயுள் அதிகம் என்பது உறுதி செய்யப்பட்டது. அவர்கள் சோம்பேறிகளாக திரிபவர்களைக் காட்டிலும் 4 ஆண்டுகள் அதிகம் உயிர் வாழ்கிறார்களாம். இந்த ஆய்வின் மூலம் சுறுசுறுப்பாக இருப்பவர்களின் ஆயுள் ரகசியம் எது என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த ரகசியம் உடற்பயிற்சிதான்!

தினமும் உடற்பயிற்சி செய்து வந்தால் மூளையின் செயற்பாடுகள் சிறப்பாக இருப்பதும், அதன் காரணமாக ரத்தம் மற்றும் ஒட்சிசன் மூளைக்கு அதிகமாக கொண்டு செல்லப்படுவதும், இதனால் ஞாபக சக்தி அதிகரித்து சுறுசுறுப்பு கிடைப்பதும் ஆய்வில் தெரியவந்தது.

மேலும், தினமும் உடற்பயிற்சி செய்து வருபவர்களுக்கு இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் வருவது பெரும்பாலும் தடுக்கப்படுகிறது என்பதும் இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீங்களும் சுறுசுறுப்பாக வேண்டும் என்றால், தினமும் உடற் பயிற்சி செய்யுங்கள். எடுத்தவுடன் மணிக்கணக்கில் செய்ய முயற்சிக்க வேண்டாம். முதலில் 5 நிமிடங்கள் செய்யுங்கள். அதன்பிறகு படிப்படியாக நேரத்தை அதிகரியுங்கள்

# ஆயுளை நீட்டிக்கும் சுறுசுறுப்பு






## தாய்ப்பாலுக்கு இணையானது ஒரேஞ்....

தாய்ப்பால் தரமுடியாத தாய்மார்கள் தங்களின் பிரதிநிதியாக குழந்தைகளுக்கு ஒரேஞ் சாறைத் கொடுக்கலாம். இப்பழம், இதயவலி, மார்புவலிக்கு மிகச் சிறந்த மருந்தாகும். இரத்தக்குழாய்களின் அடைப்பை நீக்கி ரத்தத்தைக் கொண்டு செல்ல இது உதவுகிறது, ஒரு ஒரேஞ்பழம் மூன்று கப் பாலுக்கு இணையானது. நல்ல தூக்கத்தை இது வரவழைக்கிறது. தினமும் இதைச் சாப்பிட நீண்ட ஆயுள் உறுதியாகும்.



# பெண் அன்று தொட்டு இன்றுவரை

இன்றைய சமூகக்கட்டமைப்பில் விளிம்புநிலையில் காணப்படுகின்ற பாலினமான பெண்கள் பல்வேறு வழிகளிலும் தமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு போராடி வருகின்றனர். பல்வேறு பெண்கள் அமைப்புக்கள் முதல் தனி நபர்கள் வரை பலர் பெண்ணியத்திற்கு குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றன பெண்ணுக்கு மறுக்கப்பட்டுள்ள மூன்று விடயங்கள்

1. அரசியல்
2. பாலியல் விடயங்கள்
3. மதம் சார்ந்த கருத்துக்கள்.

முதலாவது விடயமான அரசியலை பொறுத்தமட்டில் இன்று பெண்களின் விகிதாசாரம் முன்னரை விட அதிகரித்துள்ளமை உண்மை. வழமையில் அரசியல் பற்றியதொரு கருத்தினை ஆணொருவர் முன்வைக்கும் போது கொலை அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஆனால் அதுவே பெண் எனும் போது உயிராபத்து மற்றுமல்ல பாலியல் தொடர்பான அச்சுறுத்தல்களும் அவளுக்கு ஏற்படுகின்றன. குடும்ப அமைப்பினை எடுத்துக்கொண்டால் தன் ஆண் வாரிசு அரசியலைப் பற்றி பேசும் போது கிடைக்கின்ற பக்கபலம் அதுவே பெண் பேச ஆரம்பிக்கும் போது மறுக்கப்படுகின்றது.

பெண்ணுக்கு மறுக்கப்பட்ட இரண்டாவது விடயமான 'பாலியல் தொடர்பான கருத்துக்கள்' என்பதை எடுத்துக்கொண்டால் ஓர் ஆண் பாலியல் தொடர்பான கருத்தினை முன்வைக்கும் போது சமூகம் அதனை ஏற்றுக்கொள்கிறது. அது மட்டுமன்றி அவனது கருத்துக்கள் சில சமயங்களில் சமூகமாற்றத்திற்கு கூட வழிவகுக்கின்றது. ஆயினும் இந்த முன்வைத்தல் பெண் ஒருவரினால் வைக்கப்படும் போது அல்லது பாலியல் தொடர்பிலான பிரச்சினைகள் பற்றி சுட்டிக்காட்டப்படும் போதோ சமூகத்தின் பார்வை அவள் முன்வைத்த விடயத்திலிருந்து திசை திரும்பி அவளின் மீதே படிகின்றது. அவளினால் சுட்டப்பட்ட விடயங்களை விட்வும் அவளது சுயம் நோக்கியே சமூகம் பார்வையை திருப்புகின்றது. அவளது தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் விமர்சிக்க தலைப்டுகிறது. அல்லது அவள் தொடர்பான தப்பானதொரு கருத்தையே சமூகம் தேட தலைப்படுகிறது. கலைப்படைப்புக்களை எடுத்துக்கொண்டால் ஒரு பெண்ணின் நிர்வாணம் பற்றியோ காமம் பற்றியோ ஆண் இலகுவில் பேசிடமுடிகிறது. கவிதை படைத்திட முடிகிறது. ஆனால் ஆணின் நிர்வாணம் பற்றிய ஏதேனும் படைப்பினை பெண்ணினால் மேற்கொள்ள முடியுமா?

இத்தாக்கமானது இன்று மட்டுமல்ல அன்று முதலே நமது இலக்கியங்களில் கூட எழுதப்பட்டுவிட்ட மறைமுகமான சட்டம். ஆணுக்கு அந்தப்புரம், ஆயிரம் திருமணம் என்றெழுதிய இலக்கியங்கள் அதே எழுத்தாணியினால் பெண்ணுக்கு உடன்கட்டை வழக்கம் அல்லது வனவாசத்தை தான் எழுதியது. கணவன் வேறு பெண்ணை தேடிய போது பேசாத பெண்மை தன் கணவனை தண்டித்த போது நகரையே கொழுத்தியதாக பெண் பாத்திரத்தினை படைத்திருந்தது.

மூன்றாவதான விடயம் சமயம் தொடர்பானது. இன்றுள்ள சமய விதிமுறைகள் என்பது அன்று ஒருவரினால் எழுதப்பட்டதொரு விடயம். காலத்திற்கேற்ற வகையில் சமய வழிபாடுகளை மாற்றிக்கொள்கின்றோம். சடங்குகளை மாற்றுகின்றோம். ஆனால் பெண்ணினால் காலத்திற்கேற்ப முன்வைக்கப்படும் மாற்றுக்கருத்துக்களை மட்டும் ஏற்க ஏனோ எம்மால் முடிவதில்லை.

மேற்கூறிய விடங்களில் ஒரு பெண் தன் கருத்தினை முன்வைக்க முயலும் போது அச்சுறுத்தல்கள், பாலியல் கொடுமைகள், சமூக புறந்தள்ளல்கள், குடும்பத்தினுள் ஏற்படுகின்ற பிரச்சினைகள், தன் சுயம் பற்றிய விமர்சிப்புக்கள் என்பவற்றினை எதிர்கொள்ள வேண்டிய பலவித நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றாள்.

ஆகமொத்தத்தில் என்ன தான் பெண்ணுமைக்குரல்கள் உயர்ந்துள்ள போதும் இந்த மூவகை விடயங்களும் அன்று முதல் இன்று வரை பெண் என்கின்ற விளிம்பு நிலையினருக்கு மறுக்கப்பட்டே வருகிறது என்பதே யதார்த்த உண்மை என்பதினை யாராலும் மறுத்திட முடியாது.



# பப்பாளியின் மருத்துவ குணங்கள்

பப்பாளி பழத்தின் கனிகள், விதைகள், இலைகள் என்று அனைத்துமே மருத்துவக் குணங்கள் நிறைந்தவை. அழகை அழகூட்டும் பப்பாளியைப் பற்றி இன்னும் சில அழகு டிப்ஸ்....

* தினமும் காலை, மாலை வேளைகளில் 5 நிமிடம் மூச்சுப்பயிற்சி செய்து வந்தால் அன்றைய தினம் முழுவதும் புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள்.

* தினமும் காலையில் எழுந்ததும் பழங்கள் சாப்பிடுவது இளமையை அதிகரிக்கும். குறிப்பாக, ஆப்பிள், ஆரஞ்சு, பப்பாளிப் பழங்கள் சாப்பிடுவது நல்லது.

*தினமும் காலையில் ஒன்று அல்லது இரண்டு கேரட்டை பச்சையாக சாப்பிட்டு வந்தால் உடலில் ஒருவித மினுமினுப்பை பெறலாம்.

* கறிவேப்பிலையின் இளம் தளிர்களை காய வைத்து பொடியாக்கி, அதை தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்து வந்தால் முடி கருகருவென்று வளரும்.

* தயிருடன் கடலை மாவு சேர்த்து முகத்தில் தடவி வந்தால் முகப்பரு தொல்லை வராது.

*10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை முல்தான் மெட்டியுடன் பன்னீர் கலந்து முகத்தில் பூசி வந்தால் முகம் பளிச்சென்று காணப்படும்.

* பப்பாளி வயிற்றுக்கோளாறுக்கு மருந்தாகப் பயன்படுகிறது, செரிமானத்தை ஊக்குவிக்கிறது, பப்பாளிக் காயின் பால் வயிற்றில் உள்ள பூச்சிகளை அகற்றுகிறது.

* பப்பாளி தோலில் உள்ள பருக்கள் மற்றும் கரும் புள்ளிகளை நீக்குகிறது. இதன் விதைகளும் பூச்சிகளை அகற்றும் மருந்து தயாரிக்க பயன்படுகிறது.

* பப்பாளி இலைகளின் சாறு காய்ச்சலைப் போக்கும் மருந்தாக பயன்படுகிறது. இதய நோயைக் குணப்படுத்தவும் இது உதவுகிறது.



# சிறிய வயதிலே சிறுமிகள் பூப்படைவது ஏன்?

சிவப்பு நிறத்தில் இருக்கும் சிறுமிகளைவிட கருப்பு சிறுமிகள் சீக்கிரமே பருவமடைகின்றனர் என்று அமெரிக்க ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உணவு, பழக்க வழக்கங்கள், சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கும் பருவமடைவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மஞ்சள் நீராட்டு விழா ஒவ்வொரு சிறுமியின் வாழ்விலும் மறக்க முடியாத நிகழ்வு. 12 முதல் 14 வயதுக்குள்தான் பெண்கள் பருவமடைந்து வந்தனர். இந்த நிலை மாறி தற்போது 7 அல்லது 8 வயதுக்கு உள்ளாகவே பூப்படைகின்றனர்.

பருவத்தை அடையும் முன்பு சிறுமிகளிடம். ஏற்படும் முதல் மாற்றம் என்ன? மிகச் சிறிய வயதில் சிறுமிகள் ஏன் பூப்படைகின்றனர்? என்ற கேள்விகளுக்கு விடை தேடும் வகையிலும் ஏற்கனவே நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலும் அமெரிக்காவின் மன்ஹாட்டன் நகரில் உள்ள மவுன்ட் சினாய் மருத்துவப்பள்ளி, கலிபோர்னியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த, சின்சினாட்டி குழந்தைகள் மருத்துவமனை ஆகியவை இணைந்து சமீபத்தில் புதிதாக ஒரு ஆய்வு நடத்தின.

ஆய்வு முடிவு பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுவதாவது:

சிறுமிகளின் உடல் எடை, அவர்களின் உணவு மற்றும் இதரப் பழக்கங்கள், நிறம், மன அழுத்தம், சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கும் பூப்படைவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

அதிக உடல் எடையால் உடலில் உள்ள கொழுப்பு சத்து செக்ஸ் ஹார்மோன்களை விரைவில் தூண்டி அதிக அளவு சுரக்கச் செய்கின்றன. சிறு வயதிலேயே சிறுமிகள் வயதுக்கு வர இது முக்கிய காரணம். அவர்களது உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள் மார்பக வளர்ச்சியை தூண்டுகின்றன. அதனால், பூப்படையும் முன்பே மார்பகங்கள் வளர்ச்சி பெருகின்றன.

உடலின் நிறத்துக்கும் இதில் முக்கிய பங்கு உள்ளது. சிவப்பு நிறத்தில் உள்ள சிறுமிகள் முன்கூட்டியே பூப்படையும் வாய்ப்பு குறைவு. கருப்பு நிற சிறுமிகள் முன்கூட்டியே பூப்பெய்துகின்றனர். இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். குழந்தைகள் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி குறித்து வெளியாகும் சிறப்பு மருத்துவ இதழில் இந்தத் தகவல்கள் வெளியாகி உள்ளது.

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக,
(முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375)
இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-387**

**கேள்வி: பெண்ணிற்கு மறுக்கப்பட்டுள்ள மூன்று விடங்கள்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 08.10.2013**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 387
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :-385 இற்கான விடை:- தாக்குதல், அடித்தல், கிள்ளுதல், இழுத்தல், கடித்தல், முடியை இழுத்தல்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- எஸ்.அக்கினேஸ், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

387

பெயர் : ..................................
முகவரி : ..................................
..................................
தே.அ. அட்டை இல : ..................................
விடை : ..................................
கைபொப்பம் : ..................................

## ராகி முறுக்கு...!



**தேவையான பொருட்கள்:**

ராகி மாவு - 3 கிண்ணம்
அரிசி மாவு - 2 கிண்ணம்
உளுந்து மாவு - 1 கிண்ணம்
பெருங்காயம் பொடி - சிட்டிகை
எள் - 1 டீஸ்பூன்
வெண்ணெய் - 1 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
தண்ணீர் - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**

* ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி சூடாக்கவும்.
* உளுந்து மாவை லேசாக வறுத்துக் கொள்ளவும்.
* அதனுடன் அரிசி மாவு, ராகி மாவு, உப்பு, எள், காயம், வெண்ணெய் கலந்து தேவையான தண்ணீர் விட்டு பிசைந்து கொள்ளவும்.
* தேன்குழல் (முறுக்கு) அச்சில் மாவை போட்டு, மிதமான சூட்டில் உள்ள எண்ணெயில் பிழிந்து, பொறித்து எடுக்கவும்.
* (சத்தம் அடங்கியதும் எடுத்து விட வேண்டும். ராகி நிறத்தில் பொன்னிறம் எல்லாம் கண்டுபிடிக்க முடியாது.)

தினம் கொசோவோ மக்களுக்கு மிக முக்கிய மான நாள் என பிரதமர் ஹாசீம் தாசி சுதந்திரப் பிரகடனம் செய்தார்.

பெப்ரவரி மாதம் 17ம் திகதி கொசோவோ ஒரு தலைப்பட்சமாக சுதந்திரத்தை பிரகடனம் செய்தது.

"ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட எமது மக்களின் தலைவர்கள் நாமே" கொசோவோ சுதந்திரமானதும், இறைமையானதுமான இராச்சியம் என பிரகடனம் செய்கிறோம். இந்தப் பிரகடனம் எமது மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கின்றது. ஐக்கிய நாடுகளுக்கான பிரதிநிதி மர்ட்டீ அஜ்ஸ்தாரியின் பூரண அங்கீகாரத்துடனேயே இந்த சுதந்திரப் பிரகடனம் மேற்கொள்ளப்படுகிறது என பிரதமர் ஹாசீம் தாசி தெரிவித்தார்.

மதசார்பற்ற, பல்லின மக்களும் சட்டத்தின் முன் சமனாக கருதப்படக்கூடிய ஜனநாயக நாடாக நாம் கொசோவோவை பிரகடனம் செய்கிறோம். கொசோவோவில் வாழும் அனைத்து சமூகத்தினரதும் உரிமைகளை பாதுகாத்து, அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம் என ஹாசீம் தாசி பிரதிக்ஞை செய்தார்.

கொசோவோவின் அரசியல் விவகாரங்கள் மற்றும் தீர்மானங்களின் போது பல்லின மக்களது கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையில் செயலாற்றுவோம் என பிரதமர் மேலும் உறுதிமொழியளித்தார்.

அமெரிக்கா ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னணி நாடுகள் இந்த புதிய நாட்டை அங்கீகரித்துள்ளன.

கொசோவோ விடுதலை இராணுவம் தமது இலட்சிய சிகரத்தின் உச்சத்தை வெற்றிகரமாக அடைந்துள்ளது என்று கூறின் அது மிகைப்படாது.

## கொசோவோ: ஒரு பொருளாதார அடியாள் உருவான கதை புரியாத மறுபக்கம்

சுவிட்சர்லாந்தில் அரசியல் விஞ்ஞானம் படித்துக்கொண்டிருந்த ஹாசிம் தாச்சிக்கு யூகோஸ்லாவியாவில் தனது பிரதேசத்தில் ஒரு விடுதலை இராணுவம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தபோது, இது வெகு விரைவில் சர்வதேசக் கவனத்தை ஈர்க்குமென அவர் எண்ணியிருக்கமாட்டார். பல்லின மக்கள் வாழ்ந்த யூக்கோஸ்லாவியா, எண்பதுகளின் இறுதியில் தனது சோசலிசக் கூட்டாளிகளை கிழக்கு ஐரோப்பாவில் இழந்ததால் வேறு வழியின்றி உலக வங்கியிடமும் சர்வதேச நாணய நிதியத்திடமும் கையேந்த வேண்டிய நிலையுருவாகியது. இந்நிலை காரணமாக உள்நாட்டடில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாற்றங்கள் பின்னர் ஒவ்வொரு இனமும் தமக்கென தேசம் கோரும் போர்களில் ஈடுபட வழி சமைத்தன.

ஸ்லோவனியா, க்றோவேசியா, பொஸ்னியா எனத் தனி அலகுகளாக இந்நாடு உடைந்ததையடுத்து, எஞ்சியிருந்த சேர்பியாவும் மொண்டி நீக்ரோவும் குட்டி யூக்கோஸ்லாவியாவாகச் சுருங்கிப் போயின. தொடர்ந்து இடம்பெற்ற யுத்தங்களுக்கு யூகோஸ்லாவியாவில் பெரும்பான்மயினத்தை கொண்டிருக்கும் சேர்பியாவே பொறுப்பு எனக் குற்றம்சாட்டப்பட்டு, இந்நாட்டின் மீது பொருளாதார, ஆயுத விற்பனைத்தடை கொண்டு வரப்பட்டது. இதனால் உள்நாட்டுப் பொருளா-தாரம் பாதிக்கப்படவே, யூகோஸ்லாவிய அரசு தற்பாதுகாப்புப் பொருளாதாரத்தில் இறங்கியது. சேர்பியாவில் அல்பானிய சிறுபான்மையினத்தவர் வாழ்ந்த கொசோவோ மாகாணம் கவனிக்கப்படாது கைவிடப்பட்டது. இதன்காரணமாக கொசோவோ அல்பேனிய இனத்தவர் மோசமாகப் பாதிக்கப்பட்டு, பொருளாதாரப் பிரச்சினை அரசியல் பிரச்சினையாக உருவெடுத்தது.

தேர்தல்-ஜனநாயகம் மூலம் ஆட்சிக்கு வந்த சோஷலிசக் கட்சியின் ஜனாதிபதி மிலோசெவிச் பெரும்பான்மைச் சேர்பிய வாக்காளர்களைக் குறிவைத்து அரசியல் நடாத்துவதில் ஈடுபட்டார். அவர்களைத் திருப்திப்படுத்த கொசேவாவின் சுய நிர்ணய உரிமை பறிக்கப்பட்டது. இவ் ஆரம்பத் தவறினையடுத்து, கொசோவோ அல்பானியர்களின் எதிர்ப்பு விஸ்வரூபம் எடுத்தது. மிதவாதக் கட்சி சமாதான வழிப்போராட்டங்களை ஆதரித்த போதிலும், இளைஞர்கள் தீவிர ஆயுதப்போராட்டங்களை முன்னெடுத்தனர். சேர்பிய அரசுக்கு ஊழியம் செய்தவர்கள் துரோகிகளாக்கப்பட்டனர், சுட்டுக்கொல்லப்பட்டர். சேர்பியப் பொலிசும் வன்முறையைப் பிரயோகிக்கத் தயங்கவில்லை. தீவிரவாத இளைஞர்கள் வேட்டையாடப்பட்டனர். கைதுகளும் கொலைகளும் தொடர்ந்த வண்ணமாய் இருந்தன.

இந்நிலையில்தான், கொசோவோ-வில் ஹாசிம் தாச்சியின் வரவு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. ஹாசிம் தாச்சியின் தலைமையின் கீழ் திரண்ட இளைஞர்கள் தமது இயக்கத்திற்கு "கொசோவோ விடுதலை இராணுவம்" (KLA) எனப் பெயரிட்டு, சேர்பியப் பொலிசாரோடு மோதினர். இவர்களைப் பயங்கரவாதிகளென அறிவித்த யூகோஸ்லாவியா தனது பலத்தைக் காட்டி அடக்குமுறைகளைப் பிரயோகித்தது. ஆயினும் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த அரசு கொசோவோவிற்குச் சில அரசியலுரிமைகளை வழங்க முன்வந்தது. நடாத்தப்பட்ட தேர்தலில் மிதவாதக் கட்சியே ஆட்சிக்கு வந்தது.

யுத்தம். ஐரோப்பாவின் வாசற்படிக்கு வந்துவிட்ட காலத்திலிருந்து மேற்கு ஐரோப்பா யூகோஸ்லாவிய அரசியல் மாற்றங்களை வெகு உன்னிப்பாகக் கவனித்து வந்தது. குறிப்பாக ஜேர்மனி இவ்விடயத்தில் அதிகளவு அக்கறை காட்டியது. பலங் குன்றிப் போயிருந்த கொசோவாவின் KLA க்கு ஜேர்மனி உதவிக்கரம் நீட்டியது. ஆயுத தளபாடங்கள் அனுப்பப்பட்டன. சண்டை மீண்டும் உக்கிரமடைந்தது. ஆரம்பத்தில் கொசோவோ் அல்பானியர் மீதான அடக்குமுறையை கண்டும் காணாதிருந்த மேற்கத்தைய பத்திரிகையாளர்கள் திடீ-ரென விழித்துக் கொண்டனர். அல்பானிய மக்களின் துயரங்களை, போர்முனைச் செய்திகளை அறிவிக்க காத்திருக்கும் அபாயங்களையும் பொருட்படுத்தாது கொசோவோ சென்றனர். அமெரிக்காவும் சும்மாயிருந்து விடவில்லை. சில மாதங்களுக்கு முன்புவரை "கொசோவோ பயங்கரவாதிகள்" வர்ணித்த அமெரிக்கப் பத்திரிகைகள் இப்போது அவர்களை விடுதலைப் போராளிகளென அழைத்தன. அமெரிக்க அரசு KLA க்கு நிதியுதவியும் வழங்கியது. அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ இராணுவம் KLA ன் புகழ்பாடியது. இதே நேட்டோவில் உறுப்பு நாடுகளாகவிருக்கும் இங்கிலாந்து, துருக்கி,



ஸ்பெயின் ஆகியன தத்தமது நாடுகளில் பிரிவினைப் போராட்டங்களை பயங்கரவாதம் எனக்கூறி அடக்கி வருவதைப் பற்றி யாரும் நினைத்துப் கூடப் பார்க்கவில்லை.

இடையில் ஒரு கட்டத்தில் நேட்டோ நாடுகள் யூகோஸ்லாவிய அரசைப் பேச்சுவார்தைகளுக்கு வருமாறு அழைப்பு விடுத்தன. ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நேட்டோப் படைகளை நாட்டுக்குள் அனுமதிக்குமாறும் இல்லாத பட்சத்தில் குண்டுமழை பொழியப்படுமெனவும் யூகோஸ்லாவியா பயமுறுத்தப்பட்டது. யூக்கோஸ்லாவியா மசியாத நிலையில் நேட்டோ வீமானங்கள் இந்நாட்டு இராணுவ, பொருளாதார மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகள் மீது குண்டு வீசின. ஆத்திரமடைந்த சேர்பிய இராணுவம் கொசோவோவின் அல்பானியர்களின் மீதான அடக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தியது.

மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். மேற்கத்திய ஊடகங்கள் பிரச்சார யுத்தத்தில் ஈடுபட்டன. கொசோவோவில் இனப்படுகொலை நடப்பதாக அலறின. மாபெரும் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக கதைகதையா-கச் சொல்லின. KLA போராளிகளை வீரர்களாகவும் சேர்பிய இராணுவத்தினரை வில்லன்களாகவும் சித்தரித்தன. கோசோவோ அல்பானியர்க்ள் மீது பொழிந்த இந்தப்பாச மழையில் மேற்கத்தைய நாட்டு மக்களும் நனைந்து போயினர். இதில் வேடிக்கை என்னவெனில், சாதாரணமாகவே அகதி-களை வெறுக்கும் மேற்கு ஐரோப்பிய மக்களில் சிலர் கொசோவோ அகதி-களை வரவேற்று உபசரித்தனர். செய்தி ஊடகங்கள் எந்தளவு மக்கள் மீது தாக்கம் செலுத்துகின்றன என்பத்றகு இதுவும் ஒரு சான்று. நேட்டோ நாடுகளின் குண்டுகளுக்கு ஈடுகொடுக்க முடியாத யூகோஸ்லாவிய அரசு இறுதியல் விட்டுக்கொடுத்தது. நேட்டோ இராணுவம் கொசோவோவுள் நுளைய அனுமதித்தது. கொசோவோவை ஆளுக்கொரு துண்டாகப் பிரித்தெடுத்துக் கொண்டன அமெரிக்க, ஜேர்மனிய, பிரித்தானியப் படைகள். அவர்க்ளை அல்பானிய மக்கள் தமக்கு விடுதலை பெற்றுத் தந்த இரட்சகர்களாகப் பார்த்தனர். அவர்களோடு சேர்ந்து வந்த KLA யின் கையில் கொசோவோ-வின் (தற்காலிக) ஆட்சியதிகாரம் கையளிக்கப்பட்டது. ஆனால் உண்மையான அதிகாரம் நேட்டோ, ஐ.நா சபையின் பிரதிநிதி (மேற்கத்தைய நாடுகளின் உத்தரவுகளை நிறைவேற்றுபவர்) ஆகியோரிடம் தங்கிவிட்டது. கொசோவோ மக்கள் KLA , நேட்டோ இரண்டையும் ஒன்றாகவே பார்த்தனர். இவர்கள் பின்பலத்துடன் தாம் எதையும் செய்யலாம் என நினைத்த சிலர் பழிவாங்கல் வன்முறையில் ஈடுபட்டனர். இம்முறை சேர்பிய மக்கள் திடீர்த் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். செய்தவர்களைத் தம்மால் பிடிக்க முடியவில்லையென நேட்டோ இராணுவம் கையைப் பிசைந்தது.

கொசோவோவில் நேட்டோவுடனான தேனிலவுக்காலம் வெகுவிரைவில் முடிவுக்கு வந்தது. சேர்பியாவிலும் ஆட்சிபீடம் மாறியது. முன்னாள் அதி-பர் மிலோசவிச் நடைபெற்ற தேர்தலில் ஆட்சியிழந்தார். மேற்குலகு சார்பான கட்சிகள் ஆட்சியைப்பிடித்தன. சேர்பியாவில் கொசோவோவின் எல்லையோரப் பகுதியிலும் அல்பானியச் சிறுபான்மையினர் வாழ்கின்றனர். இந்தப்பகுதியையும் சுதந்திரக் கொசோவோவுடன் இணைக்கும் நீண்ட கால அவா KLA க்கு இருந்துவந்தது. அதனால் அங்கேயும் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தது. இப்பகுதி முன்னர் சமாதான வலயமாப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததால் சேர்பிய இராணுவம் ஐந்து மைல்களுக்கப்பால் நின்றது. ஆனால், இப்போதுதான் தலைநகர் பெல்கிரேட்டில் ஆட்சி மாறிவிட்டதே. நேட்டோவின் ஆதரவுடன் சேர்பியப் படை-கள் சமாதான வலையத்தினுள் நுளைந்து முடுயு போராளிகளை விரட்டியடித்தது. எதிரிகள் நண்பர்களானார்கள். நண்பர்கள் எதிரிகளா்னார்கள்.

சேர்பியக் கிளர்ச்சி முறியடிக்கப்படவே KLA அயல்நாடான மசிடோனியா பக்கம் பார்வையைத் திருப்பியது. முன்னாள் யூகோஸ்லாவியக் குடியரசான மசிடோனியாவில் அதே பெயருடைய மொழி பேசும் பெரும்பான்மை ஸ்லாவிய மக்களும், கொ-சோவோ எல்லையோரமாக சிறுபான்மை அல்பானியர்களும் வாழ்ந்து வருகின்றனர். தாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடாத்தப்படுவதாய் இச்சிறுபான்மையினர் நீண்டகாலமாகக் குறைப்பட்டுக் கொண்டுமிருந்தார்கள். இந்த இன முரண்பாடுகள் கடைசியில் வன்முறையாக வெடித்தன. அரசுக்கெதிரான ஊர்வலம் பொலிசாரினால் கலைக்கப்படவே, அது திடீரென ஆயுதப்போராட்டமாக மாறியது.

அல்பேனியச் சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பிரதேசங்களை ஆயுதந்தாங்கிய போராளிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். மசிடோனிய அரசு இராணுவத்தை அனுப்பியது. சண்டையில் ஈடுபடும் போராளிகளுக்கு உதவ கோசோவோவிலிருந்து மேலும் KLA உறுப்பிர்கள் வரலாம் என அஞ்சிய மசிடோனிய அரசு நேட்டோவிடம் விண்ணப்பித்தது. இம்முறை "அல்பானியப் பயங்கரவாதத்தை வன்மையாகக் கண்டிப்பதாக" அறிவித்த நேட்டோ எல்லைக் காவலை அதிகரித்தது. எல்லைகடக்க முயன்ற KLA உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். நேற்று வரை நண்பர்களாகவிருந்தவர்கள் திடீ-ரென எதிரிகளாகிவிட்டதையுணர்ந்து கொண்ட KLA, நேட்டோ படையினருக்கெதிராகத் துப்பாக்கிகளைத் திருப்பியது. மசிடோனியாவில் கிளர்ச்சி ஒரு சில நாட்களிலேயே அடக்கப்பட்ட பின்பு இப்போது அந்தப் பிராந்தியம் அமைதியாகக் காணப்படுகின்றது.

அல்பேனியத் தீவிரவாதிகள் "அகன்ற அல்பேனியா" கனவு காண்பது ஒன்றும் இரகசியமானதல்ல. கிழக்கு-மேற்கு ஜேர்மனிகள் ஒன்றிணையுமானால், அல்பானிய மொழி பேசும் மக்கள் ஏன் ஒன்றிணையக்கூடாது ? என KLA தலைவர்கள் பகிரங்கமாகவே கேட்கிறார்கள். KLA கொசோவோவை விடுதலை செய்ய விரும்பியபோது உதவிய நேட்டோப் படைகள், மசிடோனிய இராணுவம் அல்பானியரின் போராட்டத்தை அடக்க ஏன் உதவின ? எல்லாமே சுயநல நோக்கில்தான் என்கிறார் யூகோஸலாவிய யுத்தங்களைப் பற்றி பல புத்தகங்களை எழுதியிருக்கும் பெல்ஜிய எழுத்தாளர் ஒருவர்.

90 களின் ஆரம்பத்தில் யூகோஸ்லாவியாவில் யுத்தம் வெடித்தபோதே சமாதானமாகப் பிரிந்த மசிடோனியக் குடியரசில்தான் நேட்டோ படைகள் தமது முதலாவது தளத்தை அமைத்தன என்ற முரண்நகையான உண்மையை அதற்கு நிரூபணமாகக் குறிப்பிடுகின்றார். காரணம்: எண்ணை வள அஸர்பைஜான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து மேற்கு ஐரோப்பா நோக்கிய எண்ணைக் குழாய்களை நிர்மாணிக்கும் வருங்காலத்திட்டங்களை மனதில் வைத்தே கொசோவோ பிரச்சினையில் அமெரிக்க-மேற்கைரோப்பிய நாடுகள் தலையிட்டன. பல்லின மக்கள் வாழும் முன்னாள் யூகோஸ்லாவியா உள்ளடங்கிய பால்கன் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்பின. இராணுவத்த தலையீடுகளின் பின்னால் பொருளாார நலன்கள் மறைந்திருப்பதாக அந்த எழுத்தாளர் மேலும் கூறுகிறார்.

கொசோவோவில் நேட்டோப்படைகள் தங்கியிருப்பதன்உண்மையான நோக்கம் அங்குள்ள மக்களுக்கு நாளை தெரியவரும்போது அவர்களின் எதிர் விளைவு என்னவாகவிருக்கும் ? நேற்று நேட்டோப் படையினரை விடுதலை செய்ய வந்ததாகப் பார்த்தவர்கள் நாளை ஆக்கிரமிப்பாளர்களாகப் பார்ப்பார்களா ? இன்று சுதந்திர நாடாகியிருக்கும் கொசோவோவிலிருந்து நேட்டோப் படைகள் விலத்திக் கொள்ளப் பட்டால் என்ன ஆகும்? இன்றை வரையில் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளாத செர்பியா, கொசோவோ மீது படையெடுக்குமா?

இதைவிட சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகள் சில தொக்கி நிற்கின்றன. கொசோவோ-வின் உதாரணத்தை பின்பற்றி ரஷ்யா அப்காசியா, ஒசேத்தியா போன்ற புதிய தேசங்களின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. ஈழத்தேசியவாதிகள் கொசோவோ வழியில் தமிழீழத்தை அங்கீகரிக்க கோரினார்கள். அவற்றை எல்லாம் ஏன் நேட்டோ நாடுகள் புறக்கணித்தன? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒன்றே ஒன்று தான். மேற்கத்திய நாடுக-ளின் தன்னலம் சார்ந்த வெளியுறவுக் கொள்கை. கொசோவோ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டு, மேற்கத்திய நாடுகள் தலையிடவில்லை.

ஐரோப்பாக் கண்டத்தில் யாருடைய தலைவிதியையும் தீர்மானிக்கும் வல்லமை தமக்கு உண்டு என, ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய பழைய வல்லரசுகள் நிரூபித்துக் காட்டின. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இயற்கை வளம் மிக மிகக் குறைவு. ஆனால் நிறைய பணம் வைத்திருக்கிறார்கள். அதற்கு மாறாக, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இயற்கை அன்னை தாராளமாகவே அள்ளிக் கொடுக்கிறாள். ஆனால் அவர்களிடம் பண பலமோ, படை பலமோ கிடையாது. அந்த நாடுகளில் ஆட்சியில் இருப்பவர்களை கைக்கூலிகளாக்கிக் கொண்டால் போதும். மேற்கத்திய தொழிலகங்களுக்கு தேவையான மூலப்பொருட்கள், எரிபொருள் என் பனவற்றை குறைந்த விலை கொடுத்து சுரண்டிக் கொண்டிருக்கலாம்.

# மண் வாசனை




**சி**ம்பாப்வே தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானை 24 ரண்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது. கிரிக்கெட் உலகில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது. சில காலம் டெஸ்ட் அந்தஸ்தில் இருந்து தற்காலிக தடைக்குள்ளாகி இருந்தத சிம்பாப்வே அணி அண்மையில் மீண்டும் டெஸ்ட் விளையாட ஆரம்பித்தது. பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் முதலாவதில் தோல்வி கண்ட சிம்பாப்வே இரண்டாவது போட்டியில் வென்றது மட்டுமன்றி தொடரையும் சமன்செய்து கொண்டது.

2001ஆம் ஆண்டின் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பங்களாதேஷை வென்றதை விட்டால் இதுவே பலமான அணியொன்றிற்கெதிரான முதலாவது வெற்றியாகும். குறிப்பாக டெஸ்ட் போட்டிகளில் மூன்று முறையே சிம்பாப்வே, பாகிஸ்தானுக்கு எதிராக வெற்றிகண்டிருக்கிறது. இந்தத வெற்றி 1998இன் பின் கிடைத்த வெற்றியுமாகும். மேலும் 2001ல் பலமான இந்திய அணியை சிம்பாப்வே தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடருக்கு முன் சிம்பாப்வே வீரர்களின் கொடுப்பனவுகள் தாமதமாகுவது தொடர்பில் அணிக்கும், சபைக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. இருந்தாலும் வேறு பல பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையிலேயே இந்தப் போட்டிகளில் சிம்பாப்வே கலந்து கொண்டது. குறிப்பாகக் கடந்த ஆறுமாதங்களாக அணிக்கு ஏன்றொரு பந்து வீச்சுப் பயிற்சியாளர் இல்லை என்று கூறும் தலைவர் பிரெண்டன் டெய்லர் முழுப்பாராட்டுகளையும் பந்து வீச்சாளர்களுக்குத் தெரிவிக்கிறார்.

இதேவேளை பந்து வீச்சாளர்களில் முதல் இணிங்சில் விட்டோரி ஐந்து விக்கெட்டுகள் சரித்தார். ஆனால் இரண்டாவது இணிங்சில் டென்டெய் சட்டாரா வீழ்ந்திய ஐந்து விக்கெட்டுகள் சிம்பாப்வேயின் டெஸ்ட் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இவர் வழமையாக சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்குள் நுழையும் ஹராரே அல்லது புலவா-யோ பிரதேசத்தைத் சேர்ந்தவரல்ல. மாறாக மிக வறுமை நிறைந்த குக்கிராமம் ஒன்றில் இருந்து வந்திருக்கிறார்.

சட்டாரா ஒவ்வொரு முறையும் விக்கெட் வீழ்த்தும் போதும் குறிப்பிட்டமைதான் மூலையொன்றை நோக்கியே ஓடிச்சென்றுள்ளார். ஆனால் அந்த மூலையானது பவிலியன் இருக்கும் பக்கமும் இல்லை. ரசிகர்கள் குவிந்திருக்கும் பக்கமாகவும் இல்லை. மாறாக வெறிச்சோடிப் போன ஒரு மூலையாக இருந்திருக்கிறது. இதற்கான காரணம் என்னவென்று பின்னர் கேட்ட போது எனது வறுமை நிறைந்த கிராமமான முட்டாரே அந்தத்திசையில் தான் இருக்கிறது. வசதிகளே இல்லாமல் விற்று சாதித்ததும், வெற்றிக்குத்துணை போனதும் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது அதனால் தான் அந்த மண்ணை நோக்கி ஓடிச் சென்று நன்றிதெரிவித்தேன் என்று கூறியுள்ளார்.

# தெரிந்தே செய்யலாமா




ஜோசெப் கிருஷ்ணா

தற்போது இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருப்பது சாம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள். இந்தப் போட்டிகளுக்கு ஏற்கனவே தகுதி பெற்றுவிட்ட அணிகளுக்கு அப்பால் மேலதிக இரண்டு அணிகளை தெரிவு செய்வதற்கான தெரிவுகாண் போட்டிகள் நடைபெற்றன. இந்த வகையில் இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிதான் கந்துரட்ட மரூன்ஸ். ஆனால் இந்த அணிவீரர்களுள் ஒருவரான இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் அணியில் விளையாட முடியாது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த முடிவை சாம்பியன்ஸ் லீக் ஏற்பாட்டுக் குழு அறிவித்திருந்தது. இதற்குக் காரணம் ரங்கன ஹேரத் கந்துரட்ட மரூன்ஸ் அணியைச் சோந்தவரல்ல என்றும், இவர் உத்துர யல்லோஸ் அணிக்காக விளையாடிவர் என்றும் நிரூபிக்கப்பட்டி ருப்பதுதான்.




இதுபற்றி அச்சூடாகம் ஒன்று எழுதுகையில் இலங்கை கிரிக்கெட் சபை இது பற்றிக் கவனமாக இருந்திருக்க வேண்டுமல்லவா என்று வினா எழுப்பியுள்ளது. சட்டத்துக்கு முரணான இந்தச் செயல் மூலம் ரங்கன ஹேரத் அவமதிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறுகிறது. இந்த விடயத்தில் கிரிக்கெட் சபையை மட்டும் குறை கூறுவது எப்படி பொருத்தம் என்று தெரியவில்லை. விதிமுறைகள் அணி நிர்வாகத்தினருக்குத் தெரியாதா? ஏன் ரங்கன ஹேரத்தான் அறிய மாட்டாரா? அப்படிப் பார்க்கையில் ஒட்டு மொத்தமாக எல்லோரும் சேர்ந்து சாம்பியன்ஸ் லீக் ஏற்பாட்டாளர்களை ஏமாற்ற முயன்றது மட்டுமன்றி, கிரிக்கெட்டின் மகத்துதவத்தையும் குறைத்துவிட்டார்கள் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

ரங்கன ஹேரத் தற்போதைய இலங்கையணியின் அதிசிறந்த சூழல் பந்து வீச்சாளர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஒரு நாள் ஐ.சி.சி தரவரிசையில் மூன்றாம் இடம் பெற்றிருப்பவர். டெஸ்ட் போட்டிகளில் அஸ்வின், அஜ்மல், சுவான் ஆகியோருடன் ஒப்பிட்டுப் பேசப்படுபவர். இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த ஒருவர் தேவையற்ற சர்ச்சைகளில் சிக்கிக் கொண்டது மிகுந்த வருத்தத்துக்குரியதாகும்.

மேலும் சாம்பியன் லீக் இருபதுக்கு இருபது போட்டிகளில் கலந்துகொள்ளும் அணிகளுக்கான கொடுப்பனவுகள் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான கொடுப்பனவுகளை விட மிகவும் அதிகம் என்று கூறப்படுகின்றது. தகுதிகாண் போட்டிகளில் பங்கு கொள்ளும் அணி அல்லது அணி உரிமையாளர் பெற்றுக்கொள்ளும் பணம் இலங்கை ரூபாயில் அறுபத்தைந்து மில்லியன் (6 கோடி ரூபாவுக்கு மேல்) தகுதி பெறத்தவறும் அணிக்கான கொடுப்பனவு ரூபா இருபத்தாறு மில்லியன். அரை இறுதிப் போட்டிக்குத்தகுதி பெறும் அணி 65 மில்லியன் ரூபா பெறும். இத்தகைய பெருந்தொகைப்பணம், அணியைப் பலப்படுத்த வீரரை உள்நுழைக்கக் காரணமாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுகிறது.

# எழுதுவதே பெருமைதான்

போர்த்துக்கல் தேசிய அணிவீரரும், றியல் மெட்ரிட் முன்வரிசை ஆட்டக்காரருமான கிறிஸ்ரியானோ றொனால்டோவின் அணி மாற்றச் சர்ச்சை முடிவுக்கு வந்துவிட்டது. தொடர்ந்தும் 2017 -2018 பருவகாலம் வரை றியல் மெட்ரிட் அணியில் நீடிப்பதற்கான ஒப்பந்தத்தில் கிறிஸ்ரியானோ. றொனால்டோ கையொப்பம் இட்டுள்ளார். மென்செஸ்ரர் யுனைட்டட் அணிக்கே 2015இல் மீண்டும் செல்லக் கூடும் என்ற எதிர்பார்ப்புக்கள் இப்போது பொய்யாகிவிட்டன. எனவே 2018இல் தான் உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வு பெறும் போது ரியல்மெட்ரிட் வீரராக இருந்தே ஓய்வு பெறுவேன் என்றும் கூறுகின்றார்.

1985 இல் பிறந்தவர் கிறிஸ்ரியானோ றொனால்டோ. மென்செஸ்ரர் யுனைட்டட் அணியில் இருந்து றியல் மெட்ரிட் அணிக்கு இவர் மாறிய போது அப்போதைய உதைபந்தாட்ட உலகில் மிகக் கூடிய பணத்துக்கு 131.6 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அணிமாறியவர் ஆனார்.



கிறிஸ்ரியானோ றொனால்டோ தனது தாயகமான போர்த்துக்கல் அணிக்காக 2003 ஆம் ஆண்டு கஸகஸ்தான் அணிக்கு எதிராகக் களம் இறங்கினார். அன்றில் இருந்து இன்றுவரை அவரது உதைபந்தாட்ட வாழ்க்கை ஏறுமுகமாகத் தான் இருக்கிறது. பல்வேறு விருதுகளுக்கு மத்தியில், PFA மற்றும் WFA விருதுகளை ஒரே வருடத்தில் நர்ன்கு முறைபெற்ற வீரர் என்ற பெருமையும் இவருக்கே உரியது.

மென்செஸ்ரர் யுனைட்டட் சார்பான பழைய நினைவுகளை இவர் இப்போது மனதில் கொண்டுள்ளார். யுனைட்டட் அணிக்காக நான் ஆறு வருடங்கள் விளையாடினேன். அங்கிருந்து பெறுமதிமிக்க அனுபவங்களையும் பெற்றேன் திறமைகளையும் வளர்த்துக்கொண்டேன். ஆனால் அவையெல்லாம் மறக்க முடியாத கடந்துபோன காலங்கள். இனி என் எதிர்காலம் றியல் மெட்ரிட் அணியுடன்தான். எனது குடும்பமும் இங்கு வந்துவிட்டது. நான் சந்தோஷமாகவே ஸ்பானியாவில் இருக்கின்றேன். சகல உதைபந்தாட்டக் கழகங்களையும் நான் மதிக்கின்றேன். என்னை அணுகிய பல்வேறு உதைபந்தாட்டக் குழுக்களுக்கும் நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இனி றியல் மெட்ரிட் அணிக்காக என்னை அர்ப்பணித்து விளையாடுவேன். எத்தனை விருதுகளை வெற்றி கெள்ள முடியுமோ அத்தனைக்கும் உறுதுணையாக இருப்பேன் என்றும் கூறியுள்ளார் இவர்.

# நம்பிக்கையே வாழ்வு



**சி**ம்பாப்வே அணியுடனான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் தோல்விகண்டதும் அணித்தலைவர் மிஸ்பா உலஹ்க்கை பதவி நீக்கம் செய்யும்படி பல தரப்பாரும் குரல் கொடுத்தனர். ஆனால் அவருக்கு ஆதரவாக ஒரு குரல் - முக்கியமான குரல் - எழுந்துள்ளது. அதுதான் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவர் நஜாம் சேத்தியின் குரல். ஒரு தொடரில் தோல்வி கண்டுவிட்டால் பூகம்பம் ஏதும் ஏற்பட்டு விடாது என்று கூறியிருக்கிறார் அவர். மிஸ்பாவை நீக்கும்படி கோரிக்கைகள் எழக்காரணங்களுள் முக்கியமான இரண்டு அவரது 39 வயதும், அவரின் ஆட்ட அணுகுமுறையுமாகும். ஆனால் சேத்தி கருத்துக் கூறும் போது மிஸ்பாவின் அணித்தலைமையில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன். அவரை அணித்தலைமையில் இருந்து நீக்குவது தொடர்பாக எவ்வித விவாதங்களும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் நடைபெறவில்லையென்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

மிஸ்பா இதுவரையில் தலைமை தாங்கிய இருபத்தியிரண்டு டெஸ்ட் போட்டிகளில் பத்து டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். அதேவேளை மிஸ்பா . தலைமை தாங்கிய ஐம்பத்து மூன்று ஒரு நாள் போட்டிகளில் முப்பது போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். ஆகவே அணித்தலைமை என்ற வகையில் சராசரிக்கும் கூடுதலான திறமை காட்டியவர் என்பதை மறுக்க முடியாது. அதேவேள்ள அவர் நல்லதொரு துடுப்பாட்ட வீரர் என்பதும், கடினமான வேளைகளில் அணியைக் காப்பாற்றக் கூடியவர் என்றும் பல சந்தர்ப்பங்களில் நிறுவப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவர் தொடர்பில் என்ன நடைபெறப் போகிறது என்பதைப் பொறுத்துத் தான் பார்க்க வேண்டும்.

இது ஒரு புறம் இருக்க இடைக்காலத் தலைவர் தொடர்ந்து பேசும் போது; தற்போது தடைப்பட்டு போயுள்ள இந்தியாவுடனான கிரிக்கெட் தொடர்புகளை மீண்டும் புதுப்பிக்க தன்னால் இயன்ற முயற்சிகளை எல்லாம் செய்வேன் என்றும் கூறியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளும் தத்தமது நாடுகளிலேயே பரஸ்பரம் சந்தித்துக்கொள்ளும் நாளைத்தான் கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். எப்பொழுது அது நிறைவேறும்.

# கிழக்கின் அபிவிருத்திக்கு சான்றாகப் போகும் சர்வதேச மாநாடு

**கடந்த முப்பது வருட கால யுத்தம் காரணமாக சர்வதே சரீதியில் நமது பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் ஆராய்ச்சிகளை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால், தற்போது நமது நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆராய்ச் சிகளை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதுடன் ஆராய்ச்சிகள் நமது சமூகத் திற்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத் திக்கும் பெரும் பங்களிப்பு செய்யும் என்ற நம்பிக்கை உண்டு.**

"யுத்தத்துக்குப் பின்னரான மீள்ச்சியில் அறிவியலும் தொழில்நுட்பமும்" எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழத்தின் இரண்டாவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு 12, 13ஆம் திகதிகளில் கிழக்கு பல்கலைக் கழகத்தின் நல்லையா மண்டபத்தில் உப வேந்தர் கலாநிதி கிட்னன் கோபிந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில், பிரதம அதிதியாகவும், பிரதம பேச்சாளராகவும் பங்களாதேஷின் டாக்கா பல்கலைக்கழக அரங்கியல்துறை பேரா சிரியர் ஜசயத் ஜமில் அகமட் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக தென்னாசியக் கற்கைகள் துறை இணைப் பேராசிரியர் கலாநிதி ராகுல் முகர்ஜீ, ஆகி யோரும் கலந்துகொண்டார். அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் கே.மகேசன், ரஜரட்டை பல்கலைக்கழக விவசாயப்பீட பேராசிரியை அருணி



பிரகஸ்பதி

வீரசிங்க, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளர் கலாநிதி ரி.சர்வேஸ்வரன் உள்ளிட்டோரும் கிழக்குப் பல்கலைக்கழகம் உட்பட இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் விரிவுரை யாளர்கள் கலந்துகொண்டனர்.

அதேநேரம், நிகழ்வில் நுண்கலைத் துறையினரின் கலாசார வடிவமைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், மட்டக் களப்பின் பாரம்பரியக் கலைவடிவமான களரித் தோரணம் சிறிய வடிவில் அலங்கார நினைவுப்பரிசாக வடிவமைக் கப்பட்டு அதிதிகளுக்கு வழங்கி வைக்கப் பட்டது. ஆரம்ப நிகழ்வினையடுத்து ஆய்வுச் சுவரொட்டிக் காட்சிப்படுத்தல்கள் நடைபெற்றன. இவ் மாநாட்டில், இலங்கை யின் சகல பல்கலைக்கழகங்களில் இருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

6 அமர்வுகளாக நடைபெற்ற இவ் மாநாட்டில் 12ஆம் திகதி மாலை மாநாட்டு இரா விருந்தும் கலாசார நிகழ்வுகள் மட்டக்களப்பு நகரிலுள்ள பாடுமீன் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

தேசியளவில், 2006ஆம் ஆய்வு மாநாடு முதல் தடவையாக கிழக்குப் பல் கலைக்கழகத்தில் நடத்தப்பட்டிருந்தது. இம் முறை இவ் மாநாடு சர்வதேச அளவில் நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாநாட்டில் தலைமை உரையாற்றிய கிழக்கு பல்லைக்கழக உபவேந்தர் கலா நிதி கிட்ணன் கோவிந்தராஜா கடந்த முப்பது வருட கால யுத்தம் காரணமாக சர்வதேசரீதியில் தமது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆராய்ச்சிகளை செய் வதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. ஆனால் அதற்கான சந்தர்ப்பங்கள் தற்போது ஏற் பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார்.

அதேநேரம், பல்கலைக்கழக விரிவுரை யாளர்களை பொறுத்தவரையில் கற் பித்தலும் ஆராய்ச்சிகளை செய்வதும் அவர்களின் கடமையாகும். அந்தவகையில் இந்த சர்வதேச ஆராய்ச்சி மாநாடு நமது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆராய்ச்சிகளை செய்வதற்கு ஊக்கத்தை அளிப்பதுடன் எதிர்கால சமூகம் சார்ந்த பயன்படக்கூடிய ஆராய்ச்சிகளை செய்வ தற்கும் சிறந்ததொரு வாய்ப்பாக அமை யும் என நினைக்கின்றேன்.

கடந்த முப்பது வருட கால யுத்தம் காரணமாக சர்வதேசரீதியில் நமது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆராய்ச்சிகளை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால், தற்போது நமது நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆராய்ச் சிகளை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதுடன் ஆராய்ச்சிகள் நமது சமூகத் திற்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத் திக்கும் பெரும் பங்களிப்பு செய்யும் என்ற நம்பிக்கை உண்டு.

அந்தவகையில், இந்த சர்வதேச மாநாடு நமது கிழக்கு பல்கலைக்கழகத்தை உலகத் திற்குக் கொண்டு செல்வதற்கு சிறந்த வாய்ப் பாக அமைந்துள்ளது.

இந்த சர்வதேச மாநாட்டில் பொறுப் பேற்றுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் யுத்தத் தின் பின்னரான இந்தக் கால கட்டத்தில் நமது மீள்கட்டமைப்புக்கு பெரிதும் பங்களிப்புச் செய்யும்.




எதிர்காலத்தில் பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் செய்யும் ஆராய்ச்சிகள் சமூகத் திற்கும் நாட்டிற்கும் பயன்பெற்றுக் கொடுக்கும்வகையில் மேற்கொள்ள வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் நான் வேண்டுகோள்விடுக்கின்றேன்.

ஒரு சர்வதேச மாநாட்டை நடத்துவ தென்பது இலகுவான காரியமில்லை. எனி னும் இந்த சர்வதேச மாநாட்டை இங்கு நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்ட அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறுகின்றேன் என்றார்.

மாநாட்டின் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட பங்காளதேஷின் டாக்கா பல்கலைக்கழக அரங்கியல்துறை பேராசிரியர் ஜசயத் ஜமில் அகமட், இலங்கையில் இருக்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம்களிடையே உள்ள தேசியம் தொடர்பான பார்வைக்கும் வேறு நாட்டவர்களிடையே இலங்கை தொடர் பில் உள்ள தேசியம் தொடர்பான பார்வை க்கும் வித்தியாசம் இருக்கிறது. அந்த வகையில், ஒன்றிணைவுகளுக்கான சூழ் நிலையை உருவாக்கும் வல்லமை கலை களுக்குண்டு எனத் தெரிவித்தார்.

அத்துடன், ரவீந்திரநாத் தாகூரின் சிந்தனை என்னவென்றால், மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியானவர்கள் அல்ல. அவர்கள் ஒவ்வொரு வருடமும் தொடர்புடையவர்கள். கண்ணுக்குப் புலப்படாத வகையில் ஒன்றுபட்ட தன்மைகள் காணப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகளவில் உருவான நவீன அரசியலான தேசியவாதம் மக்களை வேறுபடுத்தி வைத் திருக்கிறது. தேசியம் என்பது ஒன்றல்ல. அது ஒவ்வொருவரது பார்வையின் பாற்பட்டது.

இலங்கை எனும்போது, சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களின் இலங்கைத் தேசியம் பற்றிய பார்வை எவ்வாறு இருக் கிறது. இலங்கைக்கு வெளியில் இருப்பவர் களுக்கு இலங்கைத் தேசியம் எவ்வாறு தென்படுகிறது என்பது கேள்வி. இவ்வாறு பார்க்கின்றபோது, தேசியம் என்பது ஒன்றல்ல என்பது தெளிவாகின்றது.

இதன் எல்லைகள் உள்ளிருந்து மட்டு மல்ல, வெளியில் இருந்தும் பார்க்கப்படு கிறது. அத்துடன் இந்த எல்லைகள் தாண்டியும் தொடர்புபடுகின்ற, இணைக்கின்ற பண்புகள் பார்வைக்குட்பட்டும், இல்லாமலும் காணப் பட்டுக் கொண்டிருக்கின்றன. மனிதர்களு டைய வித்தியாசங்களும், ஒத்த தன்மைகளும், ஒன்றிணைவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கும் வல்லமை உடையவைகளாக கலைகள் காணப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டில் ஆரம்பத்திலிருந்து தேசியவாதம் தோற்றம்பெறுவதற்கு முன்னர் இந்த மனிதர்களின் ஒற்றுமைத்தன்மை களுடன் ஒன்றிணைந்தே வாழ்ந்திருக் கிறார்கள். அந்த நிலைமையை கலைகளால் உருவாக்கமுடியும் எனவும் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண் கலைத்துறையும், விபுலானந்தா அழகி யல் கற்கைகள் நிறுவகத்தினரும் இணைந்து ஏற்பாடு செய்த கிழக்குப் பல்கலைக்கழ கத்தின் இரண்டாவது சர்வதேச மாநாட்டிற் கான கலாசார நிகழ்வுகள் மட்டக்களப்பு பாடுமீன் விடுதியில் நடைபெற்றன. இதில், கர்நாடக இசைக்கச்சேரிகளும், பாரம்பரிய கூத்துக்களும் நடைபெற்றமை சிறப்பம சமாகும்.

கிழக்குப் பல்கலைக்கழத்தின் இவ் வருடத்துக்கான சர்வதேச மாநாட்டு ஏற் பாட்டுக் குழுவின் தலைவராக கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விவ சாய பொருளாதாரத்துறைத் தலைவர் கலாநிதி பி.சிவராஜா செயற்பட்டார். அத்துடன், மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுச் செயலாளராக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருஸ்ணாள் திருமார்பன் மற்றும் குழுவினர் மாநாட்டு ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் மிகுந்த ஒத்து ழைப்புகளை வழங்கியவகையில் சிறப் பாக நிறைவடைந்த இவ்வருடத்துக்கான சர்வதேச மாநாட்டில் இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்களும், கலாநிதி களும், பேராசிரியர்களும் ஆய்வுகளைச் சமர்ப்பித்தனர்.


அந்தவகையில், கடந்த 17 மாதங் களுக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தராகப் பொறுப்பேற்றுக் கொண்ட கலாநிதி கிட்னன் கோபிந்த ராஜாவின் வேலைத்திட்டங்களுக்கு இதுவும் ஒரு படிக்கல்லாகவே இருக்கும்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றும் கல்வி, கட்டமைப்பு, உட் கட்டமைப்பு, உள்ளிட்ட அனைத்து துறை களினதும் அபிவிருத்திகள் எதிர்கால கிழக்கின் கல்விப் பொருளாதார மேம் பாடுகளில் பெரும்பங்காற்றும் என்றால் அது குறைவில்லாத வார்த்தையாகும். ஒரு சமூகத்தின் மேம்பாட்டுக்கு கல்வித் துறை எவ்வளவுக்குப் பங்காற்றுகிறது என்பதற்கு அப்பிரதேசத்தின் பல்கலைக் கழகம் பதில்சொல்வதாகவே இருக்க வேண்டும்.

கடந்த 30 வருட கால யுத்தத்தின் பிடி யில் சிக்கித் தவித்த வடக்குக் கிழக்கின் ஒரு பகுதியான கிழக்கின் முன்னேற்றத் தின் எடுத்துக்காட்டாக எதிர்காலத்தின் அபிவிருத்திகளும் மேம்பாடுகளுமே சான்றாக அமையவேண்டும். அந்தவகையில் நடைபெற்றுமுடிந்த யுத்தத்துக்குப் பின்னரான மீள்ச்சியில் அறிவியலும் தொழில்நுட்ப மும் எனும் தலைப்பிலான சர்வதேச மாநாடு ஒரு முன்னேற்பாட்டாக இருக்கும் என்று நம்புவோம்.

**சோ.திலகராஜ்**
**கண்டாவளை**



# மாற்றங்கள்

**எ**துவும் அறியாத இப் பிள்ளை அரவிந்த் இறங்கும் போதும் முடியை விடவில்லை.

அரவிந் தன்னைப் பார்த்தவுடன் தன்மீதுள்ள கோபத்தில்தான் இறங்குகிறான் என்பது ஆர்த்திக்கு தெரிந்துவிட்டது.

இறங்கும்போது பிள்ளை தலை முடியை இழுத்தபடியே இறங்கினார்கள். பாசப்பிடியிலிருந்து விலகமுடியாத ஆர்த்தி தன்னையறியாமலே என்ரை பிள்ளை என்ரை அரவிந்த் என கதறியபடி கீழே இறங்கி பிள்ளையைப் பறித்து தன்னோடு கட்டி அணைத்துக்கொண்டாள். அரவிந்த் என்னை மன்னிச்சிடு.

பிள்ளையையும் கவனித்துவரும் தாய் பிள்ளையை மருந்தெடுக்க அனுப்பிவிட்டு அவர்களின் வருகைக்காக பார்த்துக் கொண்டிருந்த தாய்க்கு அரவிந் ஆர்த்தியுடன் வீடுவந்து சேர்ந்தபோது மனம் மகிழ்ந்தவளாக வாழ்த்தி வீட்டினுள்ளே

நானொன்றும் வேணுமென்று செய்யேல்லை. யாரும் கொல்ல நினைத்தால் மூன்று பேரையும் கொல்லட்டும்.

எனக்கு நீ வேணும்; என்ரை பிள்ளை வேணும் என அழுதாள். அப்போது பேரூந்தில் இருந்தவர்கள் சண்டையோ என நினைத்தாலும் முருகேசர் தான் செய்த தவறைத் தெரிவித்து உண்மையைக் கூறிவிட்டார். அப்போது தான் செய்ய முற்பட்ட தவறு பற்றியும் அதற்குத் தனது மனைவி பார்வதி செய்த பிராயச்சித்தம் பற்றியும் யோசித்தார்.

தற்போது அரவிந்தையும் அழைத்துப்போனார். அரவிந்திற்கு ஆர்த்தியுடன் சேர்ந்துகொண்டது சந்தோஷத்தை ஏற்படுத்தினாலும் இனி என்ன நடக்குமோ என ஆர்த்தியிடம் தனது கருத்தைத் தெரிவிக்கையில் ஒவ்வொரு நாளும் நான் வேதனைப்பட்டு சாவதைவிட ஒருநாள் என்றாலும் உங்களுடனும் பிள்ளையுடனும் சந்தோஷமாக வாழ்ந்து சாவதை நான் பெருமையாக நினைக்கின்றேன்.

தடவுள் நல்லவர்களைச் சோதிப்பான், ஆனால் கைவிடமாட்டான். உங்கட பாட்டியின் வேண்டுகைப்படி பிள்ளை யாரப்பா உங்களைக் கைவிடவில்லை.

அப்பா, அம்மா ஆசைப்படி நாளைக்கு வைத்தியப்பட்டம் பெறப்போகின்றீர்கள் நடப்பது நடக்கட்டும். நாளைக்குப் போக வேண்டிய அலுவலைப் பாருங்கள் என ஆர்த்தி கூறியது அரவிந்திற்கு ஓரளவு துணிவை வரவழைத்திருந்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்த ஆர்த்தி நாளைக்கு நானும் வரலாமா என மெல்லிய குரலில் அரவிந்திடம் கேட்டபோது முருகேசர் விடவேணுமே என பகிடியாக அரவிந்த் பதிலளித்தான்.

அதுதானே அவர் விட்டுவிட்டுப் போய் விட்டார் என ஆர்த்தி கூறிமுடிக்கும் முன்னே முருகேசனும் பார்வதியும் அரவிந்தின் வீட்டுக் கேற்றடியில் ஆர்த்தியைக் காணவந்திருந்தனர். கேற்றைத் திறக்கச் சென்ற அரவிந்திடம் அவர்கள் ஏதோ சொல்ல முற்பட்டபோது அரவிந்த் எதையும் கூறவிடாது எல்லாவற்றையும் மன்னித்தவனாக உள்ளே அழைத்துச் சென்றான்.

**(முற்றும்)**



**மிகிந்தலை**
**A.பாரிஸ்**

# ஊமையான உண்மைகள்!

**தி**டீரென்டு வானம் இருளானது.

இராப்பொழுது போல் வானம் இருந்தாலும் கைக்கடிகாரத்தை நோக்கினேன். அது பகல் பொழுதைக்காட்டியது. அதற்குள் அவிழ்த்துவிட்ட மாடுகள் ஓடுவபோல் வானம் சடசடவென்று ஓசையோடு மழை பொழியத்துவங்கியது.

உடனே அருகில் இருக்கும் வீட்டுக்குள் நுழைந்தேன். அது எனக்கு நன்கு பரீட்சயமான நசுருதீனின் வீடு. ஆகையால் அடுத்தவர் வீடு என்பதை மறந்து உரிமை உள்ளவனாய் அங்கிருந்த கதிரையில் அமர்ந்துகொள்கின்றேன். 'நசுருதீன்' என்று அழைத்தவண்ணம் தலையை உயர்த்தினேன். சுவரில் தொங்கும் கடிகார முட்கள் மாலை மூண்டு மணியைக்காட்டியது.

நசுருதீன் கோவைப்பழம் போல் சிவந்த விழிகளோடு அடுப்படிப்பக்கம் இருந்து விறாந்தைக்கு வந்தான். அடுப்படியில் இருந்துவந்ததால் சமையல் ஏதும் செய்து இருப்பான். புகைவிழியை சிவக்க வைத்திருக்கும் என்று நினைத்தேன்.

என் அருகில் வந்தபிறகு முகத்தை உற்று நோக்கினேன். அதன் பிறகுதான் உறுதிப்படுத்திக்கொண்டேன், அவன் அழுது இருப்பதை! அவனுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தது மகன். இளையது மகள். மனைவி சாலிஹா மத்தியகிழக்கு நாடு ஒன்றுக்குப் போய் ஐந்து மாதம் இருக்கும்.

அவனின் சொந்த ஊர் கந்தளாய். அவனும் என்னைப்போல் திருமணம் முடித்து கட்டுக்கெலியாவைக்கு வந்து தனிக்குடித்தனம் நடத்துபவன். ஊர் பிறக்காதவன் என்றாலும் அந்த ஊரில் அவனுக்கிருக்கும் அன்பும் ஆதரவும் எவருக்கும் இல்லை என்றுதான் கூற வேண்டும். அந்தளவுக்கு நற்பண்புகள் சுரக்கும் ஊற்று என்பதுதான் பொருந்தும்.

திருமணம் முடிக்கும்போது கைக்கூலி, வீடு வாசல், அழகு எதையும் தேடவும் இல்லை! கோரவும் இல்லை! அவன் மனைவி சாலிஹா சிறுமியாய் இருக்கும்போது தந்தை இறந்துவிட்டார். அந்தவகையில் அவள் மிகவும் ஏழை. ஆனாலும் பிடிவாதம் மட்டும் மலைபோல் அவளிடம்! மற்றப்படி அனைத்துவித விடயமும் மிகவும் இயல்பாய் இருக்கும்.

நசுருதீனின் குடும்பத்திடம் அவனிடம் இருக்கும் மனிதம் துளியளவும் கிடையவே கிடையாது! அதுதான் தனிக்குடித்தனம் நடத்த வழிசமைத்துவிட்டது.

அவன் கொஞ்சம் கொஞ்சமாய் சேமித்து ஒரு காணியை வாங்கி சிறிய வீடொன்றை கட்டினான். அந்த வீட்டில் இரண்டு படுக்கையறை, விறாந்தை, குசினி. அதைவிட அவனுக்கென்று ஒரு மோட்டார் சைக்கிளும் இருந்து மொத்தத்தில் குறை எதுவும் இல்லாமல் குடும்பம் நடத்தினான்.

அவனுக்கு தொழில் சில மாதமானாலும் ஒரு வருடத்திற்கு பணம் சேமித்துக் கொள்வான். செய்வது வயல் வேலை. ஆனாலும் அரச ஊழியராய் இருக்கும் நானும் பலமுறை கைமாத்துக்கு பணம் வாங்கியுள்ளேன்.

எந்தக் குறையும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த நசுருதீனின் தலைவிதியை மாற்றி அமைத்தாள் சாலிஹா. ஆமாம், சாலிஹாவின் அந்த வார்த்தை தலையில் விழுந்த சம்மட்டி அடிபோல் இருந்தது அவனுக்கு!

"நம்மட ஊட்ட பாருங்க... இதெல்லாம் இப்ப பெஷன் இல்லே, ஓடச்சி கட்டுவோம்" அதிக பெண்களின் மனதில் ஓடும் படம் இவள் மனதிலும் ஓடியது! "இல்லே சாலிஹா ஊடு கட்டுறது பெஷனுக்கா? வெயிலில் இருந்தும் மழையில் இருந்தும் நம்மல பாதுகாத்தா போதும்தானே?"

அவள் வெளிநாட்டுக்கு போகும் முடிவில் இருந்து துளியும் மாறவில்லை. ஒருநாள் அஸர் தொழுகையை முடித்துவிட்டு பள்ளி வாசலில் இருந்து நானும் அவனும் வரும் போது தன் நிலைப்பாட்டையும் மனைவியின் முடிவையும் விபரமாகக் கூறினான்.

"கவலப்படாதீங்க நசுருதீன்! இப்ப நானும் உங்களோடு ஊட்டுக்கு வாறென், தங்கச்சியோட கதைப்பம்" என்று கூறியவண்ணம் இருவரும் வீட்டை அடைந்தோம். சுடசுடத் தேநீர் கொண்டுவந்தாள் சாலிஹா. தேநீர் அருந்தியவண்ணம் சுடாத வார்த்தைகளை மெதுவாக அவள்மீது தூவினேன். பணிப் பெண்ணாக போய் கஷ்டப்பட்டவர்களின் துன்பங்கள், அவலங்கள், பத்திரிகைகளில் படித்த பலரின் தகவல்களை பகிர்ந்தேன்.

இறுதியாக முழு அகிலத்தையும் அதிர வைத்த ரிஸானாவின் கதையை கட்டவிழ்த்து விட்டேன். அவள் அனைத்தையும் மறுதலித்தாள்.

"நானா எனக்கு வெளங்குது. வெளியில போர பொம்பளகளுக்கு மூணு லட்சம் முற்பணம் கொடுக்கிறாங்க. அதெ எடுத்திட்டு இரண்டு மூணு மாதத்தில வீட்ட விட்டு பாஞ்சிடுவேன். எனக்கு சொன்ன புத்திமதிகள் அவருக்குச் செல்லுங்க. அவர் பாவம் ஒரு வருத்தக்காரன். எப்பவும் இப்படி கஷ்டப்படுறது.... அதான் இப்படி முடிவெடுத்தேன்"

நேரமும் விரைவாக நகர்ந்து மஃரிப் தொழுகைக்கான அதான் ஒலித்தது. இரண்டு பேரும் மீண்டும் பள்ளிவாசல் நோக்கி விரைந்தோம். அன்றைய சந்திப்பிற்கு பிறகு இன்றுதான் நீண்டநேரம் கதைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்தை மழைதான் உருவாக்கியது என்றுதான் கூறவேண்டும். அதையும்விட முன்னர் மாதிரி அடிக்கடி சந்திக்க சந்தர்ப்பமும் இல்லை. நான் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் சென்றதால்....

நசுருதீன் குடும்பத்தின் கதையை கூற என் மனைவி மறப்பதில்லை. ஒரு மாதத்திற்கு உட்பட்ட காலத்திற்குள் சொன்னாள். சாலிஹா வீட்டைவிட்டு பாய்ந்து செல்ல முயற்சித்ததாகவும், எஜமான் கைதுசெய்து பொலிஸில் ஒப்படைத்ததாகவும், பொலிஸில் ஒப்படைக்கும்போது பணம், நகைகளை திருடிக்கொண்டு ஓடியதாக புகார் செய்துள்ளதாக கூறினாள்.

விடயங்களை அறிந்துவைத்திருந்த நான், நசுருதீனின் முகத்தில் கண்டு கொண்டேன் இதுதான் விடயம் என்று. அந்தவகையில் அவன் மனம் நோகாமல் நலம்விசாரித்து, மதிய உணவு, பிள்ளைகளெல்லாம் விசாரித்த பிறகு மனைவியின் விடயத்திற்கு வந்தேன்.

"சாலிஹாட விஷயம் என்னவாம்?"

"அதெ நெனச்சித்தான் இவ்வளவு நேரமும் அழுதேன் பாரிஸ். குடியிருக்கிற வீட்டை அடவு வச்சித்தான் பத்து லட்சம் கட்டியுள்ளேன். இண்டைக்கு நாளைக்கு என்று செல்றான், ஏஜென்சிக்காரன். இன்னும் ஒரு முடிவும் இல்ல"

என்று முடிப்பதற்குள் அவனுக்கு தொலைபேசி அழைப்புவந்தது. "இன்னும் அஞ்சி லட்சம் வேணும் திங்கட்கிழமை ஆள எடுக்கலாம்" என்று கூறியது என் காதில் விழுந்தது. நசுருதீன் ஏதோ என்னிடம் கூற உச்சரிக்கையில் தடுத்துவிட்டு, "மனிதனுக்கு சோதனைவரும் அதற்காக கவலைப்பட வேண்டாம். அல்லாஹ் பெரியவன்" என்று அவனுக்கு ஆறுதல் கூறியவண்ண்ம் வலிசுமத்த மனதுடன் விழிகலங்கியவனாய் கிளம்பினேன்.

எனது விடுமுறையும் முடிந்தது. வேலைக்கு வந்து நான்கு தினங்களுக்குள் சாலிஹா வந்துவிட்டதாய் என் மனைவி கூறினாள். சில நாட்கள் மிகமிக விரைவாக கரைந்தது. வழமைபோல் அன்றும் இரவு 8.00 மணியளவில் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினேன். பேரிடியை ஏற்படுத்தியது மனைவியின் குரல்!

"ஒங்களுக்கு தெரியுமா ஒரு விஷயம் சொன்னாத்தானே தெரியும்"

"ஊரு முழுக்க சாலிஹா ராத்தாண்ட கததான். வெளியில இருந்துவந்த ஒடனே ஆட்டோ வாங்கிட்டாங்க. களவெடுத்த காசி போலதான் இருக்கு..." என்று மனைவி முடிப்பதற்குள் குறுக்கிட்டேன். "இருக்கும். அடுத்தவர் கதய விடு நம்மட கதய கத" அதன்பிறகு வீட்டுப் பிரச்சினையை கதைத்தோம்.

நாட்கள் நகர்ந்தது, அடுத்த மாதவிடு முறையில் வந்தேன். பஸ் இல்லாததால் கணதராவ குளக்கட்டில் இருந்து மெது மெதுவாக நடந்துகொண்டிருந்தேன். ஒரு கறுப்புக் கவர் TVS முச்சக்கர வண்டி அருகில் வந்துநின்றது. "ஏறுங்க" அது நசுருதீனின் குரல்! விடயத்தை வினா வினேன். அதன் பிறகுதான் இரகசியம் அறிந்தேன்.

மாமியாரின் குடிசை வீட்டுக்காணியை சாலிஹாவின் பெயரில் எழுதிவைத்துவிட்டு மரணித்துள்ளார். அந்தக்காணியை விற்பனை செய்துவிட்டு கடன் அடைத்துள்ளான். வாங்கியவனிடம் மீதிப்பணம் மூண்டு இலட்சம் இல்லாதபடியால் அவனுடைய முச்சக்கரவண்டியை கொடுத்துள்ளான். சாலிஹாவின் வெளிநாட்டுப் பயணத்திற்குள் தாய் இயற்கை எய்தினாள். சடலத்தை பார்க்கும் பாக்கியம்கூட அவளுக்கு கிடைக்கவில்லை.

ஊர் முழுக்க சாலிஹாவை பற்றிய வதந்தி உண்மைகளை ஊமையாக்கியது! இப்படித்தான் ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் பொய்வதந்திகளால் உண்மைகள் ஊமையாகிறது.

**(உண்மை கலந்த கற்பனை)**

# தேர்தல் களத்தில் சந்தித்த சங்கடங்கள்




**"நான் யாருக்கும் "வோட்" போடமாட்டேன்; வேறு ஏதாவது விசயம் கதைக்கவேணும் எண்டால் சொல்லுங்கள். இங்க வந்த சனங்களோட ஒரு ஆளாய் நானும் இருக்கிறன். நான் போய் மிளகாய்ச் செடிக்கு தண்ணி பிடிக்கணும்" இப்படி ஒருவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அங்கு வந்திருந்த ஒவ்வொருவரின் முகத்திலும் ஏதேதோ துயரங்கள், பிரச்சினைகள், சோலிகள் குடிகொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. பெரும்பாலும் எல்லோரும் கொடுமையான அந்த ஆயுத வன்முறைகளுக்கு முகம் கொடுத்தவர்கள்தான். அவர்கள் இப்போது வரலாற்றில் முதன்முறையாக ஒரு மாகாண சபைத் தேர்தலுக்குத் தங்களை தயார்ப்படுத்த வேண்டியிருந்தது.**

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

**நான்** யாருக்கும் 'வோட்' போட மாட்டேன், வேறு ஏதாவது விசயம் கதைக்கவேணும் எண்டால் சொல்லுங்கள். இங்க வந்த சனங்களோட ஒரு ஆளாய் நானும் இருக் கிறன். நான் போய் மிள காய்ச் செடிக்கு தண்ணி பிடிக்கணும்" இப்படி ஒருவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

அங்கு வந்திருந்த ஒவ்வொருவரின் முகத்திலும் ஏதேதோ துயரங்கள், பிரச்சி னைகள், சோலிகள் குடிகொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது.

பெரும்பாலும் எல்லோரும் கொடுமை யான அந்த ஆயுத வன்முறைகளுக்கு முகம் கொடுத்தவர்கள்தான்.

அவர்கள் இப்போது வரலாற்றில் முதன் முறையாக ஒரு மாகாண சபைத் தேர்தலுக்குத் தங்களை தயார்ப்படுத்த வேண்டியிருந்தது.

இலங்கை என்ற இந்தக் குட்டித் தீவு கால் நூற்றாண்டையும் சற்றுத் தாண்டி கிட்டத்தட்ட 3 தசாப்தங்களாக ஆயுத வன் முறைகளால் சல்லடையாக்கப்பட்டிருந்தது.

அந்தக் கால கட்டத்தில் இலங்கை நிர்வாகரீதியாக இலங்கை அரசின் கட்டுப் பாட்டுப் பகுதி, கட்டுப்பாடற்ற பகுதி என இரு கூறுகளாகத் துண்டாடப்பட்டும் இருந்துவந்தது.

அபிவிருத்தியும் அரசியலும் இன்னபிற நடவடிக்கைகளும் அரசின் கட்டுப்பாட்டி லிருந்த ஒரு பகுதியில் முன்னெடுக்கப் பட்டுக் கொண்டிருந்த அதேவேளை, பிரதான நிலத் தொடர்பிலிருந்து துண்டிக்கப்பட்ட மக்கள் ஜனநாயகத்துக்கு அப்பாற்பட்ட ஆளுகையின் கீழ் ஒற்றைப் பரிபாலனம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதன்காரணமாக வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழ்ந்த மக்களுக்கு அரசியலும் அபிவிருத்தியும் புழக்கத்தில் இல்லாத ஒன்றாகவே இருந்துவந்தது.

அதேவேளை எல்லாமே ஆயுதக் கலா சாரத்தின் கீழ் பரிபாலனம் செய்யப்பட்டும் வந்தது. ஜனநாயகத் தெரிவு என்பதற்கும் மாற்றுக் கொள்கை என்பதற்கும் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பின்னாட்களில் நாட்டின் பெருநிலப்பில் ஏற்பட்ட சில அரசியல் மாற்றங்களாலும் ஸ்திரமான ஆட்சியினாலும் வடக்கு, கிழக்கில் கோலோச்சியிருந்த ஆயுதக் கலாசாரத்தை முறியடிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது.

அதன்காரணமாக முதன்முறையாக வடக்கு மாகாணம் முழுவதும் ஏக காலத் தில் ஒரு ஜனநாயகத் தேர்தலைச் சந்திப் பதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அதற்கு முன்பதாக தேர்தல் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டும் வேலைத்திட்டங் களை 'கபே' எனப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் முன்னெடுத்திருந்தது.

வட மாகாணத்திலுள்ள எல்லா மாவட் டங்களிலும் சிவில் சமூக அமைப்புக் களைப் பலப்படுத்தி சிவில் நிறுவனங்களின் மன்றங்களைக் கட்டியெழுப்பும் கலந்துரை யாடல் நடத்தப்பட்டும் வந்தது.

மாவட்ட சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகள், சமூக ஆர்வலர்கள், ஆர்வமுள்ள குழுக்களுமாக (Stake Holders) பல பிரதி நிதிகள் இந்த சிவில் நிறுவனங்களின் மன்றங்களைக் கட்டியெழுப்பும் கலந்துரை யாடல்களில் கலந்துகொண்டிருந்தனர்.

வட மாகாணத்தில் வடமாகாண சபைத் தேர்தலுக்காகப் போட்டியிடும் அனைத்துக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களின் அபேட்சகர்களும் இந்த கலந்துரையாடல் களில் பங்குபற்றியிருந்தனர்.

சமகால சூழலில் சிவில் சமூக அமைப்புக் களைப் பலப்படுத்தி, அனைத்து சிவில் சமூக அமைப்புக்களின் மன்றம் ஒன்றைக் கட்டியெழுப்புதலின் முக்கியத்துவம் மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் இடம்பெறுவதற்கு சிவில் சமூக அமைப்புக் களின் பங்களிப்புப் பற்றியும் இக்கலந்துரை யாடலில் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் தேர்தலுக்காகப் போட்டியிடும் அனைத்துக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களும் ஒரே மண்டபத்தில் அமர்ந்து "வன்முறையற்ற தேர்தலொன்றை நடத்தி முடிப்பதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்" என்ற உறுதியுரையும் அளிக்க அங்கு வாய்ப்பேற்பட்டிருந்தது.

இதேவேளை ஆயுத வன்முறைகளால் சின்னாபின்னப்பட்டு சகலவற்றையும் இழந் திருந்த மக்கள் தங்களுக்கான ஆளடையா ளத்தை உறுதிப்படுத்தக்கூடிய தேசிய ஆளடையாள அட்டைகளையும் இழந்திருந் தார்கள்.

வாக்களிப்பதற்கு ஆளடையாள அட்டை அவசியம். வட மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்ட கணக்கெடுப்புக்களின்படி சுமார் 85 ஆயிரம் பேருக்கு ஆளடையாள அட்டை இல்லாதிருப்பது தெரியவந்தது.

இதனைக் கருத்திற்கொண்ட 'கபே' நிறுவனம் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தை அழைத்துக்கொண்டு வடமாகாணம் முழுவதும் மக்களின் கால டிக்குச் சென்று தேசிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்கும் பணி யில் ஈடுபட்டது.

பிறப்புப் பதிவு தொடக்கம் ஆளடையாள அட்டைக்கான புகைப்படம் வரை எல்லாமே இலவசமாகவே பெற்றுக் கொடுக்கப்பட்டன.

தேர்தல் நெருங்கும்வரை இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

அடையாள அட்டை இல்லாதிருந்த 86 ஆயிரம் பேரில் சுமார் 26 ஆயிரம் பேருக்கு மூன்று வார காலப்பகுதிக்குள் தேசிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

இதனைவிட மீதி 60 ஆயிரம் பேருக்கு தற்காலிக ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்ததாக 'கபே' நிறுவனத்தின் நிறைவேற்றப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இதன்மூலம் வாக்களிக்க முடியாதிருந்த சுமார் 86 ஆயிரம் பேரின் வாக்குரிமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

'கபே' நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இடம்பெயர் சேவைமூலம் ஆளடையாள அட்டை பெற்றுக்கொண்டவர்களில் இலங் கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஆனந்த சங்கரியும் ஒருத்தர்.

இடம்பெயர் சேவைமூலம் தான் தேசிய ஆளடையாள அட்டைக்கு விண்ணப்பித்து 12 நாட்களில் தனக்கு ஆளடையாள அட்டை கிடைத்துவிட்டதாக அவர் மகிழ்ச்சி தெரி வித்தார்.

அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் எல்லோரும் தமது பெறுமதிமிக்க வாக்கை செல்லுபடியானதாகும் வகையில் வாக்களிக்க வேண்டும். அப்படியாயின் வாக்காளர்களுக்கு அறிவூட்டப்படவும் வேண்டும். இதனையும் கபே நிறுவனம் கிராமம் கிராமமாகச் சென்று



செய்திருக்கின்றது.

அதேவேளை இந்தத் தேர்தலில் பெண் களின் பிரதிநிதித்துவத்தையும் உறுதிப் படுத்த வேண்டும் என்பதில் தாம் கண்ணும் கருத்துமாக இருந்ததாகவும் இதற்கான பிரசாரங்களை தாம் பரவலாக படித்த மற்றும் பாமர சமூகங்கள் மத்தியிலும் மேற் கொண்டதாகவும் கபே நிறுவனத்தின் தேசிய அமைப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் தெரிவிக்கிறார்.

இவை எல்லாவற்றையும்விட வன்முறை யற்ற தேர்தலொன்றை எல்லோருமாக சேர்ந்து உறுதிப்படுத்தவேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு.

இந்த விடயத்திலும் கபே நிறுவனம் அக்கறை எடுத்துச் செயற்பட்டிருக்கின்றது.

வடமாகாணத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப் பாணம் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களிலும் உள்ள சகல வாக்குச் சாவடிகளிலும் கபே நிறுவனத்தினால் கண்காணிப்புக்கென பயிற் சியளிக்கப்பட்ட சுமார் 700 உள்ளூர் கண் காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

வடமாகாணத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான, வன்முறையற்ற தேர்தல் ஒன்றுக்கு மக்களையும் அங்குள்ள சிவில் சமூகத்தையும் தயார்ப்படுத்தும் பணியில் தான் 2009ஆம் ஆண்டிலிருந்தே இறங்கிவிட்டிருந்ததாகக் கூறும் கபே நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் அவர்கள் 2009 காலப்பகுதியில் ஐந்து பேர் மாத்திரமே சிவில் சமூகம் சார்பில் கலந்துகொண்ட தாகவும் எனினும் தேர்தலுக்கு முன்பாக நடத்தப்பட்ட சிவில் சமூகங்களைக் கட்டி யெழுப்பும் கூட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் குறைந்தது முந்நூறு பேருக்கு மேல் பங்கெடுத்ததாகவும் தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பாளர்கள் மிக மிக நடுநிலையானவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கான பயிற்சிகள், சட்டத்தரணிகள் மற்றும் துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்டும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இது ஒரு ஜனநாயகப் பண்புக்கான ஆரம்பமாகக் கொள்ளமுடியும். ஆயினும் வடமாகாணத்தின் இரண்டு சம்பவங்களில் கண்காணிப்பாளர்கள் தாக்கப்பட்டிருக்கின் றார்கள்.

சிவில் சமூகத்தின் மன்றங்களைக் கட்டியெழுப்புதல், வாக்குரிமையை உறு திப்படுத்துவதற்காக ஆளடையாள அட்டை களைப் பெற்றுக்கொடுத்தல், வாக்களார் களுக்கு தமது பெறுமதியான வாக்குகள் நிராகரிக்கப்படாமல் அளிப்பதற்கு அறி வூட்டுதல், பெண்களையும் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்க வைத்தல் என்பனவற்றோடு, வன்முறையற்ற தேர்தல் இடம்பெறவேண்டும் என்பதற்காக கண் காணிப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப் பட்டிருக்கின்றது.

இவையெல்லாம் ஒருபுறம் நடந்திருந் தாலும், தமக்குப் பொருத்தமானவர்களை சமூகத்தோடு ஒன்றித்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய உத்தமர்களை உருவாக்கவும் அவர்களை அரசியல் தலைவர்களாகத் தெரிவுசெய்வதற்கும் சமூகத்திற்கு அறிவூட்டப்படல் வேண்டும்.






# கண்கள் கேட்ட வரம்

காதலில்
கண்கள்தான் கௌரவத்துக்குரியவை!
இதழ்கள் பேசமுடியாத
செய்திகளையெல்லாம்
கண்கள் வழியாகத்தான்
காதலர்கள் கடத்தி முடிக்கிறார்கள்!

காதலர்களின்
தூதர்கள் கண்கள்தான்!
காதலர்களின்
வாய்களும் கண்கள்தான்!

பலர் நிறைந்த சபையிலும்
யாருமறியாமல்
காதலர்கள் பேசிக்கொள்கிறார்கள்.
பார்வைகள் மூலமாகவே
பாஷைகள் பரிமாறப்படுகின்றன!

கண்களால் அழைக்கலாம்
கண்களால் முறைக்கலாம்
கண்களால் நகைக்கலாம்
கண்களால் பரிகசிக்கலாம்!

கண்களின்
உபயோகம் தெரிந்தவர்கள்
காதலர்கள் மட்டும்தான்!

புவனாவும் - அவனும்
கண்களால்தான் கதை பேசிக் கொண்டனர்!
புவனாவும் - அவனும்
கண்களால்தான்
காதலுக்கு விதை போட்டுக் கொண்டனர்!

போட்ட விதை முளைக்க
நீர் விட்டதும் கண்கள்தான்!
முளைத்த செடி செழிக்க
உரம் போட்டதும் கண்கள் தான்!
செழித்த செடி பூக்க
வியந்து பார்த்தவையும் கண்கள் தான்!

'கண்கள்தான்
நம் எஜமானர்கள்
கண்கள்தான்
நம் காதல் கடவுள்கள்!'
என்றான் அவன்!

'கண்கள் தான்
பொல்லாத திருடர்கள்
கண்கள்தான்
நம் காதலின் எதிரிகள்!'
என்றாள் அவள்!

அவனுக்கோ
அடர்த்தியான ஆச்சரியம்!

'எப்படி - அது எப்படி
கண்கள் எதிரிகளாக முடியும்?'

'இடைக்கிடையே
இமைக் கதவுகளை சாத்துவதால்
உங்களை
இடைவிடாமல் பார்க்க முடியவில்லையே
அதனால்தான் எதிரிகள் என்றேன்!'

'எனக்கில்லையே அந்த
இடையூறு ஒருநாளும்!'
'ஏனில்லை
கண் இமைப்பதேயில்லையா?'

'புறக்கண்கள் மூடும்போது
அகக் கண்களை திறந்து கொள்வேன்.
நேரில் மட்டும்தானா
நெஞ்சுக்குள்ளும் நீதானே!'

அவன் பதில் இதம் தரும்.
நெஞ்சு மலர கண் விரியும்.
கண்கள் வழியே காதல் வழியும்.

'கண்களின் வழியே
காதல் செய்தோம்! வாடி
கண்களின் ஒளியில்
நம்மை நாம் தேடுவோம்!
நீ என்னைத் தேட
நான் உன்னை தேட
நமக்குள் நாமாகி
நம்மை நாம் தேடுவோம்!'

அவன் கண்களில் எரியும் தாகத் தீ
அவள் கண்களில்
தெரியும் மோகத் தீ

பார்த்தாள் - பார்த்தான்
பற்றியதே!
கண்கள் வழியே
தாவிய தீ
தேகம் எங்கும் பரவியதே!

இதழ்கள் நான்கு ஒன்றாகும்
இடையே காற்றும் செல்லாமல்
இருவர் ஒன்றாய் உருமாற
தடையே இல்லாத் தீ எரியும்!

'தீயே தீயே அணையாதே
தென்றல் காற்றே நுழையாதே
பொழுதே பொழுதே போகாதே
மெழுகாய் உருகத் தடுக்காதே'
தீக்குள் எரிபவள் தீயை நேசிப்பாள்.

கண்கள் உயர்த்தி
அவள் கண்கள் வழியாக
குறிப்பறிந்தான்!

கண்கள் கொஞ்சின
கண்கள் கெஞ்சின
கண்கள் பேசின!

'பிரியாதே பிரியாதே
எரியும் தீயில்
சந்தன விறகின்
சாம்பலாய் ஆவோம்!
உயிரே! உயிரே
பிரியாதே!'

கண்கள்
கட்டளையிட்டன!
கண்களே நன்றி
கண்களுக்கு நன்றி!

இதழ்கள் ஏந்த மறுக்கும்
சரச மொழிகளை யெல்லாம்
கண்கள்தானே கடத்தி வருகின்றன!

உதடுகள் ஒளித்து வைக்கும்
உள்ளத்து எண்ணங்களையெல்லாம்
கண்கள்தானே காட்டித் தருகின்றன!

கண்களே நன்றி
கண்களுக்கு நன்றி!
கண்களே ஜன்னல்
கண்களே கதவு!

ஜன்னலைத் திறக்கத் தெரிந்தவர்கள்
மனதைப் படிக்கிறார்கள்!
கதவைத் திறக்க முடிந்தவர்கள்
உள்ளே புகுந்து கொள்கிறார்கள்!

மறுநாள் விடிந்ததும்
அவள் சொன்னாள்
"என்றாலும் நீங்கள்
பேராசைக்காரர்!
விடிவதைக்கூட விரும்பாமல்
இப்படியா அடம்பிடிப்பார்களாம்!"

அவன் நகைத்தான்!
'என்ன நகைப்பு?
மனதில் என்ன நினைப்பு?

அவன் சொன்னான்
'கண்களை நினைத்தேன்
கண்கள் கேட்ட
வரத்தினை நினைத்தேன்!'

'என்ன வரம்? அது
என்ன வரம்?'

அவள் கேட்கவில்லை
அவளுக்குத் தெரியும்.

கண்களால் ஆசை சொல்லி
கண்ணாளா பிரியாதே
விடியும் வரை விலகாதே என்று
கண்களால் அவள்
கேட்ட வரம்!

"பொன்னினால் பெண்மை உடைத்தென்ப
-கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு"
அதிகாரம்: 128 - குறள்: 1280




**சிந்தியா! கூட்டமைப்பின் வெற்றி தொடர்பில் உமது கருத்து என்ன?**


**சி.அரவிந்தன், அச்சுவேலி.**

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து சிலரின் அரசியல் இலாபங்களுக்காக வளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இனரீதியான கருத்தாக்கங்கள் இப்பொழுது விருட்சமாகி நிற்கின்றது. இதனால், காலமாற்றத்திற்கு இசைந்து சிந்திக்கின்ற மாற்றுக் கருத்துக்கள் காதுகளில் ஏற்க மறுக்கின்ற எமது சூழலில் கூட்டமைப்பின் வடக்கு மாகாண வெற்றி பெரியளவில் ஆச்சரியத்தை ஏற்படுத்தப்படவில்லை.

**சிந்தியா! வடக்கில் ஈ.பி.டி.பி.க்கு இப்படியொரு பின்னடைவு ஏற்படும் என நான் எதிர்பார்க்கவில்லை! நீர்?**

**எம்.சாந்தினி, அநுராதபுரம்.**

நான், நீர் மட்டுமல்ல; கூட்டமைப்பினர் கூட முடிவு இப்படி இருக்குமென்று எதிர் பார்க்கவில்லைத்தான். அமைச்சரின் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள் என்பன சவாலாக இருக்குமென்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் மக்களின் எதிர்பார்ப்புக்கள் வேறுவிதமாக அமைந்து விட்டன.



**சிந்தியா! ஐ.பி.எல். போட்டிகளில் நிர்ணயச்சதியில் நம்மவர் திஸரப் பெரேராவின் பெயரும் சிக்கியிருக் கிறதே?**

**அ.சயந்தன், அம்பாந்தோட்டை.**

ஐ.பி.எல். தொடரின்போது, புனேவாரியஸ் அணிக்கெதிரான போட்டியின்போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக சன் ரைசர்ஸ் அணியைச் சேர்ந்த மூவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதில் இலங்கை வீரர் திஸரப் பெரேராவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே.

ஆனாலும் குறித்த போட்டியில் திஸரப் பெரேராவின் ஆக்ரோஷமான பந்து வீச்சின் மூலம் சன் ரைசர்ஸ் அணி வெற்றி பெற்றிருந்தது என்றவகையில் பெரேரா மீதான குற்றச்சாட்டு வலுவிழக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

**சிந்தியா! பொதுநலவாய மாநாட்டில் இந்தியாவின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?**

**ஆர்.பர்மிலா, சாவகச்சேரி.**

இந்தியப் பிரதமர் பங்குபற்ற வேண்டுமென்பதுதான் இலங்கை அரசின் விருப்பமாக இருக்கிறது. நம்ம முதலமைச்சர் விக்னேஸ்வரனின் விருப்பமாகவும் இருக்கிறது. பிராந்தியத்தில் செல்வாக்கு மிக்க இந்தியதேசம் எம்முடன் நெருங்கிச் செயற்படுவது சிறப்பாக இருக்கும் என்பதால் அனைவரது விருப்பமும் அதுவே. இந்தியாவின் விருப்பமும் பெரும்பாலும் அதுவாகவே இருக்கும்.

**சிந்தியா! மத்திய மாகாண தேர்தலில் மலையக மக்களின் தீர்ப்பு பற்றி உமது கருத்து என்ன?**

**சா.நீலவேணி, ஹட்டன்.**

மலையக மக்கள் தமக்கே இருக்கின்ற வாக்குரிமை மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். தங்களது எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்தும் ஆயுதமாக வாக்குகளைப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். மலையகத்தின் இன்றைய தலைமுறையினர் தங்களுக்கான அரசியல் த்லைமைத்துவத்தில் மாற்றத்தை விரும்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதையெல்லாம் மிகவும் சூட்சுமமாக மத்திய மாகாண சபை தேர்தலூடாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்...

**சிந்தியா! ஒரு நடிகன் நடிகைக்கு கொடுக்கும் முத்தத்திற்கும் கணவன் - மனைவிக்கு கொடுக்கும் முத்தத் திற்கும் என்ன வித்தியாசம்?**

**மா.சிந்துஜன், காலி.**

நடிகன், நடிகைக்கு கொடுக்கும் முத்தம் என்பது உணர்ச்சியில்லாத இதழ்களின் ஐக்கியம். கணவனால், மனைவிக்கு கொடுப்பது உணர்ச்சி கலந்த இதழ்களின் ஐக்கியம்!

**சிந்தியா! நம்ம பெண்களும் மார்புப் பகுதியில் பச்சை குத்தும் அநாகரிகத்தில் ஆர்வம் காட்டுகின்றனரே..?**

**சா.அஜந்தன், திருநெல்வேலி.**

நாகரிக மாற்றம் என்பது காலத்திற்கு காலம் தனது எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டே செல்கிறது. இந்த உலகப் போக்கிற்கு இசைந்து எமது கலாசார ஜன்னல்கள் திறக்கப்படவேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து ஏதும் கிடையாது.

ஆனால் அவை ஸ்ரீளங்களுடைய அடிப்படை பெருமைகளையும், விழுமியங்களையும் அடித்துச்செல்லாதவகையில் பார்த்துக்கொள்ளவேண்டியது எங்களின் கடமையாகும். இல்லாத பட்சத்தில் ஏனையவர்களுக்கும் எங்களுக்குமிடையிலான இடைவெளி இல்லாமலே போய்விடும்.




ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூகள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# காதிலை பூ கந்தசாமி



**ஒபாமா:** ஹலோ! நீர்தான் பஷால் அல் அஷாத் என்பவரோ?
**அஷாத்:** நீர்தான் பராக் ஒபாமா என்பவரோ?
**ஒபாமா:** கர்வத்துடனா பேசுறீர்?
**அஷாத்:** இல்லை. இதன் பெயர்தான் கௌரவம்!
**ஒபாமா:** ஏற்கனவே வாங்குகின்ற அடி போத வில்லை போலும்.
**அஷாத்:** ஹ்ஹஹ.... அடிவாங்க வாங்கத்தான் இரும்பு ஈட்டியாகிறது. என்பதை நீர் அறிய வில்லைப்போலும்.
**ஒபாமா:** அஷாத்! எங்கள் ஆயுதபலம் தெரி யாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்!
**அஷாத்:** மிஸ்ரர் ஒபாமா! எங்களில் ஆத்ம பலம் புரியாமல் நீர் துடித்துக் கொண்டிருக்கிறீர்.
**ஒபாமா:** எங்களின் ஆயுதபலத்தின் முன்னால் உங்களின் ஆத்மபலம் என்னவாகும் தெரியுமா?
**அஷாத்:** வியட்னாமிற்குப் போய் துண்டைக் காணோம், துப்பாக்கிக் குண்டைக் காணோம் என்று ஓடிவந்த உங்கள் முன்னோர்களிடம் கேட்டுப்பாருங்கள்! எத்தனையோ தடைகள் போட்டும் நிமிர்ந்து நிற்கும் கியூபாவிடம் தோற்றுப்போயிருக்கும் உமது சி.ஐ.ஏ ஆட்களிடம் கேட்டுப்பாரும்! ஒரு நாட்டையே நாசம் செய்துவிட்டு வெறுங்கையுடன் ஈராக்கில் இருந்து வந்திருக்கும் உமது படைகளிடம் கேட்டுப்பாரும். தினமும் ஆப்கானில் செத்துக்கொண்டிருக்கும் உமது வீரர்களிடம் கேட்டுப்பாரும்! ஆயுத பலமா?, ஆத்ம பலமா? பெரிது என்று அவர்கள் உமக்குப் பதில் சொல்வார்கள்.
**ஒபாமா:** கழுகுக்கு கோவம் வந்தால் என்ன நடக்கும் தெரியுமா?
**அஷாத்:** ஆக்கிரமிப்பு ஆசை வரும்! மனித இரத்தத்தின்மீது ஈர்ப்புவரும்! உலகை அடக்கியாளும் திமிரும் வரும்! ஆனால் வட்டமிடும் கழுகை சுட்டுவிழுத்தும் துணிச்சலும், வலுவும் எம்மிடம் இருப்பதால் அந்த ஆசைக்கும் திமிருக்கும் அழிவும்வரும்.
**ஒபாமா:** நாங்கள் நினைத்தால் ஒரு நொடிக்குள் உங்கள் ஆட்டம் முடிந்துவிடுமே.
**அஷாத்:** நொடிக்குள் முடிக்க முடிந்தால், ஏன் கூட்டாளி நாடுகளுக்கு ஓடியோடி மந்திர ஆலோசனை நடத்துறீர்? ஒண்டிக்கு ஒண்டி மோதிப் பாத்திருக்கலாமே?, உடைபடுவது யார் மூக்கென்று சோதித்திருக்கலாமே?
**ஒபாமா:** மிஸ்ரர் அஷாத்! ஒண்டிக்கு ஒண்டி மோதிப்பாக்க இது என்ன தெருச்சண்டையா? பிக் பைட் மோன்! ஜேஸ் பிக் பைட்!
**அஷாத்:** இது பிக் பைட் அல்ல. குக் பைட்.
**ஒபாமா:** வட் டு யூ மீன்? வட் குக்! வட் பைட்?
**அஷாத்:** உலகத்தை ஏமாற்ற நீங்கள் "குக்" பண்ணிய காரணங்களை வைத்து நடக்கும் சண்டை! வெள்ளை மாளிகை என்ற சமையலறையில் பொய்களை கமகமவென தாளித்துப் போடுகிறீர்கள்! இதுதான் குக் பைட்!
**ஒபாமா:** போதும் நிறுத்தும்! உம்மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏராளம்.
**அஷாத்:** குற்றச்சாட்டுக்களா! அவை என்ன, எடுத்துவிடும் பார்க்கலாம்?
**ஒபாமா:** இரசாயன ஆயுதங்கள் வைத்திருக்கிறீர்கள்!, மக்களுக்கு நீதி மறுக்கிறீர்கள்!, நீதி கேட்பவர்களுக்கு இரசாயனக் குண்டை அடிக்கிறீர்கள்!, தீவிரவாதத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் ஒத்துழைக்கிறீர்கள்! இவையெல்லாம் குற்றங்கள் அல்லவா?



**அஷாத்:** நாங்கள் மக்களை கொல்கின்றோம்? உம் ஏவலாளர்களிடமிருந்து எங்கள் மக்களை பாதுகாக்கின்றோம். நயவஞ்சகமாக உம்மவர்கள் ஏவிய இரசாயனக் குண்டுகளில் செத்துமடிந்த நம் இனத்தை காத்துநிற்கின்றோம்! ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும், லிபியாவிலும் செத்து மடிந்த அப்பாவிகளின் உயிர்களுக்கெல்லாம் கொள்ளிவைத்த நீங்கள், என்ன முகத்துடன் ஏனையவர்களை கேள்வி கேட்கிறீர்கள்?
**ஒபாமா:** நாங்கள் வல்லரசு!
**அஷாத்:** நீங்கள் வல்லரசு என்றால் வல்லரசுகளால் விழுங்கப்படாமல் வாழ விரும்பும் அரசு நாங்கள்!
**ஒபாமா:** இந்தச் சமாதானங்களளெல்லாம் எங்களுக்கு வேண்டாம். இரசாயனக் குண்டுகள் பாவிப்பதை நிறுத்தும்! இருப்பவை எல்லாவற்றையும் அழித்துவிடும்! உம்மிடமிருக்கும் ஆயுதங்களின் விபரங்களைக் கூறும்?

# இலக்கிய இராட்சஸன்



தனக்கு 500 குழந்தைகள் என்று புகழ்ச்சியாகச் சொல்லிக் கொண்ட இவர், 1,200 மகத்தான இலக்கியங்களைச் சிருஷ்டித்திருக்கிறார்.

அசாதாரணமான சக்திகளை உடையவனைத்தான் ராட்சஸன் என்று சொல்லுவோம். இதோ ஓர் இலக்கிய ராட்சஸன்!

ஆம், ஒரு புகழ்பெற்ற இலக்கிய மேதை, பல நூற்றாண்டுகளாக அவரது நூல்களை உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் பரம்பரை பரம்பரையாகப் படித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள், வருகிறார்கள், இனியும் படிக்கப் போகிறார்கள். சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த கதாபாத்திரங்களைச் சிருஷ்டித்த ஒரு ஒப்பற்ற கலைஞர் இவர்.

எந்த இலக்கிய கர்த்தாவும் தன் வாழ்நாளில் அடைய முடியாத அளவு செல்வத்தை அடைந்தார் இவர். ஒரு மில்லியன் பவுண்கள்! உலக சரித்திரத்திலே ஒரு சில எழுத்தாளர்களே இந்த இலட்சியத் தொகையை அடையும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதுவும் இந்த ராட்சஸன் வாழ்ந்த காலத்தில் ஒரு மில்லியன் பவுண்கள் என்றால் அது குபேர சம்பத்து!

ஆனால் இவரது முதல் நாடகம் மேடைமீது அரங்கேற்றப்படும்போது இவர் நிலை எப்படி இருந்தது தெரியுமா? மகாகேவலமாக, வறுமை இவரை வாட்டிப் பிழிந்துகொண்டிருந்தது. பசியும் குளிரும் இவரைப் பாடாகப்படுத்தின.

ஒரு எழுத்தாளனின் வாழ்விலே மகத்தான, மகிழ்ச்சிகரமான வேளை, அவன் தனது சிருஷ்டியை மக்கள் முன்னிலையில் கொண்டு வைத்து, அதை அவர்கள் பாராட்டும்போதுதான் ஏற்படுகிறது. அத்தகைய ஒரு சந்தர்ப்பம் இந்த ராட்சஸனுக்கு ஏற்பட்டது. இவர் எழுதிய நாடகம் முதல் முதலாக நடிக்கப்பட இருந்தது. நாடகக் கொட்டகைக்கு அணிந்துகொண்டு போக இவரிடம் நல்ல உடை இல்லை. முதல் நாள் இரவே தனது கந்தலாடையைக் கைகளால் அழுத்தி ஒரு மாதிரியாக இஸ்திரிபோட்டு வைத்திருந்தார்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(26.09.2013 தொடக்கம் 02.10.2013 வரை)

## மேடம்

புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். வெளிநாடுகள் சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். சொத்து சம்பந்தமான விசயங்களில் சாதகமான நல்ல முடிவுகள் பெரியவர்களின் தலையீட்டால் கிடைக்கும். தீராத நாட்பட்ட நோய்களுக்காக மருத்துவச் செலவுகளைச் செய்யும் பொருட்டுப் புதிய கடன்வாங்குவீர்கள். கடன் கொடுத்து இருந்த நீண்டகாலமாக வராத பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். பொதுவாக இது ஒரு மனஆறுதலைத் தரும் வாரமாகும்.

## துலாம்

தாயின் உடல் பாதிப்புக்களால் மன உளைச்சலும் பொருட்செலவுகளும் உண்டாகலாம். கொடுக்கல் - வாங்கல் சம்பந்தம் ஆகிய பிரச்சினைகளில் உறவினர்களின் தலையீடுகளால் ஓரளவு மனநிம்மதி அடைவீர்கள். மனத்தைரியமுடன் எடுத்த காரியங்களைச் சற்று முயற்சியுடன் செய்துமுடிப்பீர்கள். பொதுக் காரியங்களில் தலையிட்டு நற்பெயர் புகழடைய வாய்ப்பு உள்ள காலமாகும். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல முடிவுகள் வந்துசேரும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்துவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள்.

## இடபம்

தந்தை - மகன் உறவுகளில் விரிசல்கள் ஏற்படுவது விலகும். புதிய நபர்களிடம் எச்சரிக்கையுடன் பேசிப் பழகவும். புதிய வீடு, நிலம் வாங்குவதற்காகப் போட்டிருந்த திட்டங்களில் சற்றுப் பின்னடைவு ஏற்படலாம். குடும்பத்தில் காரணமற்ற குழப்பங்களும் மனச்சஞ்சலமும் ஏற்பட இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலை விலைக்கு வாங்காதீர்கள். வெகுகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்த பூர்வீகச் சொத்துக்கள் சட்டபூர்வமாக கைக்கு வந்துசேரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். வங்கிகள்மூலம் புதிய வீடு, நிலங்கள் வாங்குவதற்கான எண்ணங்கள் சற்றுக் கால தாமதமாகவே நிறைவேறும். நாட்பட்ட தீராத நோய்கள் தீரவேண்டிப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நல்லபலன் அடைவீர்கள். அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப் பழகிவிட்டுக் கொடுத்துப் போகுவதன்மூலம் மனம் நிறைவடைவீர்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற விசயங்களுக்காகப் புதிய முயற்சிகளில் தலையிட்டு வெற்றிபெறுவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

தோல் சம்பந்தமான பொருட்களின் வியாபாரிகள், பலசரக்கு, இயந்திரம், கம்யூட்டர், மின்சாரப் பொருட்களின் வியாபாரிகள் மற்றும் இவைகளில் பணிபுரிவோர்கள், கமிசன், ஏஜென்சி போன்ற தொழில்செய்வோர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள். தேவையில்லாத புதிய நண்பர்களின் தொடர்புகளால் வீண் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளவேண்டாம். உத்தியோக விசயமாகப் பணம் மற்றும் பொருட்களை கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். நீண்டகாலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்த அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும்.

## தனுசு

நண்பர்கள் மற்றும் உறவினர்களால் தேவையில்லாத மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். கொடுக்கல் - வாங்கலில் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. நண்பர்களுடன் பணப் பிரச்சினைகள் சம்பந்தமாக மனக்கசப்புகள் ஏற்படலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் கிடைக்கும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த உதவித்தொகைகள் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுப்பணிகளில் பங்குகொண்டு மனநிம்மதி அடைவீர்கள். பயணங்களின் மிகுந்த கவனமுடன் இருக்கவும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும்.

## கடகம்

வராத பணம் மற்றும் பொருட்கள் பெரிய மனிதர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் நினைத்த இடத்திற்கு பணி இடமாற்றமும் ஏற்படலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணத் தகவல் மையங்கள் மற்றும் நண்பர்களின் உதவிகளால் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. அநாதைச் சிறுவர்களுக்கு உதவுவதில் மனநிறைவை அடைவீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வெகுதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். பழுதுபட்ட ஆலயங்கள் மற்றும் வீடு, வாகனங்களைப் புதுப்பிப்பதற்கான பணிகளில் ஈடுபடுவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மகரம்

ஒரு சிலருக்கு கணவன் - மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். பூமி, நிலம் சம்பந்தமான வழக்குகள் மற்றும் பிற வழக்குகளில் இருந்து விடுதலை கிடைக்கும் காலமாகும். குடும்பச் சொத்து விசயங்களில் வழக்கு சம்பந்தமான முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடுதல் உகந்ததாகும். சகோதர சகோதரிகளால் சிற்சில நன்மைகள் வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் மிகவும் கவனமுடன் பயின்றுவருதல் நல்லதாகும். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுத் தொண்டுகளில் கவனமுடன் பணியாற்றுவது சிறந்தது. குழந்தைகளுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கும் காலமாகும். குடும்பத்தில் காரணமில்லாத மனக்கசப்புகளும் மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம்.

## சிங்கம்

மற்றவர்களை நம்பிப் பணம் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். சம்பந்தமில்லாத நபர்களின்மூலம் பொருள்வரவுகள் உண்டாகும் வேலையில்லாதவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளது. சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. புதிய வீடு, வாகனங்களை வாங்க வாய்ப்பு உள்ளது. பொருளாதாரம் சுமாராகக் காணப்படும் இதுநாள்வரையில் தடைப்பட்டு வந்த காரியங்களை மனத்தைரியமுடன் சற்றுப்பிரயாசையுடன் செய்துமுடிப்பீர்கள். பழைய கொடுக்கவேண்டிய கடன்களால் மீண்டும் தொல்லைகள் வந்துசேரும்.

## கும்பம்

உடல்நிலையில் கண், காதுகளில் கவனம் தேவை. குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வந்துபோகும். பெண்களிடம் கவனமாகப் பேசி பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளை தவிர்க்கலாம். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் நிம்மதி உண்டாகும். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும் மருத்துவச்செலவுகளும் உண்டாகலாம். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நல்மையைத் தரும். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். காதலர்களுக்கு இடையில் கருத்து வேற்றுமை தோன்றும் பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் செய்து ஏமாற்றம் அடையாதீர்கள். புதிய தொழில்செய்வதற்கான முயற்சிகளில் வங்கிகளில் இருந்து நல்ல தகவல்கள் கிடைக்கும். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய விவசாயங்களின் மூலம் எதிர்பாராத நல்ல இலாபம் அடைவீர்கள். தந்தை - மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீரும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன்மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். குழந்தைகளின் மன மகிழ்ச்சிக்காக வெகுதூர உல்லாசப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். உத்தியோகத் துறையினர்களுக்குப் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் உண்டாகும்.

## மீனம்

பொருளாதாரத்தில் இதுவரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி மனநிம்மதியும் சந்தோசமும் அடைவீர்கள். இதுவரையில் நெருக்கடியில் இருந்துவந்த பணத்தட்டுப்பாடுகள் நீங்கிப் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். வெளிநாடு சென்று வருதல் சம்பந்தமான ஏஜன்சி தொழில் செய்வோர் கவனமுடன் செயற்படவும். குலதெய்வ ஆலய வழிபாடுகளை செய்துவருவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர்வரவுகளால் பொருள் வரவும் மனமகிழ்ச்சியும் வந்துசேரும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு மனநிம்மதி தரும் வாரமாகும்.




மனித சமுதாயம் தமக்குள்ளே வரைந்து வைத்திருக்கின்ற இன மத சாதிய வரைய றைகளை எல்லாம் தாண்டி நிற்பது அன்பு, பாசம், காதல் போன்ற உணர்வுகளாகும். அன்பும் பாசமும் நம்முடன் நெருங்கிச் சல்லாபிக்கின்ற அனைத்து உயிரினங்கள் மீதும் ஏற்படக் கூடிய புனிதமான உணர்வுகள். இங்கே செல்லமாய் வளர்த்த யானை ஒன்று பரிதாபமாய் உயிரிழந்து கிடப்பதைக் கண்ட உரிமையாளர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சுத்தியிருந்து ஒப்பாரி வைத்து இறுதி மரி யாதை செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். இங்கே உணர்ச்சிகள் எல்லையை மிஞ்சி நிற்கின்றன.








இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மிஸ் நியூயார்க் அழகி நினா தவுலூரி, மிஸ் அமெரிக்கா பட்டத்தை வென்று புதிய சாதனை படைத்துள்ளார்.

டேலன்ட் பிரிவு போட்டியின்போது நினா பாலிவுட் ஸ்டைலில் பாட்டுப் பாடி டான்ஸ் ஆடி கலக்கியுள்ளார்.

மிஸ் அமெரிக்கா பட்டத்தை வென்ற முதல் இந்திய வம்சவாளி அழகி இவர்தான். மேலும் இந்தப் பட்டத்தை தொடர்ந்து 2வது ஆண்டாக நியூயார்க் அழகி வென்றுள்ளார்.

மொத்தம் 53 போட்டியாளர்கள் இதில் கலந்து கொண்டனர். இதில் நினாவுக்கு வெற்றி கிடைத்துள்ளது. நியூயார்க்கைச் சேர்ந்த மலோரி ஹேகன் கடந்த ஆண்டு மிஸ் அமெரிக்கா பட்டத்தை வெனயண்றிருந்தார். இப்போது இந்த முறையும் நியூயார்க்குக்கே பட்டம் போயுள்ளது.

மிஸ் அமெரிக்கா அழகிப் பட்டத்தை இதுவரை இந்திய அழகி யாருமே வென்றதில்லை. இப்போதுதான் முதல் முறையாக இந்த சாதனையைப் படைத்துள்ளார் நினா.






பல்கேரியாவை சேர்ந்த Jane Petkov எனும் 59 வயதான நபர் வினோதமான உலகசாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதாவது தனது கைகள் இரண்டையும் கட்டி, உடல் முழுவதையும் பேக் ஒன்றினால் மூடிவாறு கடலில் நீண்ட தூரம் நீச்சலடிப்பதாகும்.

தற்போது சராசரியாக மணிக்கு 0.7 கிலோமீட்டர்கள் வேகத்தில் நீந்தும் இவர் 2 கிலோ மீட்டர்கள் வரை நீந்தியுள்ளார். எனினும் தன்னால் 10 கிலோமீட்டர்கள் வரை நீந்த முடியும் என தன்னம்பிக்கை கொண்டுள்ளார்.

உலகின் மிகச் சிறிய காரை வடிவமைத்துள்ள அமெரிக்கர், அதை சாலையில் ஓட்டிச் சென்று, கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் தன் படைப்பை இடம் பெறச் செய்துள்ளார். அமெரிக்காவை சேர்ந்த, ஆஸ்டின் கால்சன், கார் வடிவமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

வித்தியாசமான பல கார்களை வடிவமைத்துள்ள இவர், ஏதேனும் புதுமை படைக்க வேண்டும் என்ற ஆவலில், சிறிய ரக காரை வடிவமைத்துள்ளார். இதன் பலனாக, 25 அங்குல உயரமும், நான்கு அடி நீளமும் உடைய சிறிய ரக காரை வடிவமைத்துள்ளார்.







கர்ப்பிணியாக நாடகமாடி போதைப் பொருளை கடத்த முயன்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கொலம்பியாவில் உள்ள போகோடோ விமான நிலையத்தில் வைத்தே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். றொரண்டோவை சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்க பெண், கர்ப்பிணி போன்று நாடகமாடி, 2 கிலோகி ராம் உடைய போதைப் பொருளை கடத்த முயன்றார்.

ஏர் கனடாவி மானத் தில் ஏற முயன்ற போது, பொலிஸ் அதிகாரி ஒருவர் சந்தேகமடைந்து குறித்த பெண்ணை சோதனையிட்ட போது தான் உண்மை தெரியவந்தது. இதனையடுத்து கைது செய்யப்பட்ட பெண் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். விசாரணையில், கடந்த மாதம் 6ம் திகதி கொலம்பியாவுக்கு வந்துள்ளார் என்றும், சமூக ஆர்வலர் என்பதும் தெரியவந்துள்ளது.






உலகில் உள்ள அனைத்து கலை களிலும் மிக பிரபலமான கலை ஓவியக் கலை தான்.

கொரியாவை சேர்ந்த ஹாங் ஹுன்(kang- hoon) என்ற கலை ஞரும் ஓவியத்தில் புதுமை படைத்தவர்களில் முக்கிய இடம் பெறுகிறார்.

இவர் வரைந்த ஓவியங்கள் பார்ப்பதற்க்கு கமெரா மூலம் எடுத்த புகைப்படம் போலவே இருக்கும், ஆனால் உண்மையில் இது ஆயில் பெயின்டிங் தான்.



